# அன்புமலர்.

சி. மு. முத்தையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800.0179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUM

# ANPUMALAR

WITH

## SELECTIONS FOR PRAYER

In Memory of his Beloved Mother

UTHUCUMARU ANNAPOORANI

BY

**S. M. MUTHIAN**

Scholar of
Astronomy, Astrology, Nyaya Visesika Philosophy
Siva Sithantha & Tamil Literature

AUTHOR OF
**High Ways of Astronomy**
&
**Dravadian Philosophy**

All Rights Reserved.

January 1954.

The Navalar Press, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்சிறந்த அன்னை

**முத்துக்குமாரு அன்னபூரணி**

அவர்களின் நினைவாக

**வெளியிடப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# அன்புமலர்

(பாராயணத்திரட்டுடன்)

விஜய ஆண்டு

தைத்திங்கள்

சி. மு. முத்தையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

(1) **சாற்றுகவி**

உயர்திரு. பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள்

(2) **முதவுரை.** உயர்திரு. சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்.

(3) **அணிந்துரை.** (ஒழிபியல்முகவுரை)

உயர்திரு பண்டிதர் சி. கணபதிப்பிள்ளையவர்கள்

(4) முன்னுரை ஆக்கியோன்

(5) கடவுள் வணக்கம்

(6) அன்பியல் பக்கம் 1 முதல் 45 வரை

(7) அறஇயல் ,, 46 ,, 83 ,,

(8) ஒழிபியல் ,, 84 ,, 148 ,,

## அன்பியல்

| பந்தி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அன்பேசிவம் | 1 |
| 2. | அன்புவிளக்கம் | 2 |
| 3. | பற்றுக்கள் | 4 |
| | தீயபற்றுக்கள் தேவை ஆசை | 6 |
| | மண்ணாசை பெண்ணாசை | 7 |
| | பொன்னாசை | 8 |
| | பிரேமை பித்து | 9 |
| 4. | சாமானியம் | 12 |
| 5. | சமவாயம் | 12 |
| 6. | சம்யோகம் | 13 |
| 7. | நித்தப்பொருள் | 14 |
| 8. | வேட்கைப்பற்று | 15 |
| 9. | காதல் | 15 |
| 10. | மூவகை அன்பு | 17 |
| 11. | தலையன்பின் மெய்ப்பாடு | 17 |
| 12. | பேரானந்த வெள்ளப் பெருக்கம் | 18 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பந்தி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 13. | இடையன்பு | 19 |
| 14. | சாவிற்சாதல் | 21 |
| 15. | வேட்கை | 22 |
| 16. | ஒருதலையுள்ளுதல் | 22 |
| 17. | மெலிதல் | 25 |
| 18. | ஆக்கஞ்செப்பல் | 26 |
| 19. | நாணுவரையிறத்தல் | 28 |
| 20. | நோக்குவவெல்லாம் அவையேபோறல் | 28 |
| 21. | மறத்தல் | 30 |
| 22. | மயக்கம் | 31 |
| 23. | சாக்காடு | 32 |
| 24. | நோவின்நோதல் | 33 |
| 25. | ஒண்பொருள் கொடுத்தல் | 35 |
| 26. | நன்கினிது மொழிதல் | 37 |
| 27. | நலம்பாராட்டல் | 38 |
| 28. | புணர்வு நனிவேட்டல் | 39 |
| 29. | பிரிவுநனியிரங்கல் | 40 |
| 30. | கடையன்பு | 42 |
| 31. | தலையன்பு மரபுதிரிதல் | 42 |
| 32. | இடையன்பு மரபுதிரிதல் | 42 |
| 33. | சாவிற்சாதலின் திரிபு | 42 |
| 34. | நோவின் நோதலின் திரிபு | 43 |
| 35. | ஒண்பொருள் கொடுத்தலின் திரிபு | 43 |
| 36. | நன்கினிது மொழிதலின் திரிபு | 44 |
| 37. | நலம்பாராட்டலின் திரிபு | ,, |
| 38. | புணர்வு நனிவேட்டலின் திரிபு | , |
| 39. | பிரிவுநனி யிரங்கலின் திரிபு | ,, |
| 40. | மறமும் அறமும் | ,, |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவியல்.


| பந்தி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அறநிலைப்பகுதி | 46 |
| 2. | அறம் | 49 |
| 3. | பசு அறம் | ,, |
| 4. | பதி அறம் | 50 |
| 5. | பதியின் ஐந்தொழில் | ,, |
| 6. | ஐங்கிரியையின் நோக்கம் | 51 |
| | தூலம், சூக்குமம். காரணம் | |
| | கூடத்தம்பம் பிரமம் | 52 |
| 7. | மகாபஞ்சகிருத்தியம் | 53 |
| 8. | நித்திய பஞ்சகிருத்தியம் படைத்தல் | 54 |
| | தனு, கரணம், புவணம், போகம் | 55 |
| | காத்தல், மறைத்தல் அழித்தல் அருளல் | 56 |
| 9. | பசு, பதி, பாசம் | 57 |
| 10. | பதிலட்சணம் | |
| | திருவெழுகூற்றிருக்கை | 58 |
| 11. | பசுலட்சணம் | 60 |
| 12. | மூவகை ஆன்மா | 61 |
| 13. | ஆறுஆதாரம் | 63 |
| 14. | ஐந்தவத்தை | 64 |
| 15. | சரியை | 66 |
| 16. | கிரியை | 67 |
| 17. | யோகம் | 68 |
| 18. | ஞானம் | 69 |
| 19. | ஆணவம் | 70 |
| 20. | கன்மம் | 72 |
| 21. | மாயை | 74 |
| 22. | ஐந்துகோசம் | 78 |


## ஒழிபியல்.


| | | |
|---|---|---|
| 1. | வைராக்கிய பகுதி | 84 |
| 2. | திருநான்மறை | ,, |
| 3. | துறை | 86 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பந்தி | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 4. | அகத்திணையாவது | 87 |
| 5. | முதற்பொருள் | 89 |
| 6. | பெரும்பொழுது | ,, |
| 7. | சிறுபொழுது | ,, |
| 8. | கருப்பொருள் | ,, |
| 9. | உரிப்பொருள் | 90 |
| 10. | திணைமயக்கம் | 91 |
| 11. | களவுநெறி | 92 |
| 12. | பதிவிரதர்நெறி | 93 |
| 13. | கற்புநெறி | 95 |
| 14. | இன்பத்துறை | 99 |
| 15. | அறமாவது | 100 |
| 16. | பொருளாவது | 101 |
| 17. | அன்பின்புணர்வாவது | ,, |
| 18. | காமக்கூட்டங் காணுதலாவது | 102 |
| 19. | மறையோராவார் | ,, |
| 20. | மன்றல் எட்டாவன | ,, |
| 21. | நல்யாழ்த்துணைமையோரியல்பு | 104 |
| 22. | புறம் | 105 |
| 23. | வெட்சி | ,, |
| 24. | வஞ்சி | 106 |
| 25. | உழிஞை | ,, |
| 26. | தும்பை | ,, |
| 27. | வாகை | 107 |
| 28. | ஐவகைவேள்வி | 109 |
| 29. | கல்வி | 110 |
| 30. | காஞ்சித்திணை | 112 |
| 31. | பாடாண்டிணை | 116 |
| | புரைதீர் காமப்பகுதி | 117 |
| | சிவபுராணம் | 119 |
| 32. | கொடிநிலைகந்தழிவள்ளி | 123 |
| | கோளறுதிருப்பதிகம் | 124 |
| 33. | துயிலெடைநிலை | 127 |
| | திருப்பள்ளியெழுச்சி | 128 |
| 34. | ஆற்றுப்படை | 131 |
| | நக்கீரன் சரித்திரம் | 132 |
| | திருமுருகாற்றுப்படை | 135 |
| 35. | பல்லாண்டு | 147 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலைப்

**பண்டிதர் உயர் திரு.**

## அ. ஆறுமுகம் அவர்கள் அளித்த

# சாற்றுகவி.

---

அன்பே கடவுள்; அன்பே நல்வழி;
அன்பே உடலுயிர்க் காகிய தொடர்பு;
அன்பே சகல ஆற்றலு மாகும்;
அன்பின் ஐந்திணை அகப்பொருள் தழுவி
அளவில் பலநூல் ஆக்கினர் முன்னோர்;
அன்பின் வழிப்படும் இன்பக் கடவுளின்
அருள்வேட் டெழுந்த இத் திருநூ லானது
ஒல்காப் புலமைத் தொல்காப் பியர்தரு
நல்லியல் அகப்பொருள் புறப்பொருள் விரிக்கும்
பொருளிலக் கணத்துக் கிலக்கிய மாகத்
திருமுறை நூல்களைத் தேர்ந்துசித் தாந்தம்
தெரிந்து விரித்துத் தீட்டிய தாகும்;
அருள்மணங் கமழுமிவ் **அன்பு மலரினைப்**
புதுமுறை யாகப் புனைந்தவர் யாரெனில்
தருக்க நியாய சாத்திரந் தெரிந்து
"**திராவிட சித்தாந்தம்**" என்னுமொரு நூலும்
வானூல் சோதிட மாக்கலை பலவும்
தானே கற்று "**வானசாத் திரமும்**"
ஆக்கிய ஆசான் அமைவுறக் கற்றலில்
கற்றவை பிறர்க்குக் கவின்பெற உரைத்தலில்
ஆர்வம் மிகவுடை அன்பர் விவேகி
ஊர்புகழ் உடுநா வளையுயர்ந் திடவரும்
சீர்திகழ் முத்தையச் செம்ம லோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
திருச்சிற்றம்பலம்

# அன்புமலர்.

சுழிபுரம், விக்ரோறியாக்கல்லூரி அதிபராயிருந்து
இளைப்பாறிய சைவப் பெரியார்

**உயர் திரு. சு. சிவபாதசுந்தரம், B. A.**
அவர்கள் நல்கிய

## முகவுரை.

இந்நூலாசிரியர் கற்றலிலும் கற்றதை ஏனையோர்க்கு அறிவித்தலிலும் பேரவா வுடையவர். அன்பைப் பற்றிக் காண்டல் கருத்துரைகளாலே தாம் அறிந்தவற்றை இந்நூலிலே ஆசிரியர் விளக்கிக் கூறுகின்றார். இந்நூலுக்கு அடிப்படையாக அவர் கொண்டது, கடவுள் அன்பே வடிவமாயுடையவர் என்னும் வாய்மையாம். அவருடைய அன்பே எம்மிற் படிந்து எம்மையும் ஈசனிலும்பிறவுயிர்களிலும் அன்புடையவ ராக்குகின்ற தென்பது, அதிலிருந்து ஆசிரியர் பெற்ற அனுமானமாம். அன்பு தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூன்றாக வகுக்கப்பட்டு விளக்கப்படுகின்றது. தலையன்புக்கும் இடையன்புக்கு மிடையே எல்லையிருத்தல் சாலாது அன்றேல் அரிதென்பது இந்நூலிடையே புலப்படுகின்றது. இந்நூலின் இறுதிப்பகுதியிலே சைவசித் தாந்தவாய்மைகள் விளக்கப்படுகின்றன. இதிலே தேவார திருவாசகங்கள் மலிந்துகிடந்து, அன்பொளியை யன்றி அறிவொளியையும் வீசி இந்நூலைப் பெருமைப் படுத்துகின்றன.

**கந்தவனம்,**
கர ஹு ஐப்பசிமீ 20உ

**சு. சிவபாதசுந்தரம்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்.

# அன்புமலர்.

## அணிந்துரை.

(ஒழிபியல் முகவுரை)

திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை

பண்டிதர்

## உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

நல்கியது.

புருஷார்த்தங்களின் வைப்புக் கிரமங்கள், அகம் புறம் என்கின்ற பொருட்பாகுபாடுகள் பெரிதும் சிந்தனைக்குரியவைகள். இவற்றின் அருமையும் இன்றியமையாமையும்.

"நால்வல்லாரைக் கொணர்க என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத்தலைப்பட்டுக்கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேம் என்று வந்தார். வரஅரசனும் புடைபடக் கவன்று என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்."

என்ற **களவியலுரை** வசனத்தால் அறியப்படும். இந் நூலாசிரியர் இவ்வியலின் கண்ணே, புருஷார்த்தங்களாகிய பொருட்பாகுபாடுகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலும் திருமுறைகளிலும் வைத்து இலக்கண இலக்கியமுகமாக அன்பு வழியில் ஆராய்ந்திருக்கின்றார். அன்பர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் இவ்வியல் ஒரு பொக்கிஷம்.

சைவாசிரிய கலாசாலை,
திருநெல்வேலி,
20-12-52.

**சி. கணபதிப்பிள்ளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# அன்புமலர்.

## முன்னுரை.

அடியேன் மலாய்நாட்டில் இருந்தபொழுது எமது சைவ சமயிகள் பலர் சமயவாதஞ் செய்தார்கள். அவர்களிற் சிலர் புறச்சமய மயக்கமுடையவர்களாயுங் காணப்பட்டனர். அன்னோரின் சமயவாதத்திற்கு பூரணசமாதானம் சொல்லுவது முடியாதகாரியமாக இருந்தது. சைவசமயத்தில் பலதுறைகள் உண்டு. அத்துறைகளையெல்லாம் ஒவ்வொன்றாக அன்னோருக்கு எடுத்து விளக்கியது அனுவசியமான விதண்டாவாதத்திற்குள்ளாக்கியது. இறுதியாக அன்னோர் கேள்விகள்யாவற்றிற்கும், "அன்பே சிவம், அன்பே சமயம், அன்பே கடவுள்" என்று போதனை செய்து ஒருவாறு சமாதானங் கூறினேன். அன்புமலர் என்னும் இச்சிறுநூலை எழுதி வெளியிடுவதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாம்.

அன்பே சைவசமயத்தின் அடிப்படையான கொள்கை என்பதை எவரும் உணர்ந்தால் அவர்களுடைய வாழ்க்கை, இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயனைத் தரும்.

இறைவன் அன்புமயமாக உள்ளவன், அன்பர்க்கெளியன், ஆனந்த சொரூபி, ஒளிவடிவாய் ஓங்காரத்துக்கு மப்பாற்பட்டவன், சாமகானப்பிரியன், இன்னிசை வீணையில் இசைந்தவன், அவன் நலங்களைப் பாராட்டித் துதிப்பதை உவந்து கேட்டருளிச் சித்தி முத்திகளைக் கொடுப்பன். அவன் அன்பைப் பெறுவதற்குச் சாதனமாகவே திருமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அன்பாக ஓதி அவன் அருளைப் பெறுமின்.

நாம் செய்யும் ஒவ்வொரு கருமமும் ஒரு பிரதிபலன் தருவது நற்செய்கைக்கு நற்பலனும், தீச்செய்கைக்குத் தீய பலனும் முடிவுறும். நாம் இறைவனைத் தியானம் செய்வதும், ஆலயங்களுக்குச் செல்வதும், விரதங்கள் அனுட்டிப்பதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோசனமற்ற செய்கை என்பது இன்று பலரின் கருத்து. எம்மில் இருந்து எழும் ஒவ்வொரு எண்ணமும் ஒரு சத்தியைப் பொருந்தியது. அவை எழுந்து பேரண்டத்துப் பொருந்தி யிருக்கும் இறைவனின் திருப்பாதத்தோடு பொருதுவதாகும். இறைவனின் அறக்கிரியை § அவ்வெண்ணத்திற் கேற்ற பலனைக் கொடுக்கும்.

இறைவன் ஆலயங்களில் மூர்த்திவடிவங் கொண்டு வேண் டுவார் வேண்டுவதை ஈயுந் தன்மையனாகஎழுந்தருளியிருப்பன். (ஒழிபியல் பந்தி 3 பார்க்க) ஆலயங்கள் இல்லாத ஊர் அடவி காட்டுக்குச் சமம்.

இதனை,

திருக்கோயி லில்லாத திருவிலூருந்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.

என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஆலயங்களுக்குச் செல்வதினால் இறைவன்ஒருவன் உளன் என்னும் உணர்ச்சியும், புனிதமாகச் சென்று அவனைத் தியானஞ் செய்ய வேண்டும் என்னும் உணர்ச்சியும் தோன்றி மக்களை சரியை, கிரியை, யோக, ஞானமார்க்கங்களில் நெறிப் படுத்தும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறி களும் ஒவ்வொன்றும் நானான்காய்ப் பதினாறாகும். அவற்றில் சரியையாவது:-ஒப்பாசாரமாக்குவது, ஒருசிறு குழந்தையோடு நாம் அன்பு கொள்ளும்பொழுது எம்மை அக்குழந்தையோடு மழலை மொழிந்து ஒப்பாசாரமாக்குகின்றோம், அவ்வாறின்றி

§ அறஇயல் பந்தி 4, 5, 6, 7 பார்க்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு தோன்றாது. அதுபோல் இறைவனோடு அன்பு கொள்வதற்கு எம்மை அவனோடு புனிதமாக ஒப்பாசாரப்படுத்துவது சரியையாம்.

கிரியை:- பதிபூசை செய்தலாம். யோகம்: காப்பனாகத்துக் கடவுளைப் பற்றுங் கற்பு நெறியில் உள்ளது. இவை மூன்றன் மூலம் பெறும் பேரறிவே ஞானமாம். ஞானம், தலையன்பைக் கொடுத்து வீடெய்துவிக்கும். இத்திறத்ததான அன்பு நுதலி வரும்பொருட் பாகுபாடுகளை எடுத்துரைப்பதனை அன்பியல் என வகுத்தனம்.

அன்பைப் பெறுவதற்கு இன்பம்காரணமாக உடையது. துன்பத்தின் உத்தர துருவமே இன்பம் "துன்பமில்லார்க் கின்பமில்லை" யென்றார் பிறரும். துன்பம் தோன்றாத இன்பமே பேரின்பம். அஃதே வீட்டுநெறியு மென்ப. இன்பம் துன்பத்தினிடத்தது என வெறுத்து அறிவதறிந்து நெறிப்படும் பேரின்ப மார்க்கத்தின் பகுதிகளிற்சிலவே அடுத்ததான அறவியலின்கண் கூறப்பட்டன. அன்பியலையும் அறவியலையும் எழுதி முடித்ததும் எமது பெருங்கருணைச்சைவப்பெரியார் **உயர் திரு சு. சிவபாதசுந்தரம்** அவர்களிடம் காட்டி ஓர் முகவுரை தருமாறுவேண்டினம். அன்னார் முகமலர்ந்து நல்கிய முகவுரையின் பின்னர், விஞ்ஞான நெறிக்கும், பிரளய நெறிக்கும் இடையே சில வேறுபாடுகள் தோன்றினமையின் அவற்றின் வேறுபாடுகளை விளக்கும் அறவியலின்கண் கூறு தொழிந்தவையாகிய வையத்து வாழ்வாங்கு வாழும் இல்லற நெறி மூலமடையும் முத்திநெறியின் சிலபகுதிகளை ஒழிபியலென ஒரு இயல்வகுத்துத் தொகுத்தனம். தொல்காப்பியம் பொருளதிகார இலக்கணமும், இறையனார் அகப்பொருள் இலக்கணமும், திருக்கோவையார் முதலிய நூல்களும் சைவ சித்தாந்த வாய்மைகளோடு தொடர்பில்லாதனவென ஒரு சாரார் நம்மோடு வாதிட்டனர். அஃதன்றென மறுத்து விளக்குவதே ஒழிபியலாம்.

தலைவனின் தாள் தலைப்படும் கைக்கிளைக் குறிப்பை உணர்த்தி அப்பர் சுவாமிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தியவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தா
ளகன்று ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என்று கூறிய திருத்தாண்டகமும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

ஒழிபியல் எழுதி முடிந்த பின்னர் அதனையுஞ் சேர்த்து முழுநூலாக வெளியிடுவது எமது சைவப்பெரியாரவர்கள் கருத்துக்குளவ்விதமிருக்குமோ எனஎண்ணி அதையும் நம்பெரியார் பாற் சென்று சமர்ப்பித்தனம். அவற்றைப் பரிசோதிக்க அவரது உடல்நலம் சரியில்லாது இருந்தும் ஒன்று கூறினர்.

"திருமுறைக் கருத்துக்கள் உயர்ந்த மகத்துவமுள்ளவை அவைகளைத் தாழ்ந்தபொருள்களில் அமையாது உயர்ந்த நோக்கங்களில் பெருமைப்படுத்திக் கூறுவதே நூலுக்குப் பெருமைதரும்"

என்பது அவர் திருவாக்கு.

பின்னர் இதனை திருநெல்வேலிச் சைவாசிரியர்கலாசாலைப் பண்டிதர் உயர் திரு சி. கணபதிப்பிள்ளை யவர்களிடம் சமர்ப்பித்தேம். அவர்களும் கண்ணப்பன்பத்தியை மாணிக்கவாசகர் முதலியோரது பக்தியோடு ஒப்பிட்டுக் கூறுதல் சாலாதென மறுத்து இந்நூலை நன்கு ஆராய்ந்து முகவுரை நல்குவதாகச் சொன்னார்கள்.

பண்டிதரவர்கள் கூறியதும் சரியே கண்ணப்பன் பக்தி பிரேம பக்தி யெனப்படும். திருவாசகத்தால் மாணிக்கவாசக சுவாமிகள் கொண்ட அன்பு தலையன்பன்றி பிரேமபக்தியன் றென்பது காணலாம். [அன்பியல் பற்றுக்கள் என்றபந்தியில் பிரேமை விளக்கம் காண்க] மறுநாள் பண்டிதரவர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்தேம். மறுப்பொன்றும் இல்லாது ஒழிபியலுக்கென ஒரு முகவுரை எழுதி வைத்துவிட்டு அவர்கள் சாவகச்சேரிக்குப் போயிருந்தார்கள்.

இந்தநூல் இனிது நிறைவேறுவதற்குப் பலதுறையிலும் உதவியாக இருந்த பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலைப் பண்டிதர் அ. ஆறுமுகமவர்களிடம் "இந்த நூலின் ஒழிபியலை பிரித்து வேறுநூலாக அச்சிடக்கருதியுள்ளேம்" எனத் தெரிவித்தேம். அவர் ஒழிபியல் முகவுரையை அணிந்துரையாக நூல்முகத்தில் உரைத்து, அன்பியல் அறவியல் ஒழிபியல் மூன்றையும் சேர்த்து முழுநூலாக வெளியிடுவதே நன்றெனக் கூறினமையின், அவ்விதமே இந்த நூலை வெளியிடத் துணிந்தேம்.

இந்த நூலில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்ட தேவார திருவாசகங்கள் முதலியன அரைகுறையாக எடுத்துக் காட்டுவது, சமயக்கொள்கைக்கு மாறுனதாதலாலும், அவை ஓதி நெறியெய்துவதற்குரியவையாதலாலும், ஒவ்வொரு அருட்பாவும் முற்றுகக் கூறப்பட்டன. ஆராய்ந்து பொருள்காண்க.

இந்த நூலின்கண் கூறப்பட்டிருக்கும் அருட்பாக்களை அன்பாக ஓதி நெறியெய்துவதே, அடியேம் இந்நூலைப் பிரயாசப்பட்டு எழுதியதன் பெரும்பயன் எனக் கருதுகின்றேம்.

பாராயணத்திற்குரியதிரட்டும் ஒன்று இச்சிறிய நூலுடன் சேர்த்து வெளியிடலானேம்.

உடுநாவலை,
சித்தங்கேணி,
நந்தன ஷூ தை மீ^r

சி. மு. முத்தையன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அன்புமலர்.

திருச்சிற்றம்பலம்

## கடவுள் வணக்கம்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுவரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே.

எங்கேனு மிருந்துன் னடியேனுனை நினைத்தால்
அங்கேவந் தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கேயென் வினையை யறுத்திட் டெனை யாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# அன்பியல்.

## 1. அன்பே சிவம்:—

இறைவன் ஒவ்வொரு பொருளிலும் அன்பு மயமாக நிறைந்திருக்கின்றான். அவன் எம்மிலும் அன்புமயமாக எழுந்தருளியிருக்கின்றான். அதனாற்றான் நாமும் அன்புள்ளவர்களாகின்றோம். உலகமும் அன்பு மயமாகச் சிருட்டிக்கப்பட்டு ஓராற்றுப்படும் அன்பிலே ஒவ்வொன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஒருவகை அன்பினாலேயே நாம் நிலைத்தும் சீவித்தும் இருக்கின்றோம். எமது இறுதியும் அன்பிலேயே தங்கியிருக்கின்றது. அன்பே சிவம் என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கை.

"பெறுதற்கரிய சங்கநிதி பதுமநிதிகளை ஈந்து பூமியோடு வானுலகத்தையும் ஆளக்கொடுப்பரேனும், தேவாதி தேவனாகிய சிவபெருமானுக்கு மெய்யன்பு இல்லாராகில் அவர்தரும் மங்குந்தன்மையையுடைய நிதிகளை மதிக்க மாட்டோம்" என்பதும்,

"சரீரம் குறுகி அழுகி ஒழுகும் தொழுநோயாற் பீடிக்கப்பட்டு, பசுமாடுகளை உரித்துத் தின்று உழலும் புலைத்தொழிலை உடைய நீசராயினும், கங்கையைத் தரித்த விரிந்த சடைகளையுடைய சிவபெருமானுடைய கரந்த உள்ளத்திற் கன்பராகில் அவர்களே நாம் வணங்கும் தெய்வம்" என்பதும்,

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராகி
யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி
லவர் கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே.

என்னும் அப்பர் திருத்தாண்டகத்தா லறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லாவிட்டால் சிவத்தை நாம் அடைய முடியாது. அன்பினல் மனமானது உருகிய உள்ளம் குழைவார்க்கன்றி எம்பொன்மணியாகிய, இறைவன் எய்துதற்கரியன் என்பது.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங் குழை வார்க் கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணுதே.
என்னும் திருமந்திரத்தாலறிக.

நாம் எத்தொழிலை எண்ணினும் செய்யினும் அன்பே சிவம் என்று, அவனுக்கன்பு பூண்டொழுகுவோமாயின், அவன் அருளே அன்பைத்தந்து, எம்மையும் அன்பராக்கும். அன்பே சிவம் என்பதை நாம் எப்பொழுது உணருகின்றேமோ, அப்பொழுது நாமே, அன்பு நிறைந்த சிவம் ஆகின்றேம் என்பது திறவோர் காட்சியிற் றெளிந்த உண்மை.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரும றிகிலார்
அன்பே சிவமாவ தாரும றிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே. திருமந்திரம்.

2. அன்பு விளக்கம்: —

அன்பாவ தென்னே?

அஃது ஒரு பொருளின்கண் தோன்றும் பற்று: விருப் பற்ற வேட்கை; ஒருவர் மேற்கொள்ளுங் காதல் அல்லது அருள்பூண்ட விருப்பு.

அடுமரந் துஞ்சுதோ ளாடவரு மாய்ந்த
படுமணிப் பைம்பூ ணவருந்—தடுமாறிக்
கண்ணெதிர் நோக்கொத்தவண் காரிகையிற் கைகலந்
துண்ணெகிழச் சேர்வதா மன்பு.
தொல்காப்பிய மேற்கோள்.

சில மக்களைக் கண்டதும் காரணம் தோன்ருது எமது மனம் அவர்களைப் பற்றி நிற்கின்றது. அப்பற்றே அன்பு என்று சொல்லப்படும். அவ்விதபற்றுத் தோன்ருதாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவு தோன்றும். அன்பும் முனிவும், விருப்பு வெறுப்புப் போன்றவையல்ல. ஒருவர்மேல் உள்ள விருப்பினாலேயே வெறுப்புத் தோன்றுகின்றது. பின்வெறுப்பே விருப்பாகவும் மாறுகின்றது. அன்பு விருப்பற்ற வேட்கையுடையது. அஃது தோன்றாதாயின் முனிவு தோன்றும்.

அன்பு, இரண்டாம் மெய்ப்பாட்டுத்தொகை முப்பத்திரண்டனுள் ஒன்று. அதற்கெதிரான குணமாகிய முனிவும், அத்தொகை முப்பத்திரண்டனுள் ஒன்று. அஃது அருளும் சினமும் இன்றி வெறுப்புறுவது அல்லது தேவையற்றது எனத் தோன்றுவது. [தொல். சூ. 260 காண்க], முனிந்தவன் "முனிவன்" அன்புபூண்டவன் "அன்பன்' என்பதுபோலவோர்க.

உலகப்பொருள்கள் உண்மை உணர்த்திப் பிழம்புணர்த்தப்படாதனவும் உண்மையும் பிழம்புமுணர்த்தப் படுவனவும் என இரண்டுவகைப்படும். அவற்றுள், உண்மை உணர்த்திப் பிழம்புணர்த்தப்படாதன, ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, அன்பு முதலியன. என்னை?

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்
காவயின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டல் ஆகாப் பொருள என்ப.

[தொ. சூ. 247]

என்றாராகலின்,

அன்பு, இதுதான் என்று காட்ட முடியாத நெஞ்சுகொள் பொருள்; அஃதுடையார்க்குப் பிறன்கண் துன்பங் கண்டுழி, கண்ணீர் விழுமாதலால், அவ்வருளே, அங்கு "அன்பு" உண்டென்று அனுமானித்தறியத் தக்கது.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

என்னும் குறள் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கம் நியாயம் வைசேடிகம் முதலிய தரிசனங்களில் அன்பு யாதெனக் கையாளப்படவில்லை. திராவிட சித்தாந்தத்தில்; இது குணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. தொல்காப்பியர் அன்பை மெய்ப்பாட்டியலில் அமைத்தார். மெய்ப்பாட்டுத்தொகைவிரி இருநூற்றைம்பத்துநான்கென்பது [254] தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலால் அறியப்படும். அவற்றுள் பெரும்பாலான மெய்ப்பாடுகள், ஓராற்றுப்படும் அன்பின் நிமித்தமாகவே நிகழ்கின்றன.

பற்று, காதல், வேட்கைமுதலியனஅன்பின் வேறுனவை என்பது சிலர் கருத்து. அவையும் ஓராற்றுப்படும் அன்பு என்பது துணியப்படும்.

3. பற்றுக்கள்: –.

பற்றுக்கள், நன்மையினும் தீமையினும் செல்லும். நற்பற்றும் தீயபற்றும் ஆன்மாக்களுக்கு இடரைத் தருவன. இறைவன் இரண்டுபற்றும் இல்லாதவன். ஆதலால், பற்றற்ருன் எனப்படுகின்ருன்.

இறைவன் பாதத்தைப் பற்றுதலே நித்தமான ஒருமைப் பற்ரும். மற்றும் நற்பற்றுக்கள் யாவும் அநித்தமான பற்றுக்களாக, ஆன்மா ஈடேறுவதற்கு, துன்பந்தருவன வென்று ஒவ்வொரு கருமத்தையும் பற்றற்றுச் செய்வர் பெரியோர்.

பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்ருர் திருவள்ளுவநாயனர்.

இருவகைத்துன்பங்களைத்தரும்பற்றுக்களைப்பற்றிவிடாதவர்களுக்கு, அவர்களின் பற்றுக்கள், ஆசை தேவை முதலிய பற்றுக்களிற் செல்லுமாதலால், இடும்பைகள் விட்டுநீங்கா.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

என்னும் திருக்குறள் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக்களில் வாற்சல்லியச் சத்து என் ஒரு பொருள் இரத்தத்துடன் கலந்து விசேடபற்றைத் தாய்மார்களுக்குக் கொடுக்கும். இச்சத்து மக்களுக்கன்றி மிருகங்களுக்கும் உண்டு. கர்ப்பம் தரிக்கும்பொழுது இச்சத்து உண்டாகி வளர்ந்து மகவு பிறந்தவுடன் தாய்மாருக்கு விசேட பற்றை உண்டாக்கிப் பால்சுரக்கச் செய்யும். நாட்கள் செல்ல இச் சத்து குறையும். மகவும் வளர்ந்து உணவுண்ணும் பராய மாகும். மிருகங்களுக்கு மகவு வளர்ந்ததும் பற்றும் அற்று விடும். மக்களுக்கு இது அற்றுப் போகாது நிற்கும். தலைப் பிள்ளையில் இருக்கும்பற்று, இரண்டாவது குழந்தை பிறக்கக் குறைந்து விடும்.

**தீயபற்றுக்களைப் பற்றிக் கூறின்:—** ஒருவன் தனது மனைவியில் உள்ள பற்றினால், பெற்றோரையும் சகோதரங்களையும் மறந்தும், இகழ்ந்தும்புறக்கணிக்கின்றான். மனைவி சொன்னதை யெல்லாம் செய்கின்றான். புத்திரரில் உள்ளபற்றினால், புத்திரர்செய்யும்தீமைகளையும்,நன்மையாகக் கருதி, அதுகாரணமாகப்பிறருடன் சண்டைபிட்டுத் தீமையை யும் தேடிக்கொள்ளுகின்றான். பணத்தில் உள்ள பற்றினால் கைலஞ்சம் வேண்டுவது, களவெடுப்பது முதலிய தீயதொழில் களைச் செய்கின்றான். சிலர் பணத்தில் உள்ள பற்றினால் தாம் உண்ணாதும், பிறர்க்குக் கொடாதும், பொய் சொல்லியும் பணமே தெய்வமென்று உலோகாயுதர்களாயும், பெற்றோர் களையும், சகோதரர்களையும், மனைவியரையும், புத்திரர்களையும் வஞ்சித்தும் துன்புறுத்தியும் தீயவராகி விடுகின்றார்கள். இராக்காலத்தில் பணத்தைப் பெட்டியிலிருந்து பலமுறை யெடுப்பதும், எண்ணுவதும் அவற்றைப் பார்த்து மகிழ்வது மாக இருந்து, பகற்காலம் முழுவதும் பணமில்லை! பணமில்லை! என்று இரந்தும் உண்ணாதும் உடுக்காதும் கொடுக்காதும் திரிந்த சிலரைப் பார்த்தும் கேள்விப்பட்டு மிருக்கின்றோம். ஆடம்பர வாழ்க்கையில் உள்ளபற்றினால் சிலர் தமது நாடு, மொழி, சமயம், சமயாசாரம் முதலியவைகளை இகழ்ந்தும், புறக்கணித்தும், பரசமயங்களைத் தழுவியும், புறநாடே தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாடாகக் கருதியுமிருப்போரைப் பார்த்திருக்கின்றோம். ஒருவர் தமது மிதமிஞ்சிய செலவுத்தேவைக்குப் பணமில்லாததினுல் அப்பணத்தைத் திருட்டுமூலம் பெற்று, அத்திருட்டுக்காகத் தண்டனை யடைந்ததையும் பார்த்திருக்கிறோம்.

பற்றில் இருந்து பிறப்பது தேவை, ஆசை முதலியன, கொலை, களவு, பொருமை, சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் காரணமாக உடையது ஆசை, தேவை முதலிய பற்றுக்களே. ஆணவத்திலிருந்தே ஆசை, தேவை முதலிய பற்றுக்கள் உண்டாகின்றது. ஆசை, தேவைகளைமட்டுப் படுத்தியவர்களே மனிதராவர். மற்றேரெல்லாம் மனித உடல் தாங்கிய விலங்குகளே யாவர்.

தேவை ஆசையால் வரும் தேவை, தேவையால் வரும் தேவை என இரண்டு வகைப்படும்.

தேவையால் வரும் தேவை: - உணவு, உறக்கம், உறைவிடம், தற்பாதுகாப்பு என விரியும். இது மக்களுக்கன்றி மிருகங்கள் முதலிய யாவுக்கும் பொதுவானது. தேவையால் வரும் பற்று தேவை முடிந்ததும் அற்றுவிடும். ஆசையால் வரும் தேவை ஆசையுள் அமையும். மலகூடம் கட்ட ரூபா 1000 தேவையாயிருக்கின்றது என்பது ஆசையால் வரும் தேவை.

ஆசை:—அளவு கடந்து நிற்பது. தேவைபோல் அற்றுப் போவதில்லை. அவ்விதம்அற்றவர்கள் பற்றற்றவராவர். ஆசை ஒன்றை விட்டொன்றைப் பற்றச் செய்து பாசக்கடலினுள் தள்ளி வீழ்த்திவிடும்.

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல்லாங் கட்டி
　　யாளினுங் கடன்மீ திலே
ஆணை செல வேநினைவ ரளகேச னிகராக
　　வம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
　　நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
　　நெஞ்சுபுண் ணுவ ரெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்கும் வேளையிற் பசிதிர வுண்பது
முறங்குவது மாக முடியு
முள்ளதே போதுநான் நானெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

என்னும் தாயுமானசுவாமி பாடல் காண்க.

ஆசை:- மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என மூன்று முக்கியமான பகுதிகளாக விரியும்.

மண்ணாசை; வயது சென்று மண்ணைப் போய்ப்பார்க்க, ஆள, முடியாத காலங்களில் மங்கிவிடும். அதற்குமேலும் சிலருக்கு மண்ணாசை குன்றாதிருப்பதுண்டு. அது, தம்பொருட்டல்ல, பெண்டீர், பிள்ளைகள் முதலியோர்மேல் உள்ள பற்றினால் நிற்பதுண்டு.

பெண்ணாசை; இளமை நீங்கி முதுமையெய்துங்கால் நீங்கிவிடும். குடி, கூத்தி என்னும் பற்றுக்களும் பெண்ணாசையால் தோன்றும். கூத்திமேல் உள்ள பற்றும் முதுமைவர நீங்கும். குடிவகையில் உள்ளபற்று நீங்காது. காமத்தில் உள்ள பற்றே குடிப்பதற்குப் பழக்குவது. முதுமை எய்தக் காமத்தில் உள்ள பற்றும் சேர்ந்து குடிவகையில் ஊன்றும். குடிவகையில்உள்ள பற்று அக்குடிவகையைக் கொடுப்போன்மேல் ஊன்றும். குடிவகையில் ஊன்றிய பற்றினால், நல்ல கள்ளுக் கொடுப்பவனே உலகமக்களில் சிறந்தவனெனக்கருதச்செய்யும். ஆங்கிலேயர் நாட்டிலே செய்யப்பட்ட கெனிசி பிருந்தியைக் குடிக்கும் ஒருவர், ஆங்கிலேய மக்களே சிறந்தவர்கள் என வாதாடினர். மற்ற எந்த உலக மக்களும் கெனிசி பிருந்தியைப்போல் செய்யமுடியாத காரணமே, அவரின் வாதத்துக்குக் காரணமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் மனைவியினும் காதற் பரத்தையே சில தலைவர்களுக்குச் சிறந்தவர்களாகின்றனர். ஆசை அறுபதுநாள் மோகம் மூப்பதுநாள் என்பர். சிலருக்கு மோகம் வயது முதிர்ந்தும் நீங்காதிருப்பதுண்டு. அது அவருக்கிருக்கும்மோகத் தடிப்பினால் என்ப. சில முதியோர் இளந்தம்பதிகளைக் கண்டு பொறாமை கொள்ளுவர்.

பொன்னாசை:- இது இறக்குந்தனையும் ஆசை கொள்வோரை விட்டு நீங்காதிருக்கும். நீங்கினல் மூவாசையிற் கட்டுப்படாதவர் என்பது கருத்து. சிலர் வயதுசென்று இறக்கும் தறுவாயில் கிடக்கும் பொழுதும் தமது செல்வம் யாவற்றையும் பொற்கட்டியாக உருட்டித் தமது தலைமாட்டில் வைத்திருக்கவேணும் என்று நினைப்பர். அவ்வுலகத்தில் கைச்செலவிற்காகக் கொண்டுபோக இறைவன் வரம்தருவாரா என்று யோசிப்பாருமுளர். உலோப குணத்திற்குக் காரணமாக உடையதும் பொன்னாசையே. ஈகை, இரக்கம், தாழ்வு, தயை யாவற்றையும் நீக்கும் பொன்னாசை. தனத்தையே மனத்தில் வைத்திருப்போர் தன்மையைச் சுட்டி,

தாழ்வெனுந் தன்மைவிட்டுத் தனத்தையே
மனத்தில் வைத்து
வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக்
கொன்றீய இல்லார்
ஆழ்குழிப் பட்டபோது வலக்கணி
லொருவர்க் காவர்
யாழ்முயன் றிருக்கு மாறு ரப்பனே
யஞ்சினேனே.

என்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

வாழ்க்கையில், மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோளுண்டு. அதனை அடிப்படைக் குணம் என்றும் சொல்லலாம். சிலரை அவன் ஒரு நாகபாம்புக்குச் சமானமானவன், அவன் ஒரு புலிக்குச் சமானமானவன், அவன் ஒரு பசு, என்றெல்லாம் உவமித்துக் கூறுகின்றோம். அவற்றிற்கு அம்ஆனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனில் இருக்கும் அடிப்படைக்குணமேகாரணம். அக்குணமே அவன் வாழ்க்கையின் குறிக்கோளாகின்றது. அவற்றிலிருந்துஒழுக்கம், பொறை, தயை, கொடை, வெஃகாமைமுதலிய நற்குணங்களும், அழுக்காறு அவா வெகுளி முதலிய தீய குணங்களும் உண்டாகின்றன. மிருகங்களுக்கும் அடிப்படைக் குணங்களுண்டு. அக்குணங்கள் அவைகளின் பிறப்பால் உணரலாம். மக்களின் குணம் உணருவது பிரயாசை. அடிப்படைக் குணங்களை மாற்றுவதும் பிரயாசை. அது காலத்திற்குக் காலம் காலம், சூழ்நிலை முதலிய பண்பாட்டால் மாறலாம். இக்குணத்திலிருந்து பிரேமை பித்து என்னுங் குணங்கள் விரியும்.

பிரேமை:- ஒருவகை மயக்கத்தோடுகூடிய பித்துஅல்லது பிரமோகம் என்றும் சொல்லப்படும்.

பிரேமை கொண்ட மனைவியர் தம் கணவர் உடல் நலம் கருதி முயங்கார். கனவினும் நினைவினும் கணவனையே சிந்தித்திருப்பர். அவர் இறப்பின் தாமும் உயிர்விடுவர். பணப்பிரேமை கொண்டார் தம் உடல்நலம் கெட்டாலும்அவற்றின் பொருட்டு தம் பணத்தை விரயமாக்கார். தம்பணப் போனால் தாமும் உயிர்விடுவர். கண்ணப்பநாயனார் திருக்காளத்தி ஈசுரர் மேற் கொண்ட பக்தி பிரேமபத்தி யெனப்படும்.

பித்து; என்பதும் ஒருவகை அன்பையே குறிக்கும். அது ஒருவகை மயக்கத்தோடு கூடிய அன்பாம்.

பித்துப் பணப்பித்து, காமப்பித்து, குடிவகைப்பித்து, பொருட்பித்து, புத்திரப்பித்து, உத்தியோகப் பித்து எனப் பலவகையாக விரியும்.

சில குடிவகைப்பித்தர் தம் பெண்டீர் பிள்ளைகள் பட்டினியாகஇருந்தாலும் அவர்கள் நலம் கருதாது தம் கையிற் கிடைக்கும் அற்ப பொருளையும் குடிவகையிற் செலவிடுவர்.

சில பணப்பித்தர்கள் நன்மை, தீமை, பழி, பாவம், சுகம், துக்கம் ஒன்றையும் கருதாது பணம் தேட உபாயம் செய்வர். பணப்பித்தர்களில் அனேகர்செல்வமுடையவர்கள். உண்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பது கொடுப்பது முதலிய தேவைகளுக்கே செல்வம் உரியது என்பது அறியார். எல்லையில்லாத திரவியம் தேடி வைத்திருப்பினும் அவர்களின் பணப்பித்து நீங்குவதில்லை.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—வாங்கதுகொண்
டுருமெ றும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று.

என்றார் நீதிநெறியார்.

புகலூரிலே சில பணப்பித்தர்களைப் பாடிய பாணரைச் சந்தித்த சுந்தரமூர்த்திசுவாமிகள்,

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையு
மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

மிடுக்கி லாதானை வீமனே விறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே.

என்னும் தேவாரப்பதிகங்களால்கொடாதாரைப்பாடாது இறைவனின் திருவருளைப் பாடுமின். அவனருளே வேண்டியதைத் தரும் என்றார்.

பித்தாபிறை சூடிபெரு மானே யருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே [டுறையுள்

என்னும் தேவாரத்துள் சுந்தரமூர்த்தி நாயனர் இறைவனைப் பித்தன் என்று குறிப்பிட்டார்.

ஒருசிறந்த அறிவாளி தலைவியின் காதலில் ஈடுபட்டு எவ்விதம் பித்தனுகத் திரிதற்குரியவனுகின்ருனே அதுபோல் இறைவனும் யாவும் உணர்ந்த பரம்பொருளாயினும் தொண்டர்மேல் பித்துள்ளவனுதலால் பித்தன் என்று குறிப்பிடத் தக்கவரானுர்.

பற்றுக்களின் ஆக்கம் ஊக்கம் விரிவு ஒடுக்கம் முதலிய நுட்பங்களை அறியின், கந்தவனம் சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் எழுதிய அகநூல் பார்க்க.

சுந்தரமூர்த்திசுவாமிகளும் "எனக்குப் பற்றும் பற்று வேறு இல்லாமல், நினது திருவடியையே மனத்தினிடத்து பற்ருக நினைக்கப் பெற்றேன்" என;

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
  பாத மேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனி னிப்பிற
  வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
  யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
  சொல்லுநா நமச்சிவாயவே

என்னும் தேவாரத்துள் கூறியுள்ளார்

மாணிக்கவாசகசுவாமிகளும்,

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
  பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
  திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
  ஆண்டநீ அருளிலை யானல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
  வருகவென் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருவாசகத்தால் பற்றுநான் மற்றிலேன் கண்டாய் என்றார். இறைவனின் பாதத்தைப் பற்றி நிற்றலே ஆன்மாக்களின் கடமையாகும்.

முதல்வனின் பாதங்களைப் பற்றாதவர்களைப் பாவங்கள் பற்றும்.

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்று வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்றா பாவமே.

என்று திருஞானசம்பந்தசுவாமிகள் "இறைவன் பாதங்களைப் பற்றினோரைப் பாவங்கள் பற்றா' என்றார்.

மனம் பொருள்களைப் பற்றுவதுபோல், வினைகள் ஆன்மாவைப் பற்ற வல்லன. ஒன்றை ஒன்று பற்றுந் தன்மை, அசேதனப் பொருள்களில் அனேகம் உண்டு. அவை சாமானியசமவாய சம்யோக சம்பந்தத்தால் அறியப்படும்.

4. சாமானியம்:—

சாமானியம் என்பது பொதுமை (திராவிடசித்தாந்தம் சாமானிய அத்தியாயம் பார்க்க) அஃது பரம், அபரம் என இரண்டு வகைப்படும்.

பரமும், பரமும் அல்லது அபரமும், அபரமும் சமவாயம் கொள்ளும். ஆனல் பரமும் அபரமும் சமவாயம் கொள்ளா. ஏன் எனின் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையன.

(உ—ம்)

இரும்பும் மரமும் அல்லது வெள்ளனும் கள்ளனும் போன்றன.

5. சமவாயம்:—

சமவாயம் என்பது ஒற்றுமை. அஃது ஒன்றை ஒன்று பற்றிநிற்கும் நித்தமான தற்கிழமையுள்ள ஒற்றுமை என்ப.

(உ—ம்)

ஒளியும் விழியும் போன்றது. ஒளியிற்றான் விழியிருக்கின்றது. விழியிற்றான் ஒளியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி பொருள்களைக் கவர்வது, நித்தமான சமவாயசம்பந்தத்தைக் குறிக்கும். அதுபோலவே, இறைவனும் எம்மில் இடைவிடாத நித்தமான அன்பென்னும் சமவாயம் கொண்டிருக்கின்றான். இவ்வுண்மை உணர்ந்து நாம் இறைவழி ஒழுகாதிருத்தலே அவனுக்கும் எமக்கும் உள்ள பேதம்.

6 சம்யோகம்:—

சம்யோகமென்பது, சம்மியத்துவம் அல்லதுஒப்பு என்று சொல்லப்படும். ஒப்பு இல்லாவிட்டால் இருவருக்கிடையே நிகழும் பற்றினலாகிய இன்பம் நிகழாது. ஒத்த பிறப்பும் ஒழுக்கமும் ஆண்மையும் பிராயமும்உருவும் அன்பும் நிறையும் அருளும், அறிவும், செல்வமும் எனப் பத்துவகை ஒப்பினல் திரிபிலார் இருவர் ஒருப்படல் இன்பத்திற்குரியதாதலான் அஃதே சம்யோகமெனப்படும் என்ப.

பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.

என்ற தொல்காப்பியச் சூத்திரவிதி (273) காண்க.

சம்யோகத்தில் இருந்து தோன்றுவதே சையுத்தம் என்று சொல்லப்படும். அவற்றை சமவாய சம்யோக சையுத்தமென்றும் சொல்லப்படும். இதே இறையோடு புணரத் தோன்றும் பரவசக்காட்சி.

தற்கால விஞ்ஞானத்தில் சம்யோகம் என்னும் ஒப்பு மிகவும் பயன்தரு கணிதமாம். அவற்றை ஆகர்டணவிதி கொண்டழைப்பர்.

ஒருகுழந்தையின் பேரில் தாய்பற்றுடையவளாக இருக்கின்ருள். அக்குழந்தை அவ்வித பற்றை உணருகின்றதோ வெனின் இல்லை. அதற்குக் காரணம் இருவரும் அன்புடையவராக இருந்தாலும், தாயின் பற்றைக் குழந்தை உணர ஒப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லை. அதுபோன்றதே நமக்கும் இறைவனுக்கும் இடையே யுள்ள பற்று. இறைவன் எய்மேல் நித்தமான அன்புள்ளவன். நாம் இறைவன்பாதம் பற்ற ஒப்பில்லாதவர்கள். இக்காரணத் தினலேயே நாம் இறைவனைக் காணமுடியாது இருக்கின்றோம். இறைவன் எம்மேல் நித்தமான அன்பென்னும் சமவாயம் கொண்டிருப்பதனலேயே எங்களுக்கு அன்பு தோன்று கின்றது. இல்லாவிட்டால்எமக்குஅன்புஎவ்விதம் தோன்றும் தோன்ருது. அன்பை வளர்ப்பதே ஆன்மாவின் கடமை.

7. நித்தப்பொருள்: –

பொருள்கள் நித்தம் அநித்தம் என இருவகைப்படும்.
நித்தம்:- அழிவில்லாதது.
அநித்தம்:- அழிவுள்ளது.

அழிவில்லாத ஒருபொருள் உண்டானல்தான் அழிவுள் ளது தோன்றும். அழிவதெல்லாம் யாதோ ஒரு அழிவில்லாத ஒத்த சாமானிய சமவாய சம்யோகப் பொருளில் ஒடுங்க வேண்டும். அற்றேல், அழிவதெல்லாம் முற்ருக அழிந்துவிடும் தோன்றவும் மாட்டாது.

(உ—ம்)

எமது சரீரம் பூமியின் பொருளாலானது. அழியும் பொழுது அது பூமிப்பொருளோடு கலந்து விடுகின்றது.

பின் தோன்றும்பொழுதும், பூமிப் பொருளிலிருந்தே தோன்றுகின்றது. இறைவன் நித்தமான அன்பிற்கு இலக் கணமாக உடையவன். அவனுடைய அன்பே எம்மிலும் நிறைந்து நின்று, அன்பு தோன்றச் செய்கின்றது. எம்மில் நிற்கும் நித்தமான இறைவனது அன்பை ஆணவவலிதூண்டி பிறபொருட்களில் பற்றை உண்டாக்கி மாயாகன்மங்களுக்கு ஆளாக்குகின்றது. ஆன்மா அவற்றை உணர்ந்து, தனது அன்பை இறைவன்பாற் செலுத்தி எப்பொழுது நித்தமான அன்பைப் பெறுகின்றதோ அப்பொழுது இறைவன் பாதத் தைப்பற்றி, அத்துவிதமாகி அன்பாகி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. (குறள்)

8. வேட்கைப் பற்று:—

இது விருப்பத்தின் மிகுதி. அன்பும், கல்வியும், உருவும், திருவும், குலனும், நலனும், பண்பும், பயிற்சியும் போன்ற குணங்களாலொத்த தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப் பட்டுக் கூடுகின்ற காலத்துப் பிறந்த இன்பம் அக்கூட்டத்தின் பின்னரும், அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குத் தோன்ற இன்னவாறு இருந்ததெனக் கூற இயலாததாய் யாண்டுமுள்ளத் துணர்வே உணர்வாய் மீதூரப்படும்வேட்கை. இதுவும் அன்பு என்பது துணியப்படும். மாணிக்கவாசக சுவாமிகளும்,

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர்
காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போவ
தற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார்கதவ
தடையாமே
புடைபட் டுருகிப்போற்றுவோம் புயங்கன் ஆள்வான்
புகழ்களையே.

என்னும் திருவாசகத்துள் வேட்கைநோய்மிகவோர்காலம் இனிஇல்லைஎன்றார்.வேட்கை, அன்புவேட்கை, காமவேட்கை, பொன்வேட்கை, பொருள் வேட்கை எனத் திரிபுறும். அவற்றுள் சிறந்தது அன்பு வேட்கை. அவற்றுளும் இறைவன்பாற் கொள்ளும் அன்பு வேட்கை தலையாக உடையது.

9. காதல்:—

பற்றின் மிகுதியால் உண்டாகும் வேட்கை. இதுவும் அன்பையே குறிக்கும். காதல் களவு நெறியில் உள்ளது உளமலிகாதல் களவெனப்படுவே" என்னும் அகப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரவிதி காண்க. உலகத்தில் எந்தப் பிராணியும் காதல் கொள்ளாது இருப்பதில்லை. காதலும் பற்றைப்போல் பல பொருட்களிற் செல்லும். காதல் ஒரு மயக்கத்தோடு கூடிய அன்புடையது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி" எனக் காதலைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். சுந்தரமூர்த்திசுவாமிகளும்,

காதலாலே கருதுந்தொண்டர் காரணத்த ராகின்றேற
பூதம்பாடப் புரிந்துநட்டம் புவனியேத்த ஆடவல்லீர்
நீதியாக வேழிலோசை நித்தராகிச் சித்தர்சூழ
வேதமோதித் திரிவதென்னே வேலைசூழ் வெண்காடனீரே.

என்னும் தேவாரத்துள் காதலைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகசுவாமிகளும்;

காலமுண்டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.

என்னும் திருவாசகத்தானும்

தூவெள்ளை நீறணி எம்பெருமான் சோதிம கேந்திர நாதன் வந்து
தேவர்தொழும்பதம் வைத்தஈசன் தென்னன்பெருந்துறை ஆளிஅன்று
காதல் பெருகக்கருணைகாட்டித் தன்கழல் காட்டிக்கசிந்துருக
கேதங் கெடுத்தென்னை ஆண்டருளுங் கிடப்பறிவார் [கக் எம்பிரா னவாரே.

என்னும் திருவாசகத்தானும்

காதலைச் சிறப்பித்துக் கூறுதல் காண்க. இறைவன்மேற் கொள்ளுங் காதல் நித்தமானது. ஆன்மாவை உய்விக்கும். காதல் தலையன்பை அடைதற்குவழியாகஉடையது. தலைவன் தலைவிமேற் கொள்ளும் காதலே ஒருகால் இறைவன்மேற் கொள்ளும் அன்பாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பின் கரையைக் கண்டார் யார்?**

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றியாமறியு மன்பன் றது.

என்றூர் திருக்களிற்றுப்படியார்

எனினும் அன்பு மூவகைப்படும்.

10. மூவகையன்பு: –

அன்பு. தலை, இடை, கடை என மூவகைப்படும்.

இவற்றுள்,

**தலையன்பு:—**

உயிர் உடலைப்பற்றியிருக்கும் அன்பு தலையன்பிற்கு இலக்கணமாக உடையது.

அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போடியைந்த தொடர்பு. (குறள்)

ஆன்மா ஒன்றே இறைவன்பாதத்தை அடைவது. எமது சரீரத்தில் என்றும் விழித்திருக்கும் பொருளும் அதுவே. தலையன்பு பூண்டொழுகின் அதனையே ஆன்மாவின் அத்துவித நிலையென்பர். அத்துவிதம்=வேறற நிற்றல்.

11. தலையன்பின் மெய்ப்பாடு: —

மெய்ப்பாடு = சரீரத்தில்தோன்றும் வேறுபாடு. அன்பின் மெய்ப்பாடு தலையன்பு கொண்டாருக்கே தோன்றும்.

(உ—ம்)

நெக்கு நெக்குள் உருகிஉருகி நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி நானவிதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந்திருமேனிதிகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பதென்று கொல்லோ என் பொல்லாமணியைப் புணர்ந்தே.
(திருவாசகம்)

உடல் குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்
ருற்றெனவெதும்பி யூற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வூசிகாந்தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடெனு நெஞ்சம் பதைத்துண்ணடுக்குறப்
பாடியாடிக் குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி யார்த்தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானே யவானி யின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடன்மடை திறந்தனைய வன்பரன்புக் கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. (தாயுமானவர்.)

நீரூர்ந்தமேனி யுரோமஞ்சிலிர்த்துள நெக்கு நெக்குச்
சேரூய்க் கசிந்து கசிந்தேயுருகு நின்சீரடிக்கே
மாறாத்தியான முற்றானந்தமேற்கொண்டு மார்பிற் கண்ணீர்
ஆரூய்ப் பெருகக் கிடப்பதென்றே கயிலாயத்தனே.
(பட்டினத்தடிகள்)

என்னும் செய்யுள்களால் தலையன்பின் மெய்ப்பாடு ஓர்க.

12. பேரானந்த வெள்ளப் பெருக்கம்:—

தலையன்பின் பயனாக மெய்சிலிர்த்து நாத்தடுமாறி மயிர்க்கூச்செறிந்து மெய்யெல்லாம் நெக்கு நெக்கு உருகப் பேரானந்தவெள்ளம் பெருகும். கண்ணப்பநாயனார் திருக்காளத்தி ஈசுரர்மேற் கொண்ட அன்பு இதற்கு உதாரணமாக உடையது.

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணுமுன்னே
யங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய வொளியினீழற் பொருவிலன் புருவமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகமார் திருக்காளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநாயகரைக் கண்டாரெழுந்த பேருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவினோடு
மோகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்.

நெடிது போதுயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்காறு
வடிவெலாம் புளகம்பொங்க மலர்க்கணீ ரருவிபாய [றும்
அடியனேற் கிவர்தாமிங்கே யகப்பட்டாரச்சோவென்று
படியிலாப் பரிவுதானோர் படிவமாம் பரிசு தோன்ற.

வெம்மறக் குலத்துவந்த வேட்டுவச் சாதியார் போற்
கைம்மலை கரடி வேங்கை யரிதிரிகானந் தன்னி
லும்முடன் துணையாயுள்ளா ரொருவரு மின்றிக் கெட்டே
னிம்மலைத்தனியே நீரிங்கிருப்பதே யென்று நைந்தார்.

என்று வரும் பெரியபுராணச் செய்யுள்கள் காண்க.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
எண்ணப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்னும் திருவாசகத்தான் மாணிக்கவாசகரும் கண்ணப்பன் பத்தியை வியந்து கூறியுள்ளார்.

## 13. இடையன்பு:—

தாய் பிள்ளையிற் கொள்ளும் அன்பும் தலைவி தலைவன் மேற் கொள்ளும் அன்பும் இடையன்பிற்கு உதாரணமாம். இஃது உயிருக்குயிராக மதித்தல்.

இறைவனது திருவடிகளை வணங்குமின். அவைகளுக்கே மலர்சூடுமின். அவைகளையேமனதிற்பதித்து எல்லாத்துன்பங்களையும் இகழ்மின். தீங்குகள் எம்மை அடையாவண்ணம் சிவபுரம் சேர்ந்து, அவன் அடிகளுக்கு அன்பு வைத்து வணங்கி, அவன்முன் மனமுருகி நில்மின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன்தாளே
புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர்இடையூறடையாமே
திகழுஞ்சீரார் சிவபுரத்துச்சென்றுசிவன்தாள்வணங்கிநாம்
நிகழும் அடியார்முன் சென்று நெஞ்சம் உருகி நிற்போமே.

சிவபுரம் சேர்வதை எண்ணி உள்ளத்தைச் சுத்தமாக அமைத்து இறைவனது பாதத்தைநினைமின். வேல்போலும் கண்களையுடைய உமைபங்கனது திருவருளமுதத்தை, அன்பாகப் புசித்துப் பேரின்பத்தில் ஆழ்மின். நிலையற்ற பொய் வாழ்வில் அழுந்தாமல், சிவன் திருவடியைச் சேர்மின்.

சேரக்கருதிச் சிந்தனையைத் திருந்தவைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அரு
ஆரப்பருகி ஆராத ஆர்வங்கூர அழுந்துவீர் [ளமுதம்
போரப் புரிமின் சிவன்கழற்கேபொய்யிற் கிடந்துபுரளாதே

என்னும் திருவாசகங்கள் இடையன்பைப்புலப்படுத்துவன.

இடையன்பின் குணங்கள் யாவை எனின்:—

சாவிற்சாதல், நோவின்நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், நலம்பாராட்டல், புணர்வுநனி வேட்டல், பிரிவுநனியிரங்கல் முதலியன.

சாவிற்சாதல் தலையன்பாகாவோ எனின்; ஆகா; சாவிற் சாதலால் அன்பின் பயனாக உள்ள ஆனந்தம் தோன்றாது "சாவிற் சாதலாகிய" மறம் தோன்ற அன்பு வரம்புபெறும். வரம்பற்ற அன்பே தலையன்பு. வரம்பு பெறும் அன்பு இடையன்பு.

தலையன்பினால் உள்ளம் பரவசமுற்று மெய்சிலிர்த்து நாத்தடுமாறி, தானும் இறையும் புணர, ஆனந்தபரவசம் தோன்றி, அன்பு வரம்பற்று நிற்கும். அது தோன்றாதாயின் இடையன்பாம்.

அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

மெய்யன்புகூர விதிர்ப்புற்று வேர்த்தெழுந்து
பொய்யின்மை கண்டுநின்று போற்று. (ஔவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன்பாற் செலுத்தும் மெய்யன்பு தலையன்பென்றும், பிறன்பாற்செலுத்தும் மெய்யன்பு இடையன்பென்றுங் கூறுவர் சிலர்.

14. சாவிற் சாதல்: –

தலைவனின் சாவால் தலைவிசாதலும் அன்பனின் சாவால் அன்பன் சாதலுமாம்.

பான்மையர்ச்சனைகளெல்லாம்பண்பினில் வழாமையேய்ந்த
நான்மறை தொடர்ந்தவாய்மை நம்பியாரூரர் கொண்டிங்
கியான்மிக வருந்துகின்றே னேயர்கோனூர் தாமுற்ற
வூனவெஞ் சூலைநீக்கி யுடனிருப்பதனுக் கென்றார்.

மாதர்த மேவலாலே மனைத்தொழின் மாக்கண் மற்றிங்
கேதமொன் றில்லையுள்ளே பள்ளிகொள்கின்ற ரென்னத்
தீதணைவில்லையேனு மென்மனந் தெருளா தின்ன
மாதலா லவரைக்காண வேண்டுமென் றருளிச் செய்தார்.

வன்றொண்டர் பின்னுங்கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதிசோரத் தொடர்குடர் சொரிந்துள்ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் புகுந்தவாறு
நன்றெனமொழிந்துநானு நண்ணுவேனிவர்முன்பென்பார்.

கோளுறு மனத்தராகிக் குற்றுடை வாளைப்பற்ற
வாளுடைத் தம்பிரானு ரருளினு லவருமெய்ந்து
கேளிரே யாகிக்கெட்டேனென விரைந்தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்றொண்டர் வணங்கி
வீழ்ந்தார்.

என்னும் பெரியபுராணச் செய்யுள்களிற் சாவிற்சாதலின் இலக்கணங்கள் காண்க.

சாவிற்சாதல் முதலியன களவுநெறியில் உள்ளன.

என்னை?

வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிந்
லாக்கஞ் செப்பனுணுவரை யிறத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவெனமொழிப (தொ. சூ.100)
என்றாராகலின்;
கரந்த உள்ளமே அன்பு நெறியென்க. அவற்றுள்;

15. வேட்கை:—

ஒரு நிலைப்பற்று அல்லது நித்தமான அன்பு. (வேட்கைப் பற்று என்ற பந்தி 8 பார்க்க)

உ—ம்:-

புறமேபோந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சார்ந்த அடியார் மற்றொன்றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே.

தாராய் உடையாய் அடியேற்குன் தா ளிணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார் புறமே போந்தேன் யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்தாளிணையன்புக்
காராய் அடியேன் அயலே மயல்கொண் டெழுகேனே.

அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே.

என்னும் திருவாசகங்கள் காண்க.

16. ஒருதலையுள்ளுதல்: –

இடைவிடாது சிந்திக்கும் கைக்கிளைக் குறிப்பு.

(உ – ம்)

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட [ல்
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோ
உடையவ னேமன் னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம் பிரான்என்னைத் தாங்கிக்
கொள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிநின் றென்னை மயக்கிடும்வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற்கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரைசே.

அரைசனே அன்பர்க் கடியனேனுடைய
அப்பனே ஆவியோடாக்கை
புரைபுரை கனியப் புகுந்து நின்றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே
திருப்பெருந்துறை யுறைசிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே.

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பறுக்கும் எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததுவெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கினியென்ன குறையே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய்வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக்கேனே.

இரந்திரந்துருக என்மனத்துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சேவடியாய்
திருப்பெருந்துறையுறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர்நிலந்தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டின்றே.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற்பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றுந்
திருப்பெருந்துறை யுறைசிவனே
ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற்பாரே.

பார்பதம் அண்டம் அனைத்துமாய்முளைத்துப்
படர்ந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறுதீயே நினைவதேல்அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறைசிவனே
யாருற வெனக்கிங் காரயலுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென்சோதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமாகடலே
தீதிலா நன்மைத் திருவருட்குன்றே
திருப்பெருந்துறை யுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறே.

என்னும் திருவாசகங்கள் காண்க.

17. மெலிதல்:—

மெய்வாடுதல்; இடைவிடாது சிந்தித்தலினால் உணவை மறந்து மெய்வாடுதல். அகத்துறையுந் தலைவி தலைவனை, நினைந்து மெய்வாடுதலும், தலைவன் தலைவியை நினைந்து மெய் சுருங்குதலுமாம்.

(உ - ம்)

சீரைதை இய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழித்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவது மறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்.......................

என்னும் திருமுருகாற்றுப்படை யடிகள் காண்க.

தலைவியர் தலைவன்மேற் பற்றுடையர். முனிவர் இறைவன்மேற் பற்றுடையர்.

18. ஆக்கஞ் செப்பல்:—

நெஞ்சோடு சிறப்பினை முன்னிலைப்படுத்திக் கூறுதல். யாதாயினும் ஒன்று உற்றுழி அதனை ஆக்கமாக நெஞ்சோடு கூறிக்கோடலும், குயில் வண்டு முதலியவற்றை முன்னிலையாக்கி ஆக்கஞ் செப்புதலும் என இரண்டு வகைப்படும். (தொல்காப்பிய உரையாசிரியர் சிலர் சிறிது வேறுபாடாகவும் கூறுவாருளர்) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கியவழி. தலைவி அப்புணர்ச்சியை அன்பின் புணர்ச்சி யென்று தெளிந்து தலைவனின் சிறப்பைக் கூறுதல் ஆக்கஞ்செப்புதல் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

**நெஞ்சோடு ஆக்கஞ் செப்புதல்.**

(உ—ம்)

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேன் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால் பிரமனிந்திரற்குந் தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

சுந்தரர்.

வரியமறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரியமதில்க ளெய்தா ரெறியு முசலமுடையார்
கரியமிடறு முடையார் கடவூர்மயான மமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமானடிகளே.

திருஞானசம்பந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயில் வண்டு முதலியவற்றை முன்னிலைப்படுத்திக் கூறுதல்.

(உ — ம்)

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள், சொல்லீரே
பண்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கண்முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே.

கண்டகங்காண் முண்டகங்காள் கைதைகா ணெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென் றளிர்வண்ணம்
கொண்டநா டானறிவான் குறிக்கொள்ளா தொழிவானே.

மணிக்காஞ்சி யிளங்குருகே மறந்தாயோ மதமுகத்த
பணிக்கைம்மா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லா முரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச்சோர்வாளோ

புதியையா யினியையாம் பூந்தென்றல் புறங்காடு
பதியாவ திதுவென்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிகங்கை
விதியாள னென்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே.

மன்பொருந்தி வாழ்பவர்க்கு மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த விசைபாடும் பழனஞ்சே ரப்பனையென்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான் கடவேனே.

பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போ யிரைதேரும்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவ தறியேனான்
அங்கோல வளைகவர்ந்தா னணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானே.

துணையார முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணையார விருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பனென் னெழினலமுண் டிகழ்வானே.

கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின் கொடியார
பூவைகாண் மழலைகாள் போகாத பொழுதுளதே. [டைப்

புள்ளிமான் பொறியரவம் புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் றொழுதேத்த விருக்கின்ற பழனத்தான்
உள்ளுவார் வினைதீர்க்கு மென்றுரைப்ப ருலகெல்லாம்
கள்ளியே னனிவர்க்கென் கனவளையுங் கடவேனே.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

19. நாணுவரை யிறத்தல்:—

ஆற்றுந் துணையும் நாணி அல்லாதவழி அதன்வரை யிறத்தல்.

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னு
ளிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவுளானே. —அப்பர்

20. நோக்குவ எல்லாம் அவையே போறல்:—

அவை, பிறர்நோக்கும், தம்நோக்குமென இரண்டுவகை யாகத் திரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தம்மை நோக்குவாரெல்லாம் தம்கரந்தஉள்ளத்தைக் கற்றூர்போற்றேன்றலும்.

(2) தம்நோக்கெல்லாம் அவர் போற்றேன்றலுமாம்.

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்தந்தருள்எம்முடையானே. (தி—வா.)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லே னுன்பொல்லேன் ஞானி யல்லே
னல்லாரோ டிசைந்திலே னடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன்
வெறும்பனவு மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லே னிரப்பதே யீய மாட்டே
னென் செய்வான் றேன்றினே னேழை யேனே.

என்னும் அப்பர் திருத்தாண்டகமும்நோக்குவாரெல்லாம் தம் கரந்த உள்ளத்தைக் கற்றூர்போற் றேன்றற்கு உதாரணமாம்.

இருநிலனய்த் தீயாகி நீருமாகி
யியமான னயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றுகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநிலையா யின்றுகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

மண்ணுகி விண்ணுகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணுகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணுமாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்டமாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே.

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கண் மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லா
மாட்கொள்ள வல்லவெம் மீசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே.

மாலாகி நான்முகனாய் மாபூத மாய்
மருக்கமா யருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கு மெல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் றானே யாகி
ஏலா தனவெல்லா மேல்விப் பாறு
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே.

என்னும் அப்பர் திருத்தாண்டகங்கள் தம்நோக்கெல்லா அவர் போற்றேன்றற்கு உதாரணமாம்.

21. மறத்தல்:—

விளையாட்டு உண்டி முதலியவற்றை மறத்தல். இடைவிடாது அவனையே சிந்தித்தலினால் மற்றவைகளை மறத்தல் என்க.

(உ—ம்)

இட்டனும்மடி யேத்துவா ரிகழ்ந்
திட்டநாண்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டவாசிகை கொண்டடி தொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

என்னுஞ் சுந்தரமூர்த்திநாயனர் தேவாரங்கள் காண்க.

22. மயக்கம்:—

செய்திறன் அறியாது ஆக்கஞ் செய்தல் முதலியன.

(உ—ம்)

அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசாரம் நற்றேகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்
கென்ன விசாரம் வைத்தா யிறைவா கச்சியேகம்பனே.

கையொன்று செய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்
றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழு
மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே.

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

என்றுவரும் பட்டினத்தடிகள் பாடல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சாக்காடு:—

மடலேறுதலும்வரைபாய்வனவும்போற்கூறல். செயலற்ற நிலையும் அதுவே.

(உ—ம்)

அணிற் பல்லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினு
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சு நேர்பவளே. (குறுந்தொகை)

கொள்ளேன் புரந்தரன்மால் அயன்வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரோடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள்
உத்தமனே.

என ஒருதலையுள்ளி அது காரணமாக

உத்தமன் அத்தன் உடையான்அடியே நினைந்துருகி
மத்தமனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தனபேச எஞ்ஞான்றுகொல் சாவதுவே.

என்னும் திருவாசகத்தால் சாக்காடு கூறல் காண்க.

இத்திருவாசகங்களும் சாக்காடாம்.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தா
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. [டேன்

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன்நான் சாவேனே.

சாவிற்சாதல், இடையன்பாமாறு நோவின்நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிதுமொழிதல், நலம்பாராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டல், புணர்வு நனிவேட்டல், பிரிவுநாணியிரங்கல் முதலியனவும் இடையன்பாமாறு என்னை?

24. நோவின் நோதல்.—

நொந்தாரைக் கண்டு நோதலும் தாம் நொந்துளி இறைவனோடு நோதலும் சாலும்.

(1) **நொந்தாரைக் கண்டு நோதல்:—**

ஆடெரி படர்ந்த கோடுய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும் பால்காணுமல்
குழவி தாய்முகம் நோக்க
மனைவி என்முகம் நோக்க யாமும்
நின்முகம் நோக்கி வந்தனங் குமண

தம்பி பொருட்டு இராச்சியத்தைத் துறந்து காட்டகத் திருந்த, குமணவள்ளலிடம் ஒப்பிலாமணிப்புலவர் நொந்து கூறியது.

நொந்து கூறிய ஒப்பிலாமணிப்புலவர் கையில் தனது உடைவாளைக் கொடுத்து குமணவள்ளல் நொந்து கூறியது.

அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

இச்செய்யுளில் முதலடி இரண்டும் நொந்தாரைக் கண்டு நொந்து கூறியது. ஈற்றடி இரண்டும் ஒண்பொருள் கொடுத் தலிற்படும்.

**தாம் நொந்துளி இறைவனோடு நோதல்:—**

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்று யடிக்கே யிரவும் பகலும்
பிரியாதுவணங் குவனெப்பொழுதும்
தோற்று தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

நெஞ்சம் முமக்கே யிடமாக வைத்தே
னினையா தொருபோதுமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப்பதுகண்டறியேன்
வயிற்றோ டுதுடக்கிமுடக் கியிட
நஞ்சாகிவந்தென் னைநலி வதனை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
வீரட் டானத்துறையம் மானே.

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண்ட லையிற்பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
சுடுகின் றதுசூலைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர்சுற்றும் வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே.

முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந்துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதான்
அன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே.

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக்கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபாடன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னாவின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள்ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறை யம்மானே

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண்பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினல்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின்ற துசூலை தவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

வலித்தேன் மனைவாழ்க்கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம்மனமொன் று மிலாமையினல்
சலித்தா லொருவர் துணையாரு மில்லைச்
சங்கவெண் குழைக் காதுடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட்டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே.

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந்துகரந் துமிடீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போலிகளு மையினித் தெளியா
ரடியார் படுவதிதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறை யம்மானே.

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீ
ழடர்த்திட் டருள் செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கிபிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறை யம்மானே. (அப்பர்)

நொந்தார்வினை தீர்ப்பவனுமவனே! நோவாரைக் கண்டு நோவதினால் அவர்வினை தீர்ப்பவனும் அவனே! திருச்செங் காட்டங் குடியில், தலைவன் பாம்புதீண்டி யிறக்கப்பெற்ற தலைவி நொந்தழுவதைக் கண்டு, நொந்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்: —

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுன் மெலிவே.

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே.

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையு முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே.

என்றுவரும் பாடல்களை ஓதி இறைவன் அருளால் விடந் தீர்த்து மெலிவு நீக்கி உய்வித்தமை காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. நன்கினிது மொழிதல்:—

அன்பரோடு இனியனவே பேசத்தக்கது. அன்றிஅன்பரைப் புகழ்ந்துரை கூறலுமாம்.

(உ—ம்)

அப்பனீ யம்மைநீ யைய னுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூ ருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே.

சிலைத்தார் திரிபுரங்க டீயில் வேவச்
சிலைவளைவித் துமையவளை யஞ்சநோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத்தோடுங்
களிறுரித்த கங்காளா வெங்கள் கோவே
நிலத்தா ரவர்தமக்கே பொறையாய் நாளு
நில்லா வுயிரோம்பு நீதனேனுன்
அலுத்தே னடியேனை யஞ்சே லென்னு
யாவடுதண் டுறையுறையு மமரரேறே.

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

என்னும் அப்பர் திருத்தாண்டகங்கள் நன்கினிது மொழிதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. நலம்பாராட்டல்: —

அன்பனின் நலங்களைப் பாராட்டுதலும் அவன் அருளைப் புகழ்தலும்.

(உ — ம்)

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கினனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவா ரச்சோவே.

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருகஎன்
றஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே.

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசும்அறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதல் பிறப்பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

என்றவருந் திருவாசகங்களும்.

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டே
னெண்ணேடு பண்ணிறைந்தகலைகளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியிலேனைத்
தன்றிறமு மறிவித்து நெறியுங்காட்டி
அன்னையயு மத்தனையும் போலவன்பா
யடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக்கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேன் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேனே.

என்னும் அப்பர் திருத்தாண்டகமுங் காண்க.

28. புணர்வு நனிவேட்டல்:—

(உ—ம்)

சொற்பாலமுதிவள்யான் சுவையென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவளாம் பகுதிப்
பொற்பாரறிவார் புலியூர்ப்புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பாவியவரை வாய்க்கடிதோட்ட களவகத்தே.

[தன்
உணர்ந்தார்க்குணர்வரியோன் தில்லைச்சிற்றம்பலத்தொருத்
தோள்
குணந்தான் வெளிப்பட்டகொவ்வைச்செவ்வாயிக்கொடியிடை
புணர்ந்நாற் புணருந்தொறும்பெரும்போகம்பின்னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழலாளல்குல் போலவளர்கின்றதே.

(திருக்கோவையார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்பொற் குன்றைத் தோளாமுத்தை
வாளாதொழும் புகந்து
கடைபட்டேனை ஆண்டுகொண்ட
கருணாலயனைக் கருமால் பிரமன்
தடைபட்டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்தஎன்னாரமுதைப்
புடைபட்டிருப்பதென்று கொல்லோஎன்
பொல்லாமணியைப் புணர்ந்தே.

அல்லிக்கமலத் தயனும்மாலும்
அல்லாதவரும் அமரர்கோனுஞ்
சொல்லிப்பரவும் நாமத்தானைச்
சொல்லும்பொருளும் இறந்தசுடரை
நெல்லிக் கனியைத் தேனைப்பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வதென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்ததீவண்ணனே.
(அப்பர் தேவாரம்)

29. பிரிவு நனியிரங்கல்:—

அன்பனின் பிரிவால் அன்பன் இரங்குதலும் தலைவனின் பிரிவால் தலைவியிரங்குதலுமாம்.

(உ—ம்)

இன்னா தின்னில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு. (குறள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவியர் தலைவரின் பிரிவால் சாந்தும் அணியார் பூவும் சூடார் நீரும் ஆடாராகவருந்தியிருப்பர். அன்றித் தலைவரும் வருந்துவர்.

அருந்தும் விடமணி யாமணிகண்டன் மற்றண்டர்க்கெல்லா
மருந்துமமிர்தமுமாகு முன்னோன் றில்லைவாழ்த்தும் வள்ள
றிருந்துங் கடநெறிசெல்லுமிவ்வாறுசிதைக்கு மென்றால்
வருந்தும்மடநெஞ்சமே யென்னையாமினி வாழ்வகையே.
(திருக்கோவையார்)

பத்திமையும் அடிமையையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்
தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே.

ஐவணமாம் பகழியுடை யடன்மதனன் பொடியாகச்
செவ்வணமாந் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி
மையணவு கண்டத்து வளர்சடையெம் மாரமுதை
எவ்வணநான் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே.

வங்கமலி கடனஞ்சை வானவர்க டாமுய்ய
நுங்கியமு தவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே.
[சுந்தரர்]

உரியேன் அல்லேன் உனக்கடிமை உன்னைப்
பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென் றறியேன்
சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.
[திருவாசகம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கடையன்பு:—

தலையன்பும் இடையன்பும் மரபுதிரியின் கடையன்பாம். உலகம் கடையன்பிலேயே இயங்குகின்றது.

31. தலையன்பு மரபு திரிதல்: -

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்."

என்னும் திருமுருகாற்றுப்படையடிகளாலறிக.

சிறியதினையரிசியைப் பூக்களுடன் கலந்துவைத்து, ஆட்டுக் கடாவை வெட்டிக் கோழிக்கொடியை இடங்கள்தோறும் தூக்கி, ஊர்கள்தோறும் அமைக்கப்பட்ட சிறப்பு விழாக்களினும், அன்பர்கள் துதிக்க, அவர்கள் விரும்பிய இடங்களினும் வேலனாற்செய்த வெறியாடுமிடத்தினும் என்றவிடத்து, இங்கு கூறப்பட்ட ஆர்வலர் தலையன்போ, இடையன்போ உடையவரன்று. கடையன்புடையோரேயாவர். "வேலன்தைஇயவெறியவர்களனும்" என்றவிடத்து; வேலைத்தாங்கிய ஒருவன் வெறியாட்டமாடி, தலையன்புடையோருக்குத் தோன்றும் மெய்ப்பாடுபோல மெய்சிலிர்ப்புத் தோன்ற நாத்தடுமாற மெய்யெலாம் வியர்வை தோன்றக் குதித்தாடுவது. அங்கு தோன்றும் தலையன்பின் மெய்ப்பாடு தாமே வருவித்துக் கொள்வதன்றி, இயல்பிலே வருவதன்று. ஆதலால் அங்கு தோன்றும் அன்பெல்லாம் கடையன்பெனவே அமையும்;

32 இடையன்பு மரபு திரிதல்: —

சாவிற்சாதல்; நோவின்நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், நலம்பாராட்டல், புணர்வு நனிவேட்டல் பிரிவுநனியிரங்கல் முதலியன மரபு திரிதலாம்.

33. சாவிற்சாதலின் திரிபு:—

தலைவனின் சாதலால் தலைவி, இடையன்பின் நிமித்தத்தாற் சாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க) வாழ்க்கையை முனிந்து என்றோ சாவதை இன்றே சாவேன் எனச் சாதல்.

(உ) பிறர்நிந்தைக்கஞ்சி இருந்து சாதலினும் இன்றே சாதல் நன்றெனச் சாதல்.

(ங) புகழ்வேண்டிக் கணவரொடுசெத்தார் சுவர்க்கம்பெறுவர் எனப் பிறர் சொல்லக் கேட்டுச் சாதல், அங்கு தோன்றும்அன்பெல்லாம்மரபுதிரிந்துகடையன்பாகும்.

(2) இடருற்றோர் தொழுநோய் கொண்டார் முதலியோர் இறைவனை வேண்டிச் செத்தார் சுவர்க்கம் பெறுவாரெனச் சாதலும் பெறுமாதலால் அவர்காட்டும் அன்பும் திரிந்து கடையன்பாகும்.

34. நோவின் நோதலின் திரிபு:—

தாம் அன்பு செலுத்துவார்பால் நிகழும் நோ, தம்மையும் பீடிக்குமென்றஞ்சி நோவார் தம் அன்பும் திரிந்து கடையன்பாகும். இப்பாண்மையோரிடத்தும் உண்மையன்பின் மெய்ப்பாடாகிய கண்ணீர் வார்த்தல் போன்ற நிகழ்ச்சியைக் காணலாம்.

35. ஒண்பொருள் கொடுத்தலின் திரிபு:

(1) கணிகையர் கூட்டம் பொருளாலாவதாதலால் அவர் காட்டும் அன்பு திரிபுடையது.

அன்பின் விழையார் பொருள்விழையுமாய் தொடியார் ரின்சொ விழுக்குத் தரும்.

(2) புகழ்வேண்டிப் பொருள் கொடுப்பார் அன்பும் திரிபுடையது.

(3) சொயநலம் கருதிப் பொருள்கொடுப்பார் அன்பும் திரிபுடையது.

இப்பான்மையோர் காட்டும் அன்பெல்லாம் கடையன்பினுள் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நன்கினிது மொழிதலின் திரிபு.—

நன்கினிது கூறிப் பகைவரும் தம் கருமம் முடிப்பர் அவ்வகையினரின் அன்புந் திரிந்து கடையன்பினுட்படும்.

37. நலம்பாராட்டலின் திரிபு:—

பொருளிற் பற்றுடையோர், விடய இச்சையுடையோர், நலம்பாராட்டித் தம்கருமம் முடிப்பர். அவ்வகையினர் காட்டும் அன்பும் திரிபுடையது.

38. புணர்வு நனிவேட்டலின் திரிபு: —

தம்மில் வல்லோர் என்னும் அச்சத்தின் காரணத்தினுல் பொருளின் பற்றினுல், விடயஇச்சையின் காரணத்தினுல், புகழுடையோர் தம்கூட்டத்தின் மகிமையினுல், புத்திரப்பேறின் பற்றினுல் புணர்வுநனிவேட்டோர்போல் ஆர்வம்காட்டி,அன்பு காட்டிப்புணர்வோர்தம்அன்பும் திரிந்து கடையன்பினிற்படும்.

39. பிரிவு நனியிரங்கலின் திரிபு:—

சாந்தும் அணியார் பூவும்சூடார் நீரும் ஆடாராக அன்பில்லார் தாமும் இருப்பர். அன்னோர்காட்டும் அன்பும் திரிந்து கடையன்பாகும்.

40. மறமும் அறமும்:—

அறம் அன்றி மறம் நிகழ்வதற்கும் அன்பு காரணமாக உடையது. ஓராற்றுப்படும் அன்பினுலேயே மறம் நிகழ்கின்றது.

அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. [குறள்]

மறத்தை அறத்தால் நீக்கலாம் அன்றி மறம்நிகழ்தற்கும் அன்பே துணை என்பது அறியப்படும்.

கொள்ளையிடுவான் கொலைசெய்தான் என்றவிடத்து கொள்ளையிடுவோன் பொருளில் இருந்த கடையன்பின் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல், கொலைசெய்தான் என்பது உணரப்படும். அக்கொலையினும் ஒருவகை அன்பு உடன் நிற்பது காணலாம்.

மறத்தை அறத்தால் நீக்க உண்மைத் தலையன்பு வேண்டும். அஃதில்லாது மறம் நீங்காது.

ஒன்றுமனத்தாரிருவர்களு மூலகரறியா ரெனமறைவிற்
சென்றுபுக்குப் பிள்ளைதனைப் பெற்றதாயார் செழுங் கலங்க
ணன்றுகழுவிக்கொடுசெல்லநல்லமகனை யெடுத்துலகை
வென்ற தாதையார் தலையைப்பிடிக்கவிரைந்துமெய்த்தாயர்

இனியமழலைக்கிண்கிணிக்காலிரண்டுமடியின்புடையிடுக்கிக்
கனிவாய்மைந்தன் கையிரண்டுங் கையாற்பிடிக்கக் காதலனு
நனிநீடு வகையுறுகின்றாரென்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமாமகனைத் தாதையார் கருவிகொண்டு தலையரிவார்.

என்னும் சிறுத்தொண்டர் புராண செய்யுளில் சிறுத்தொண்டர் செய்த மறம் அன்பினல் அறமானது காண்க.

திருச்சிற்றம்பலம்

அன்பியல் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறஇயல்

## 1. அறநிலைப் பக்தி: -

இறைவனை அடைதற்குரிய பக்திமார்க்கத்தை அறநிலைப் பக்தி, வைராக்கியபக்தி என இரண்டு விதமாக வகுக்கலாம்.

நீதியான நெறிமுறையில் நின்று அறியாமை என்னும் அறிவை அகற்றி, அறிவுகொண்டு அறிவினுள் நிற்கும் பொருளை அறிச்து கேவலத்திற்தள்ளும் அந்தக்கரணங்களின் துர்க்கிரியைகளிற் கூடாது அன்பால் இறைவனைத் தொழுது தான்செய்யும் கருமங்களைப் பற்றற்றுச் செய்து, ஞானச் சிறப்பாகிய தியானம்பண்ணி நிற்றல் அறநிலைப்பக்தியாம். அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையும் ஒழுக்கமும் இதற்கு உதாரணமாக உள்ளது.

சைவசமய நெறியும், தொண்டரின் மாண்பும் இலட்சணமும்
அருள்கொண்ட வுணர்வின்றி, நெறிகொண்ட அறிவென்று
மருள்கொண்ட பல்லவமன்னனின் தூதரைப்பார்த்து
**திருநாவுக்கரசு சுவாமிகள் கூறிய அறநிலை**
மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங் குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமொன்றுமீளா வாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

அசலிடமே யிடமாக வூர்கடோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்காரையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிடமா மம்பலங்கள் பூமிதேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்றுமெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்கடீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற்றோமே.

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழப்பெற்றோ
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.

உறவாவா ருருத்திரபல் கணத்தினோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவாமன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமைதானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவாயச் சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாருமில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழித்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுருவின் முதலுருவா யிருநான்கான
மூர்த்தியே யென்றுமுப் பத்துமூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாதரான
காவலரே யேவிவிடுத் தாரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற்றேமே.

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமா யருமையாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானுமியானு
மாகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற்றேமே.

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற்றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலுநினையப் பெற்றோ
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசகமெல்லா மறந்தோ மன்றே
வந்நிரார் மன்னவனு வான்றானுரே.

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதன்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவார நம்பனையே பாடப்பெற்ருே
நாணற்ருர் நள்ளாமே விள்ளப் பெற்ரும்
ஆவாவென் றெமையாள்வா னமரர்நாத
னயனெடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் ருனேவந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென்ருலுங்
குணமாகக் கொள்ளோமெண்குணத்துளோமே. (10)

2. அறம்: —

அறம் என்பது தர்மம், அதுபசுஅறம் பதிஅறம் என இரண்டு வகைப்படும்.

3. பசுஅறம்: —

"மனத்துக்கண் மாசிலனுத லனைத்தறன்
ஆகுல நீர பிற"

பிறர்மேம்பாட்டைக் கண்டு பொருமை கொள்ளுதலும், ஐம்புலன்களினுல் வரும் ஆசையும், அவை காரணமாகப் பிறர் மேல் கொள்ளும் கோபமும், அதுபற்றி வரும் கடும்வார்த்தைகளும் ஆகிய நான்கும் கெட்ட செய்கைகள் என்று வெறுத்து ஒழுகும் ஒழுக்கமே அறம் என்று சொல்லப்படும்.

அழுக்கா றவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். [திருக்குறள்]

உண்மையும் பொறுமையும் மேன்மையும் தவமும் அடக்கமுடைமையும் நடுநிலைமையும் பிறர்க்கென வாழ்தலும் பற்றுவிடுதலும் நல்லன செய்தலும் மாறுபடாத விரதங்களை மேற்கொள்ளுதலுமாகிய பத்தும்மேலானகுணங்களாகிய பசுஅறம் எனக்கொள்க.

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடமை—நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம், [அறநெறிச்சாரம்]

4. பதிஅறம்:—

இறைவனின் திருவருள் அறமயமாக அன்பாக உடையது பதியின் திருவருள் இல்லாவிட்டால், உயிர்களும் உலகங்களும் நிலைத்திருக்க முடியாது.

நன்மை செய்தால் நன்மையும், தீமை செய்தால் தீமையும் ஆன்மா அனுபவிக்கின்றது. அவ்வனுபவம் முடிந்ததும், ஆன்மா ஓர் தர்மமான நெறியில் செல்கின்றது. அது சிவனின் திருவருளாலாகிய அறக்கிரியையேயாம். உயிர்கள் யாவற்றை யும் படைத்து, காத்து, மறைத்து, ஆணவமலத்தோடு கேவல மாக நிற்க ஒடுக்கி, மும்மலங்களையும் ஒருங்கே போக்கி அரு ளைச்செய்யும் கடவுள்எக்காலத்தும் உயிர்களுக்குநீங்காதாதார மாக உள்ளவன்.

ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல். [திருவருட்பயன்]

5. பதியின் ஐந்தொழில்:—

படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்னும் ஐந்துதொழில்களும் சிவகிரியை எனப்படும். சிவ கிரியைகளைந்தும் பதியின் நித்தமான அறக்கிரியைகளேயாம். அவை நற்கிரியைகளேயன்றித் துர்க்கிரியைகள் அல்ல. துர்க் கிரியைகளை ஆன்மாக்கள் தாமே தேடிக் கொள்வதன்றி இறைவன் கொடுப்பதில்லை.

யாது மூரே யாவருங்கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந் தன்று மிலமேமுனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலை இ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.
என்னும் புறநானூற்றுச் செய்யுள்காண்க.

## 6 - ஐங்கிரியையின் நோக்கம்:

சிவனின் ஐந்தொழில்களின் நோக்கம் ஆன்மாக்களுக்கு மலத்தைப் போக்கி சிவத்தின் திருப்பாதத்தைப் பற்றும் நிலைமையைக் கொடுத்தலேயாம். இக்கிரியையின் பகுதி, தூலம், சூக்குமம், காரணம், கூடத்தம், பிரமம் என ஐவகைப்படும்.

**தூலம்** என்பது, ஐம்புலன் ஒன்றினல் அறியப்படும் சடப் பொருள்.

**சூக்குமம்** என்பது தூலப்பொருள் தோன்றுவதற்குக் காரணமாக உடையபொருள், இஃது தூலப் பொருளின் இன்மையின் எதிர் மறைத்தத்துவம். உலகம் இன்மை என்னும் எதிர்மறைத் தத்துவத்திலேயே தோன்றி நிற்கின்றது.

உதாரணம்:— நாதம் செவிப் புலனின் வைகரிவாக்காகக் கேட்கின்றது. நாதம்பாயும் வேகம் செக்கன் ஒன்றிற்கு 1200 அடிகள். நாதம் ஒலிபரப்பிமூலம் பாயும்பொழுது சூக்குமை வாக்காக மாறி ஒளியைப்போல் செக்கன் ஒன்றிற்கு 186000 மைல் வேகத்தில் பாய்கின்றது. வைகரி வாக்கின் எதிர்மறை சூக்குமை வாக்கு, என்பது போல் தூலத்தின் எதிர்மறை சூக்குமம்.

**காரணம்** என்பது சூக்குமத்திற்குக் காரணமாக இருப்பது. காரணம் இல்லாது காரியம் தோன்றுவதில்லை. ஆன்மா பிறவிக்கிரமத்தில் தேர்ச்சி அடைந்துகொண்டேபோகின்றது. அத்தேர்ச்சியே காரணசரீரத்தின் வளர்ச்சியாம். கன்மங்கள் காரண சரீரத்தைப் பற்றியே பரிபக்குவமாகின்றன. காரண சரீரத்திலிருந்தே சூக்குமதூலசரீரங்கள் ஏற்பட்டு வினைநுகரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பிறவியும் விர்த்தியடைவதற்கு காரணமாகின்றது. அனுதிமலத்துள் கிடக்கும் ஆன்மாவிற்கு திருவருள் கொடுத்து முத்தியளிப்பது இறைவன் காரணமாதலால் வினையும் பிறப் பிறப்பும் காரியமாகின்றன.

கூடத்தம் என்பது காரணத்தின் சிதைவு அல்லது காரணம் தோன்றுவதற்கு கூடும்தன்மை. அவை பிரமத்தின் பற்றுவரவாம்.

பிரமம்—என்பது பொருள்களின் நித்தமான நிலை. நாம் காணும் பொருள்கள் அழிந்து கொண்டு போகின் தூலம், சூக்குமம், காரணம், கூடத்தம் என்றும் நிலைகளிற் றிரிந்து பிரமம் என்னும் நிலையில் மாயையில் ஒடுங்கி நாதத்துவமாக நித்தமாயிருக்கும். திரும்பவும் தோன்றும்பொழுது பிரமம் கூடத்தம், காரணம், சூக்குமம், தூலம் என்னும் முறைமையிற் தோன்றும். இறை நித்தமாக இருப்பதுபோல் பொருளும் திரிந்து நித்தமான நிலையடைவது பிரமம்.

கூடத்தம் என்னும் நிலையில் சத்தம், பரிசம்
இரண்டும் பொருந்தியதாகவும்
காரணநிலையில் சத்தப், பரிச, ரூபம் மூன்றும்
பொருந்தியதாகவும்
சூக்கும நிலையில் சத்தப் பரிச ரச ரூபம்
நான்கும் பொருந்தியதாகவும்
தூலநிலையில் சத்தப் பரிச ரச ரூப கந்தம்
என்னும் ஐந்தும் பொருந்தியதாகவும் இருக்கும்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு.

என்னும் வள்ளுவர் வாக்குக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூலப் பொருள்களையே நாம் பார்த்தும், கேட்டும் சுவைத்தும் மோந்தும், பரிசித்தும் அறிகின்ருேம். தூலப்பொருள், களின் படைப்பு மகாபஞ்சகிருத்தியம் நித்திய பஞ்சகிருத்தியம் என இரண்டு வகைப்படும்.

7. மகாபஞ்ச கிருத்தியம்:—

மகாபஞ்ச கிருத்தியத்தில் படைத்தலாவது:- பிரமம் கூடத்தம், காரணம், சூக்குமம், தூலம் என்னும் முறைமையில் உலகங்களையும் சூரிய சந்திராதியாம் கிரகங்களையும் தோற்றச் செய்வது.

காத்தலாவது; அவைகளை நிலைபெறச் செய்வது;

மறைத்தலாவது; ஆணவமலத்தை மறைத்து அதன்வீரியத்தைத் தடுத்தல்.

அருளலாவது; சர்வசங்கார காலத்து பரிபக்குவமான ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடுத்தல்.

அழித்தலாவது; கர்மமலம் பரிபாகப்படநிகழ்வது. படைத்தலும் காத்தலும் கர்மமலம் அனுபவித்தழிப்பதற்கும் மறைத்தல் கிரியைக்கும் ஏதுவாக நிகழ்வன.

தோன்றும்பொருள் அழிவது திண்ணம். அது கர்மக் கிரியை. அழிந்த பொருள்கள் தோன்றுவது இறைவனின் திருவருள். அது கர்மத்தின் கிரியையன்று. அத்திருவருள் இல்லாவிட்டால், அழிந்தபொருள் முற்ருக அழிந்துவிடும். பின்தோன்ற மாட்டாது. உலகம் அழியாத பொருளாகத் தோன்றுகின்றது. அவற்றில் நாமும் சராசரங்களும்தோன்றி நின்று அழிந்துகொண்டிருக்கின்ருேம். சூரியன் பூமியிலும் பார்க்க 13,31,000 மடங்கு பெரியது. அதனை 1200 கிரகங்கள் வரை சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றன. இவையாவும்சேர்ந்து ஒரு அண்டமாகும். இராக்காலத்து ஆகாயத்தைக் கூர்ந்து அவதானித்தால், அனந்தகோடி நட்சத்திரங்கள் பிரகாசிப்பதைக் காணலாம். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் போன்றது. சிலநட்சத்திரங்கள் எமது சூரியனினும் பல்லாயிரம் மடங்கு பெரியன. அவைகளைச் சுற்றி அனந்தம் பூவுலகங்கள் உள. அவைகளுள் சில பூவுலகங்களில் மக்கள் பிறந்தும் இறந்தும் சீவித்துக்கொண்டும் இருக்கின்றார்கள்.

ஓரிடமழியப்பின்னு மோரிடநிற்கு மொக்கப்
பாரிடமழிவதின்று மென்றிடிற் பயில்வித்தெல்லாங்
காரிடமதனிற்காட்டு மங்குரங்கழியும் வேனிற்
சீருடைத்துலகுகாலஞ் சேர்ந்திடப் பெயர்ந்துசெல்லும்.
சித்தியார்.

சூரியனும் அதனைச்சுற்றியோடுங் கிரகங்களும்சேர்ந்த அண்டம் அழிந்தால், பின் ஓரிடத்தில் அவ்விதம் அழிந்த பொருள்கள் திரும்பவும் ஓர் அண்டமாகிக் காலகதியில் தோன்றும். காலகதியில் தோன்றுவன அழிவதும் அழிந்தன தோன்றுவதும் இறைவனின் திருவருளாகிய அறக்கிரியை. அது ஆன்மாக்களுக்கு முத்தியளிக்கும் பொருட்டு நிகழ்வது.

5. நித்திய பஞ்சகிருத்தியம்:—

நித்திய பஞ்சகிருத்தியத்தில்,

படைத்தலாவது; ஆன்மாதாலசரீரத்தோடுதோன்றுவது. அத்தோற்றம், இன்ன ஆன்மாவிற்கு தனு, கரண, புவன, போகங்கள் இத்தன்மையது இவ்வளவினது, என்னும்பிராரத்துவத்தோடு தோன்றுவது.

வினைகளின் நுகர்ச்சி, சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூன்று விதமாகத் தோன்றும்.

சஞ்சிதவினையாவது; ஆன்மா பலசென்மங்களில் செய்த நல்வினை தீவினைகள். ஒருவன் பணத்தைத் தேடி வங்கியிற் போட்டு வைத்திருந்தால், தேவையான நேரம் எடுத்துச்செலவு செய்கின்றான். இதுபோன்றதே சஞ்சிதவினை. சஞ்சிதவினை ஒருவன் தேடிவைத்திருக்கும் நிதிக்குவியலைப்போல் திரண்டிருக்கும். அதில் இருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனு**—சரீரம், இன்ன வடிவினது என்றும்.

**கரணம்**—செய்கைகள்; அந்தக்கரணங்கள் புறக் கரணங்கள் இன்ன தன்மையன என்றும்.

**புவனம்**—வசிக்கும் உலகம்; இன்ன இடம், இன்ன காலம், இன்ன நியதி என்றும்.

**போகம்**—நுகரப்படும் பொருள்; இன்னவிதமான அனுபவம் உடையது என்றும் விதிக்கப்படுவது.

பிராரத்த வினையாவது; ஆன்மா ஒரு பிறவியில் அனுபவிக்கும் சஞ்சிதவினைப்பகுதி. தனு, கரண, புவன, போகமும் காலஎல்லையும், இதனால் நிச்சயிக்கப்படும். பிராரத்தம் எப்பொழுது முடிகின்றதோ அக்காலத்து ஆன்மாவின் தூல சரீரம் அழியும். அந்த அழிவு நியதல்ல நல்லதே. இறைவனின் திருவருள் மறைத்தல் கிரியையைக் கொடுத்து ஆன்மாவை ஈடேற்றும். அன்றியும் அவ்வான்மா அப்பிறவியில் தீவினை பலசெய்திருப்பின் திரும்பவும், அவ்வினைக் கீடாகிய பிறவியைக் கொடுத்து அனுபவம்மூலம் தன்னை உணரச் செய்யும்.

ஆகாமிய வினையாவது; ஆன்மா ஒவ்வொரு பிறவியிலும் பிராரத்துவ வினையை நுகருவதுடன் இச்சை வசத்தால் புதுப் புது நல்வினையையும் தீவினையையும் செய்யும். அவை ஆகாமியம் எனப்படும். அவ்விதம் செய்யும் வினைகள் சிலவற்றை அப்பிறவியில் அனுபவிக்கவும்கூடும். அவ்விதம் அனுபவியாத வினைகள் நின்று சஞ்சிதத்தோடு கூடி அடுத்த பிறவியில் பிராரத்துவ வினையாக நுகரப்படும். சிலவினைகள் இரண்டு மூன்று பிறவிகளுக்கும் தொடரும்.

ஒரு ஆன்மா ஆகாமிய வினையைச் செய்யும்பொழுது அது திருட்டம், அதிருட்டம், திருட்டா திருட்டம் என மூன்று வகையாகத் தொழில்கொள்ளும்.

திருட்டமாவது; வினைசெய்யப்பட்ட பிறவியிலேயே பயனைக்கொடுப்பது.

அதிருட்டமாவது; வினைசெய்த பிறவியிலே பலனைக் கொடாது, மறுபிறவியிலே கொடுப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டாதிருட்டமாவது; வினைசெய்தபிறவியிலும்பலனைக் கொடுத்து மறுபிறவியிலும் பயனைக் கொடுப்பது.

உதாரணம்:- (1) ஒருபாதகத்தைச் செய்தவர் அப்பிறவியிலும் அப்பாதகத்திற்காக வருந்தி மற்றப் பிறப்பிலும் துன்பத்தை அனுபவிப்பர்.

(2) சிலவள்ளல்கள்பொருளைக் கொடுக்கும்பொழுதும் இன்புற்று மற்றப்பிறவியிலும் அக் கொடைப் பலனுக்காக இன்புறுவர்.

காத்தலாவது; படைத்தவற்றை நிலைபெறச் செய்வது. அது தூலசரீரத்தை பிராரத்தவினை கூடுதலாகவும் குறைதலாகவும் அனுபவியாது காத்து நிற்றலாம்.

மறைத்தலாவது; ஆணவவலியைத் தூண்டி கர்மத்தை அனுபவிக்கச் செய்து ஆணவவலியைக் கெடுத்தல். பிறவியில் ஆன்மா கீழ்நோக்கிப்போக ஏதுஇல்லை. ஆனல் ஆகாமியத்தால் வினைகளை அதிகம் செய்யுமாயின் நீண்டகாலத்தில்தான் இறைவனை அறிய முடியும். அதிகம் தீவினை செய்யின் அனேகம் பிறவிகளிற்ருன் தன்னை அறியமுடியும்.

அழித்தலாவது; பிராரத்தவினையின் அனுபவம் முடிந்ததும் ஆன்மா தூலஉடம்பில் இருந்து பிரிக்கப்படுகின்றது. அழித்தற்கிரியை ஆன்மா தூலஉடம்பை விட்டுத்திருவடி சேர்தற்கு நிகழும். அன்றி ஆகாமிய வினையோ அல்லது சஞ்சிதவினையோ பரிபக்குவமாவதற்கு நிகழும். ஆனல் பிராரத்தம் முடிந்தால் ஆன்மா தூலஉடம்பிற் கணமுந் தரியாது.

அருளலாவது; ஆன்மாவின் ஆணவமலம், மாயாமலம் யாவும் கெட்டபின், இறைவன் அருளும் முத்தியின்பமாகிய பேரருட்சித்தி. ஆன்மா இறைவனின் திருவடிசார அருளப்படும் சிவகிரியை யென்றும்சொல்லலாம். ஆன்மாபிறவிகளில் விருத்தியடைவதற்கும் இக்கிரியை காரணமாக உடையது.

இறைவனின் அருளல் கிரியையாகிய திருவருள் இல்லாவிட்டால் மனிதர் என்றும் மனிதராகவும், மிருகங்கள்என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களாகவும், விருட்சங்கள் என்றும் அதே விருட்சங்களாகவும் இருக்கும். கன்மம் நிகழாது பொருள்கள் பழையன புதியன என்னும் மாற்றங்களடையா.

9. பசுபதி பாசம்:—

பசு பதி பாசம் மூன்றும் நித்தம். அவை என்றும் அழிவதில்லை.

பிரபஞ்சம் ஒரு பொருளிலிருந்தே தோன்றியது. அது அழிவுடையது. அவற்றைப் படைத்தளிக்கும் தன்மையால் இறைவன் ஒருவன் உளன் என்பதும், அவனே பிரமா விட்டுணு, உருத்திரன் எனமும்மூர்த்திகளாகிபடைத்துகாத்து மறைத்து அழித்து அருளிச் செயல்கொள்வன் என்பதும், காண்டல், கருதல், உவமம், ஆகமம் என்னும்நான்கு அளவைகளால் அறியப்படும். அவ்விதம் அறியப்படும் இலக்கணம் பசு, பதிபாசவிலக்கணம்என்றுசொல்லப்படும். பசு=ஆன்மா பதி=இறைவன். பாசம்=பசுவுக்குப் பதியை மறைத்து நிற்கும் மலம். இம்மூன்று பொருள்களில் பாசம், ஆணவம் கன்மம், மாயை என மூன்றாக விரியும். அவற்றுள் மாயையும் சுத்தமாயை அசுத்தமாயை என இரண்டாகவிரியும். எனவே பசு, பதி, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் ஆறுபொருள்களும், என்றும்அழியாத பொருள்கள்

ஏகனேக னிருள் கரும மாயையிரண்
டாகவிவை யாறு தி யில். (திருவருட்பயன்)

10. பதிலட்சணம்:—

பதியின் குணங்கள் எட்டெனு சைவாகமத்தாலும் "எண் குணத்தான் தாளை வணங்காத் தலை" என்றுகூறும் வள்ளுவர் தம்பொன்மொழியாலும் அறிகின்றோம்.

(1) அசைவற்ற என்றுமுள்ள விசுத்த தேகத்தினர் (2) இயற்கையறிவினர் (3) எல்லாமறிபவர் (4) மலமில்லாதவர் பாசத்தால் நீக்கியவர் (5) சுவதந்திரர் (6) அனந்தசத்தியுடையவர் (7) பரிபூரணர் (8) பேரருள் உடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகரவுயிர்போல அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து" [திருவருட்பயன்]

இறைவன், ஆன்மா, பாசம், மூன்றும் நித்தமானவையாயினும் இறை ஒருவரே எங்கும்வியாபகமாகஇருப்பர். ஆன்மாவும் பாசங்களும் அழியாத பொருள்களேயன்றி எங்கும் வியாபகமாக ஒரேதன்மை யுடையவை யன்று. தானேயும் அதுவாயும் அதுவல்லாமலும் தத்துவங்கள் யாவற்றையுங் கடந்தும் நிற்கும்பொருள் பதிஒன்றே.

## திருவெழுகூற்றிருக்கை

ஓம்

**திருப் பிரமபுரம்** திருச்சிற்றம்பலம்

பண்—வியாழக்குறிஞ்சி.

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றுகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துறை யவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பெருங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னன்கும்
மூன்றுகாலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்
அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

[இப்பதிகத்தை ஓதின் அடங்கன்முறை முற்றும்
ஓதிய பேறுண்டாம்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருவெழுகூற்றிருக்கைத் திருவாக்கால் நிறைவும், தோற்றமும், பரிபூரணமும் அறிக.

உலகத்தை நாம் ரூபமாகக்காண்கின்றோம். வாயு முதலிய பொருள்களை அரூபமாக அறிகின்றோம். இறைவன் இத்தன்மை இரண்டுமல்லாதவர்; ரூபியுமல்லர் அரூபியுமல்லர், எங்கும் பரிபூரணமாக ஒரே தோற்றமுடையவர்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்ல
னொரூர னல்ல னொருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ் வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ் வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே.
என்றார் அப்பர் சுவாமிகளும்

தேனென்று பாகென்றுவமிக்கொணாமொழித்தெய்வவள்ளி
கோனன்றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்றசரீரியன்று சரீரியன்றே.
என்னுங் கந்தரலங்காரச் செய்யுளும் காண்க.

11. பசு இலட்சணம்:—

பசுவும் பதியும் அத்துவிதம்என்ப. பதிஒருவன் பசுக்கள் அனந்தம், பதிக்குமுன் அனந்தகோடி பசுக்கள் யாவும் சூனியமாக உடையன. சூனியமென்பது சூரியனுக்குமுன் தெரியும் சந்திரப்பிரகாசம் போன்றது. சூரியப்பிரகாசமும் சந்திரப்பிரகாசமும் மயங்கி சூரியப்பிரகாசம்போற் பகலில் தெரிவது அத்துவிதநிலை. அதுபோல் இறைவனோடு ஆன்மா வேறற நிற்குமாதலால் அது அத்துவித மென்று சொல்லப்படும்.

பசுவும் பதியும் அத்துவிதமாயினும் பசு பாசங்களினால் கட்டுண்ட பொருள். தானாக எதையும் அறியுந்தன்மையில்லாதது. அறிவிக்க அறிவது. நித்தப் பொருளாயினும் இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனின் தன்மையதல்ல. நாமறியும் பொருள்களில் ஆன்மா ஒன்றே இறைவனின் பாதத்தைப் பற்றவல்லது.

ஆன்மா என்று சொல்லும் புருடனும் செய்யப்படும் நல்வினை தீவினைகளும், அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களும் அவற்றை அனுபவிக்கப்பண்ணி திருவருளளிக்கும் கடவுளின் திருவருளும் ஆகிய இந்த நான்கினையும் ஈடேற்றுவதற்காகப் பொருந்தும் பொருள், ஆன்மாஒன்றே.

செய்வானுஞ்செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு
முய்வா னுளனென் றுணர்.

என்னும் திருவருட்பயனால் அறிக.

ஆன்மா, வினைகளை நுகராது இறைவனை அடைய முடியாது வினைநுகர்ச்சியே மலபரிபாகத்துக்குக்காரணமாதலால் ஆன்மா பிறந்தும் இறந்தும் உழன்றே இறைவனை அடைய முடியும்.

உடம்போடு உயிர் எவ்விதம்ஒற்றுமையாகவும் வேறறவும் நிற்கின்றதோ, அதுபோல் இறைவனும் ஆன்மாவோடுவேறற நிற்கின்றான். உயிர் இல்லாத உடம்பு எவ்விதம் செயலற்றிருக்குமோ, அதுபோல் இறைவன் ஆன்மாவோடு இல்லையாயின் ஆன்மாவும் செயலற்றதாகும்.

12. மூவகை ஆன்மா:—

ஆன்மாக்களும் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். இவ்மூவகை யான்மாக்களில் ஒவ்வொன்றும் அதனதன் தன்மாத்திரை பெற்றும் தூலசூக்கும, காரண வேறுபாடுகளாலும் பலராக விரியும். ஆயினும் யாவும் இம்மூன்று பகுப்பினுள் அடங்கும்.

சகலர்; என்னும் சொல்லிற்கு யாவரும் அல்லது பொதுவானவர்என்பதுகருத்து. சித்தாந்தரீதியாக கூறின் மும்மலங்களும் உள்ளவர்களே சகலர் என்பர்.

பிரளயாகலர்; என்னும் சொல்லிற்கு; பிரளயத்தில் கலை நீங்கப்பெற்றவர் என்பது கருத்து. ஆதியந்தம் பிரளயம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.

என்பது பிரளயத்தின் ஓர்எல்லையைக் குறிக்கும். ஆன்மா பிரளயத்தில் மேற்கூறிய பிறவிகள் பலவும் ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து முடிவில் இறைவன் திருவடி சேர்தற்குரிய தென்பது இதன் கருத்தாம்.

விஞ்ஞானகலர்; என்னும் சொல்லிற்கு, விஞ்ஞானத்தாற் கலை நீங்கியவர் என்பது கருத்து. தத்துவ ஆராய்ச்சி விஞ் ஞானமெனப்படும்.

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பன முதற்
றேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கி றக்கும்
விரிவாய பூதங்க ளொன்ருெ டொன்ரு யழியு
மேற்கொண்ட சேட மதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேதவே தாந்த ஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
பெற்றேர்கள் பெற்ற பெருமை
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து
பேசாமை யாகு மெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந் தமே.

என்னும் தாயுமானவசுவாமி செய்யுள் விஞ்ஞானகலை யுணர்ச்சியேயாம். தோன்றியவை அழியும். அழியாது இருக் கும் பொருள்கள் யாவைஎன்பதும்இச்செய்யுளாலறியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலர்க்கு; ஆணவமலம் தூலாதாரமாக உடையது. ஆதலால் சகலர் மும்மலத்தாற் பீடிக்கப்பட்டவர்கள்.

பிரளயகலர்க்கு; ஆணவவலி தூலமாக உடையது. ஆதலால் கன்ம மலத்தால் பற்றப்படார். பிரளயகலர் ஆணவ மலத்தோடு மாயாமலம் ஒன்றே தாக்கப்படுபவராதலால் இரு மலத்தார் எனப்படுவர்.

விஞ்ஞானகலர்க்கு; ஆணவமலம் சூக்குமமாக உடையதாதலால் மாயாகன்ம மலங்களாற் பற்றப்பட மாட்டார். ஆதலால் விஞ்ஞானகலர் ஒரு மலத்தார் எனப்படுவர்.

முற்கூறிய மூவகை ஆன்மாக்களில்சகலர்பிரகிருதி மாயா புவனங்களிலும்பிரளயகலர்சுத்தாசுத்தமாயாபுவனங்களிலும் விஞ்ஞானகலர் இப்புவனங்களைத் தாண்டியும் வாழ்வர்.

இப்புவனங்கள் யாவும், இப்பூவுலகத்திலேயே இருக்கின்றனவன்றி வேறுபுவனங்களன்று. ஆன்மா எமது சரீரத்தில் ஆறு ஆதாரங்களில் உறங்கியிருக்கும்.

## 13. ஆறு ஆதாரம்:—

மூலாதாரம். சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகரம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறும் ஆதாரங்களாம். இவ்வாறு ஆதாரங்களும் முருகக் கடவுளுக்கு ஆறுமுகங்களாகக் கற்பிக்கப்படுகின்றன.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே.

என்னும் திருப்புகழ் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியை மணம் புரியுமாறுகொண்டமுகம்மூலாதாரத்து உறக்கத்தைக் குறிக்கும் முகம் என்பது கருத்து.

திருமுருகாற்றுப் படையினும் ஆறுமுகங்களும் இதே கிரமத்தில் தெளிவாகக் கூறப்படுகின்றன.

மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம்; ஒருமுகம்
ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர்வேள்வி யோர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே.

திருமுருகாற்றுப்படை 91—103.

மூலாதாரத்து முகம் அகத்துறைகளுள் உள்ள இலட்சணங்களை அறிவது. சுவாதிட்டானத்து முகம் புறத்துறையுள் உள்ள, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணை இலட்சணங்களை அறிவது. (ஒழிபியல்காண்க) மனதின் உறக்கம் விர்த்தியாக அவர்களின் வாழ்க்கையும் விர்த்தியாகி இம்மாயாபுவனங்களைத் தாண்டி வாழ்பவராகக் கருதப்படுவர் மனம் மேற் சொல்லிய ஆறு தாரங்களுள்ளும் ஐந்தவத்தையுறும்.

## 14. ஐந்தவத்தை:—

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன.

சாக்கிரம்; என்பது நினைவு.

சாக்கிரநிலையில்: ஞானேந்திரியம் ஐந்தும்கன்மேந்திரியம் ஐந்தும் சப்தாதி ஐந்தும் வசனாதி ஐந்தும் தசவாயுக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கரணம் நான்கும்புருடதத்துவமுமாகிய முப்பத்தைந்து கருவிகள் தொழிற்படுமென்ப.

சொப்பன மென்பது கனவு.

சொப்பனநிலையில் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்துமாகிய பத்துக்கருவிகள் இல்லாது இருபத்தைந்து கருவிகள் தொழிற்படு மென்ப.

சுழுத்தி என்பது உறக்கம்.

சுழுத்திநிலையில் சித்தம், பிராணன், புருடன் ஆகிய மூன்று கருவிகள் தொழிற்படும்.

துரியம் என்பது பேருறக்கம்.

பேருறக்க நிலையில் பிராணனும் புருடனுமாகிய இரண்டு கருவிகள் தொழிற்படும். நோய் துன்பம் உற்றுஅறிவில்லாது இருக்கும் நிலைஇது.

துரியாதீதம் என்பது அதியுறக்கம்.

அதியுறக்க நிலையில் புருடன் ஒன்றேதொழிற்கொள்ளும். இது ஆன்மா பிரியும் நிலைஎன்றும் கொள்க. மீளவும் உரித்தாம்.

துரியம், தூரம்; துரியாதீதம் இன்னும் தூரம் என்பது போல் இதில் உறக்கம், பேருறக்கம், அதியுறக்கம்என மூன்று நிலைகொள்க.

இங்கு கூறப்படும் கருவிகளும், பூதம் ஐந்தும் வித்தியா தத்துவம் ஏழும் சிவதத்துவம் ஐந்தும் போக்குவரவுக்குக் காரணமாக இருப்பவை யாதலால், ஆன்மதத்துவங்களோடு சேர்க்கப்படமாட்டா.

மூலாதாரம் முள்ளெலும்பின் அதி கீழ்ப்பாகத்தோடு பொருந்தியிருப்பது.

சுவாதிட்டானம் தொப்பூழுக்கும் மூலாதாரத்திற்கு மிடையே பொருந்தியிருப்பது.

மணிபூரகம் தொப்பூழைப் பொருந்தியிருப்பது.

அனுகரம் மார்புத்தானத்தைப் பொருந்தியிருப்பது.

விசுத்தி கண்டத்தானத்தைப் பொருந்தியிருப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்ஞை நெற்றிப்பாகத்தைப் பொருந்தியிருப்பது. இது சுழுமுனை என்றும் சொல்லப்படும்.

இங்கு கூறப்பட்ட ஆருதாரத்துள்ளும் நிலை கொள்ளும் ஐந்தவத்தையும் நிர்மலா அவத்தை, யோகா அவத்தை, சகலா அவத்தை என மூன்று வகைப்படும்.

**நிர்மலா அவத்தையில்,** ஆன்மா புறக்கரணம் உட்கரணங்களோடு கூடியிருப்பது சாக்கிரம். உட்கரணங்களோடு கூடியிருப்பது சொப்பனம். விருப்பு வெறுப்பின்றி சலன மற்ற மனத்துடன் இருப்பது சுழுத்தி. மனத்தை ஒடுக்கி ஞானமயமாக இருப்பது துரியம். சிவத்துடன் ஐக்கியப்பட்டிருப்பது துரியாதீதம்.

**யோகஅவத்தையில்;** பிரத்தியாகாரம்,சாக்கிரம்என்றும் தாரணை, சொப்பனம் என்றும், தியானம் சுழுத்தி என்றும், சமாதி துரியம் என்றும், சிவதரிசனை துரியாதீதம் என்றும் சொல்லப்படும்.

**சகலாஅவத்தை** சாதாரண நிகழ்ச்சியாம். இதுவன்றி சகலர், பிரளயகலர், விஞ்ஞானகலர், என்னும் பேதத்தினல் மனதின் உறக்கம் ஆருதாரத்துள் ஒரு ஆருதாரத்தைப் பொருந்தியிருக்கும். மூலாதாரத்தில் மனமுறக்கமுள்ளவர்கள் இன்பமும் பொருளும் கருத்தாக வாழ்பவர் உலோகாயுதர் என்று சொல்லலாம்.

மூலாதாரத்திற்கு மேற்கொண்ட ஆதாரங்களில் மன உறக்கம் உள்ளவர்களே, அறம், நீதி முதலிய வுடையவராவர்

மனதின்உறக்கத்தை விருத்தி பண்ணுவது சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய அனுட்டானங்களில் உள்ளது.

**15 சரியை—:**

திருக்கன்ருப்பூர் திருத்தாண்டகத்தால் சரியை விதிகளை திருநாவுக்கரசுசுவாமிகள் தெளிவாக விளக்கிக் கூறுகின்ருர். அவற்றுள் மூன்று திருத்தாண்டகங்களை இங்கு தந்தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பா யென்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றும்
துடியனைய விடைமடவாள்பங்கா வென்றுஞ்
சுடலைதனி னடமாடுஞ் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழு மடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
வுகந்தடிமைத் திறநினைந் தங்குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவர்க்கும் பிச்சையிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்ச
முண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

**16 கிரியை:—**

பதிபூசை சிவபூசை முதலியன கிரியையில் அடங்கும். பின்வரும் தேவாரங்களுங்கிரியைவிதிகளை விளக்கிக் கூறும்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே, (அப்பர்)

17 **யோகம்:—**

காப்பனகாத்துக் கடிவனகடிந்து வினைகளைச் செய்யாது தம்மை ஈசனிடத்தொப்படைத்து சும்மா இருப்பதே யோக மாம்.

"சிந்தையற நில்லென்று சும்மாவிருத்திமேற்
சின்மயானந்த வெள்ளந்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்" என்றும்.
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

என்று வரும் தாயுமானசுவாமிகள் திருவாக்கால் சும்மா இருப்பதே யோகம் என்பது தெளியப்படும்.

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

என்றுவரும் திருவாசகத்தால் யோகநிலை தேர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதஞ்சலிமுனிவர் முதலியோரால் கூறப்படும் யோகம் சுத்தாத்துவித சைவசித்தாந்த விதியிற் கூறப்படும் யோகத்திற்கு வேறுனது என்பதும் அம்மார்க்கமாகப் பெறும்ஞானம் மிகவும் பிரயாசையானது என்பதும் சைவ சித்தாந்தத்தால் தெளியப்படும்.

காவியுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந்—தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந்—திரியாதே
சீவ ஞெடுக்கம் பூதவொடுக்கந்
தேற வுதிக்கும்—பரஞானந்
தீபவிளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந்—தருவாயே
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந்—தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும்—புலியூரா
சூரர் மிகக் கொண்டாட நடிக்குந்
தோகைநடத்தும்—பெருமாளே.

என்றுவரும் அருணகிரிநாதர் திருவாக்கும் காண்க.

18 **ஞானம்:—**

சரியை, கிரியை, யோகம் மூன்றன் மூலம் பெறப்படுவதே ஞானம். அதுவும் பரஞானம்அபரஞானம் என இரண்டு வகைப்படும். பரஞானம் அனுபவமூலம் பெறுவது. அபரஞானம் ஆகமவாயிலாகப் பெறுவது.

வானநாடரும் அறியொணுதநீ
மறையிலீறும்முன் தொடரொணுதநீ
ஏனைநாடருந் தெரியொணுதநீ
என்னையின்னிதாய் ஆண்டுகொண்டவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான்உனைப் பருகவைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய இச்சையே .திருவாசகம்.

நித்தமும் தியானம் செய்வதினுலும், இறைவனின் நிறைவுகளைச் சிந்திப்பதினுலும் தேவார திருவாசகங்களை ஒதித் துதிப்பதினுலும் தாம் உண்ணும் உணவுகளை இறைவனுக்கு நிவேதிப்பதினுலும் ஈகை, கொடை, பொறை, தயை முதலிய நற்செய்கைகளை அனுட்டிப்பதினுலும் மனத்தின் இயக்கம் விருத்தியாக்கப்படும். மூலாதாரத்து இருந்து மனதின் உறக்கம் எழுவதினுல் மக்களின் குணங்களும் விர்த்தியாகும், அவ்விதம் தேர்ச்சியடைந்த ஆன்மநிலையைச் சுட்டி:—

கொல்லான் பொய்கூறுன் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையினின் ருனே.
என்ருர் திருமூல நாயனர்.

பாசம் அற தேவார திருவாசகங்களையும் மற்றும் திருமுறைகளையும் பக்தியாக ஓதுமின்.

பாசஇலட்சணம்:

19 **ஆணவம்**:— பாசங்களில் ஆணவம் மிகவும் வலிமை கூடியது. ஆணவம் இல்லாவிட்டால் ஒருபொருளும் தோன்ருது. நிலைத்தும் இருக்காது. நாம் காணும் ஒவ்வொரு பொருளும் ஆணவத்தோடேயே நிற்கின்றது. ஆணவம் கெடும் பொழுது அழிந்து விடுகின்றது. ஆணவம் உண்டானல் கன்மமும் உண்டு மாயையும் உண்டு. இவை மூன்றும்மும்மலங்கள் என்பதும், இருள் என்னும் மயக்கத்தைக் கொடுப்பவை என்பதும் சித்தாந்தம்.

ஆணவம் கன்மம் மாயை மூன்றும் நித்தப் பொருள்களாயினும் சலனப் பொருள்கள்பதிநிர்ச்சலன். ஆன்மா பாசத்தாற்கட்டுண்ட பொருளாதலால் சலனமுடையது. அது பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் பாசத்தைப் பற்றுங்கால் ஆணவம் கெட்டு நிர்ச்சலனப் பொருளாகி அன்பாய் அத்துவிதமாயிருக்கும். எமது மனத்தில் எழும் ஒவ்வொரு எண்ணங்களுக்கும் ஒவ்வொரு செய்கைகளுக்கும் ஆணவம் காரணமாக உடையது. ஆணவமும் தூல சூக்கும காரண வேறுபாட்டால் பேதப்படும். நாம் அறியும் ஆணவம் தூலாதாரமாக உள்ளது. மகாபிரளயத்து சர்வ சங்கார காலத்தும் ஆணவம்ஆன்மாவைவிட்டு நீங்காதுநின்று சிருட்டிக்காலத்து திரும்பவும் மாயாகன்மங்களைப் பொருந்தி வினைக்கீடாகப் பிறந்திறந்துழலச் செய்யும். மாயாகன்மம் பிரளயசர்வசங்காரகாலத்து அற்றுவிடுமென்ப.

ஆணவத்தின் குணங்களாவன, மோகம், மதம், ராகம், விசாதம், சோசம், வைசித்திரியம், அரிசம் முதலியனவாம்.

மோகம்:- நல்லறிவை மயக்குவது.

மதம்:- உலகஇன்பங்களை சிறப்பாக மதிப்பது.

ராகம்:- இன்பங்களில் ஆசையை எழுப்புவது.

விசாதம்:- நுகர்ந்த இன்பம்கிடையாதபோதுவருந்துவது.

சோசம்:- பிரிவுநனியிரங்கலும், மெலிதலும்.

வைசித்திரியம்:- ஆன்மா தன்னில் உள்ள குற்றங்களை இறைவன்பால் சாற்றி தனது பெருமைகளை வியந்து பேசச் செய்வது.

அரிசம்:- உலக இன்பங்களை அனுபவிக்கும்பொழுது ஆன்மா தனக்கு ஒரு குறையுமில்லையென மதிக்கச்செய்வது.

ஆணவம் ஆன்மா நல்லுணர்வைப் பெறுது தடுத்துக் கொண்டிருக்கும். நான் பெரியவன், நான்வித்துவான், எனது பொருள், அவனைக்கட்டவேண்டும், இவனை அடிக்கவேண்டும் என்னும் துர்க்கிருத்தியங்களைச் செய்யச் சொல்லுவதும் செய்விப்பதும் ஆணவமே. ஆணவம் நீங்கும்பொழுதுதான் ஆன்மாவுக்கு முத்திகிடைக்கும்

ஆணவம் மனத்தோடு கூடும்பொழுது அகங்காரமெனப் படும். ஆணவம் இல்லாவிட்டால் கன்மம் நிகழாது. ஆணவத்தைக் கெடுப்பது மாயை. மாயையில்தான் ஆணவத்தின் தோற்றமும் உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் முயற்சி செய்ய உடம்பு வேண்டும். உடம்பு இருக்க உலகம் வேண்டும். ஆசை முதலியன உண்டாக்க பிறபொருள்கள் வேண்டும். ஆணவத்தால் அறுதியே பீடிக் கப்பட்ட ஆன்மா திருவருள்பெற உலகம் உடம்பு அனுபவம் முதலிய யாவும் திருவருள் இட்டவிதிஎன்று சொல்லவேண்டும் அற்றேல் ஆன்மா இறைவனை அடைய முடியாது என்றும் கேவலத்திற் கிடக்கும்.

நாம் ஏன் பிறந்தோம்? ஏன் இறக்கின்றோம்? எங்கு செல்கின்றோம்? அல்லற்பிறவியின் நோக்கம்யாது? என்னும் வினுவிற்கு மேற்கூறியவை விடையாம். பொருள் ஆன்மா இறைவன் மூன்றும் அழிவில்லாதன. பொருள் பாசத்திற் தோன்றியது. ஆன்மாவிற்கு இறைவனை மறைத்திருப்பது. ஆன்மாவின் நோக்கம் இறையை அடைவது. இறையின் நோக்கம் ஆன்மாவிற்குத் திருவருள்கொடுப்பது. இவைகளுள் மிகவும் வலியது ஆணவம். துட்டச்செய்கைகளைச்செய்விப்பது ஆணவம். ஆணவத்தை அறுத்தால் சிவலோகம் சித்திக்கும் என்ப.

யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். குறள்.

## 20. கன்மம்:—

கன்மம்:- கருமம் என்றும் சொல்லப்படும். கன்மம் தொழில். நாம் செய்யும் தொழில்கள் யாவும் செய்யப்படும் தொழில்கள். எப்பொழுது செய்கை எம்மால் உண்டாக்கப் படுகின்றதோ, அப்பொழுது நாம் செய்யாமல் நிகழும் நித்த மான செய்கையும் இருக்கவேண்டும். நாம் வளருகின்றோம் மரம் முளைத்து வளருகின்றது. காய்பழுக்கின்றது. இவை இயற்கையாக நிகழ்கின்றன. நாம் ஒன்றும்செய்யாதுதாமாக நிகழ்கின்றன அவை கன்மத்தின் தொழில் என்க.

கருமம், நற்கருமம் தீயகருமம் என இரண்டு வகைப்படும் நற்கருமமும் தீயகருமமும் ஆன்மாவுக்கு இடரைத் தருவன. ஆன்மா இறைவனை நாடி யாத்திரை செய்கின்றது. அவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரையில் நற்கருமத்தைச் செய்தால் நன்மையில் மயங்கியும்தீயகருமத்தைச் செய்தால் தீமையில் மயங்கியும் பங்கப்படுகின்றது.

கன்மம், ஆணவத்தால் தூண்டப்படும் பொருள். ஆணவமில்லாவிட்டால் கன்மம் நிகழாது. நன்மை செய்தால்ஆன்மா நன்மையில் மயங்கி இறைவனை அடைவதற்குசிறிதுகாலங்கள் செல்லுமாயினும், தீமையில் மயங்கினல் தீமை திரும்பவும் ஆன்மாவை தீயவழியில் தூண்டி, பிறவிகளில் நெடுங்காலம் தள்ளி அழுந்தச் செய்யும். நன்மையும் தீமையும் செய்யாராயின் இறைவனை இலகுவில் அடையலாம். அந்நிலை "சும்மா இருத்தல்" என்று சொல்லப்படும்.

தீமை செய்தவரும் இறைவனை அடையாதிருக்க முடியாது அவரும் இறைவனை அடைவர். ஆனுல் பிறந்தும் இறந்தும் துன்பங்களை அனுபவித்தும் நெடுங்காலங்கள் சென்றேஇறைவனை உணரமுடியும்.

கன்மத்திற்கு உற்றதுணைவன் ஆணவம். கன்மம் நிகழாவிட்டால் ஆணவம்கெடும். ஆணவம்இல்லாவிட்டால் கன்மமும் கெடும். இவை இரண்டையும் கெடுக்கச் சத்தியுள்ள பொருள் மாயை. மாயையின் வியாபகமே ஆணவம் கன்மம். மும்மலங்களையும் வெட்டுவது அன்பு. இறைவன்பாதம் பற்றினேரை தீவினைகள் பற்ரு.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடுள்ள நினை
வாயினவே வரம்பெறுவா ரையுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மை தோயாவாந் தீவினையே.

திருஞானசம்பந்தர்.

ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னுமன்ன மிட்டுண்மின்—றெய்வ
மொருவனே யென்ன வுணரவல்லீரே
லருவினைக ளைந்து மறும்.

ஔவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. மாயை:—

ஆணவத்தையும் கன்மத்தையும் கெடுப்பது மாயை. ஆணவமும் கன்மமும் இருந்தால்தான் மாயை தொழிற்கொள்ளும் ஆணவம், கன்மம், மாயை, மூன்றும் ஒன்றை ஒன்று இணை பிரியாப் பொருள்கள். சைவசித்தாந்தத்தில் தனித்து விபரிக்கப்படுவனவேயன்றி ஒவ்வொன்ருகப் பிரிக்க முடியாதன.

ஒரு சக்கரத்தை உருட்டி விடுகின்ரேம் அதை உருட்டி விடுவது ஆணவம். அந்தச் சக்கரத்தை நிலைத்து உருளச்செய்வதும் ஆணவம்தான். உருண்டு கொண்டிருப்பது கர்மம். அதன் பாதையில் ஒரு பள்ளம் இருந்தால் அந்தச் சக்கரம்பள்ளத்திவிழுந்துவிடும். ஒருதிடர் இருந்தால் அத்திடரில் சரிந்து விடும். அல்லது உருண்டு சிறிதுதூரம் சென்று நின்றுவிடும். அவ்விதம் சரிவதும், விழுவதும், நிற்பதும் மாயை. அங்கு நிகழ்ந்த மாயத்தின் தன்மையிஞல் சக்கரம் உருண்டுகொண்டிருந்த ஆணவமும்கெட்டு கருமமும் கெட்டுவிடும். ஆதலால் மாயை ஆணவத்தையும், கருமத்தையும் கெடுக்கும் கருவி. மாயை இல்லாவிட்டால் எமது சரீரம் எப்பொழுதும் நிலைத்து வளர்ந்து கொண்டிருக்கும். கன்மம் இல்லாவிட்டால் எப்பொழுதும் ஒரேவகைத் தோற்றத்தோடு இருக்கும். ஆணவம் இல்லாவிட்டாய் ஒன்றுமே இருக்காது. மாயை எப்பொழுதும் ஒடுங்குந் தன்மையும் விரியுந் தன்மையும் உள்ளது. ஆணவத்தோடு கூடிய மாயைவிரிந்து கொண்டு போம். கன்மத்தோடு கூடிய மாயை ஒடுங்கிக் கொண்டுபோம். நாம் மேற்கூறிய மாயாகன்ம விளக்கம் அநித்தமானவை. எப்பொழுது அநித்தம் உண்டோ அதன் நித்தமும் இருக்க வேண்டும் அதே மாயை என்ப.

மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டாக விரியும். எப்பொழுது இருமை தோன்றுமோ அநித்தமுடையது. ஆதலால் நித்தமானது சுத்தாசுத்தமாயை இதே மாமாயையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப்பொருளை நாம் இரண்டு பொருள்களாகப் பிரிக்க முடியாது இருக்குமோ அது தனிப்பொருள் எனப்படும். அப்பொருள் அழியாது. இறைவன் ஒருவன். ஒரு தனிப்பொருளைக்கொண்டு நாம் ஒரு செயலையும் செய்ய முடியாது. அது போன்று இறைவனும் தனியன் ஆயின் ஒரு செயலும் நிகழாது. இறைவன் செயல் கொள்ளும்பொழுது சத்தியைத் துணைகொண்டே செயல்கொள்ளுவன். அச்சத்தியே பராசத்தி. அல்லது மாமாயை. அல்லது சுத்தாசுத்தமாயை என்க.

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம் வீழிம் மிழலையே.

என்னும் சம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரம் காண்க.

சத்திகள் அனந்தம். அந்தஅனந்தகோடி சத்திகளுக்கும் தாயாக உள்ளது ஒரு பராசத்தியே. அப்பராசத்தியைத் துணைக்கொண்டே இறை செயல் கொள்வன்.

வேறு வேறுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூறாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையுந் தானும் வந்தருளி.

என்னும் கீர்த்தித் திருவகவலடிகள் காண்க.

இறைவன் பராசத்தியைத் துணையாகக் கொண்டு பிறந்த சத்திகளின் விரிவு ஆறாயிரம் கோடிக்கு மேற்பட்டுத் தோன்றும் என.

ஆறுகோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தமானார் அயலவர் கூடி
நாத்திகம்பேசி நாத்தழும் பேறினர்
என்றார் மாணிக்கவாசகசுவாமிகள்.

இவற்றை திருமூலநாயனாரும்,

மாமாயை மாயை வைந்தவம் வைகரி
ஓமாயை உள்ளொளி யோராறு கோடியிற்
றாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே என்றார்.

இறைவன் பராசத்தியைத் துணைகொண்டு வியாபகம் செய்திருக்கும் பெருமையையும் அவற்றின் நுட்பங்களையும் ஆராயுமிடத்து, சத்திகளின் தன்மையால், அண்டங்கள் என்று சொல்லும் பேருலகங்களின் பகுதிகள் உருண்டை வடிவம் உள்ளவை; அவைகளின் எல்லைபற்ற இயல்புகளும் பல்வகை வளம்பொருந்திய, பெருமை மிக்க தோற்றங்களும், அவை ஒன்றனுக்கொன்று மேலாக நிற்கின்ற எழிற்சியின் வேறுபாடுகளும் கூறுமிடத்து நூற்றொருகோடிக் கதிகமாக அளவில்லாமற் பரந்து தோன்றுவன என்றும் அத்தகை உலகங்களெல்லாம் எமது வீடுகளின் பலகணி வாயிலுக்கூடாகத் தெரியும் சூரியனுடைய கதிர்களிலே தோன்றும் நெருக்கமான அணுக்களைப்போற் சிறியன என்றும் சொல்லும்படியாகத்தான் பெரியோனாக விளங்கும் முதல்வன் என.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்ப ருந்தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்; தெரியின்.

என மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்டப்பகுதியிற் கூறியமை காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தாசுத்த மாயையில் இருந்து சுத்தமாயை, அசுத்த மாயை என இரண்டு மாயைகள் தோன்றும். சுத்தாசுத்த மாயை நித்தம்மற்றமாயைகள் அநித்தம். சூரியசந்திரராதியாம் உலகங்களும் பொருள்களும் மாயையின் பிரகிருதியாம். இவை களின் விரிவு சிவதத்துவம் ஐந்தும் வித்தியாதத்தும் ஏழும் ஆன்மதத்துவம் இருபத்துநான்குமாம்.

சுத்தமாயையில் இருந்து நாதம், விந்து, சாதாக்கியம் ஈசுரம், சுத்தவித்தை என ஐந்து தத்துவங்கள் விரியும். இவை ஐந்தும் சிவதத்துவங்கள்; நாதம் சிவம் என்றும் விந்து சத்தி என்றும், சாதாக்கியம் சதாசிவம் என்றும் கூறுவர். நாதம் சூக்குமை, பைசந்தி மத்திமை வைகரி என நான்காம். வைகரி செவிக்குக் கேட்பது. அசுத்த மாயையில் இருந்து காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், பிரகிருதிமாயை என ஏழு தத்துவங்கள் விரியும். இவைஏழும்வித்தியாதத்துவங்கள்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
என அந்தக்கரணம் நான்கும்
காது, துவக்கு, கண், நாக்கு, மூக்கு.
என ஞானேந்திரியம் ஐந்தும்
வாய், கால், கை, பாயு, உபத்தம்
எனக் கன்மேந்திரியம் ஐந்தும்
சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்,
எனத் தன்மாத்திரை ஐந்தும்
நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
எனப் பூதம் ஐந்தும்

ஆக இருபத்துநான்கும் ஆன்மதத்துவங்கள். இவை களின் மிகுந்த விரிவு தொன்னூற்றறென்ப.

எமது சரீரம் மாயையிலே இருந்து தோன்றி மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களையும் பொருந்தியது. எமது பூத உடம்பை தூலசரீரம் என்றுசொல்லப்படும். இதற்குச்சூக்கும மாய் தூலஉடம்பு தோன்றுதற்கேதுவாகிய சரீரம் சூக்கும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரம் என்று சொல்லப்படும். சூக்கும சரீரம்தோன்றுதற்குக் காரணமாகிய சரீரத்தைக் காரண சரீரம் என்று சொல்லப் படும்.

## 22. ஐந்துகோசம்: —

ஆன்மா ஐந்து கோசங்களால் மூடப்பட்டிருக்கின்றது. இவை ஐந்தும் ஐந்து சட்டைகள் போன்றவை. தூலசரீரத் திற்கு அன்னமயகோசம் பிராணமயகோசம் என இரண்டு கோசங்கள் உண்டு. சூக்கும சரீரத்திற்கு மனோமயகோசம் என ஒன்றுண்டு. காரண சரீரத்திற்கு விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசம் என இரண்டு கோசங்களுண்டு.

ஒருவர் இறக்கும்பொழுது முதல் அன்னமயகோசம் அழியும். பின் பிராணமயகோசம்அழியும். அன்னமயகோசம் சரீரத்தின் புறக்கருவி, பிராணமயகோசம் உட்கருவி. மனோ மயகோசம் ஞானமயகோசம் ஆனந்தமயகோசம் மூன்றும் முத்தி கிடைக்கும்வரை அழிவதில்லை.

சூக்குமசரீரம் சுவர்க்க நரக பேதமென்னும் திரிபில் பூதசார சரீரமாயும், யாதனு சரீரமாயும் திரிந்து புண்ணியம் செய்த ஆன்மா பூதசார சரீரத்தோடு மோட்சத்தையும் பாவஞ் செய்த ஆன்மா யாதனு சரீரத்தோடு நரகத்தையும் அனுப விக்கும் என்றும் அவ்வனுபவம் முடிந்தபின் சூக்குமசரீரத் தைச் சார்ந்து தூலசரீரம் பெறும் என்றும் சைவசித்தாந்தம் கூறும். ஆதலால் வாழ்நாட்களை வீணே போகவிடாது• இறை வனைத் தொழுமின்.

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்•
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவுசேர்மினே

அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரியாது நல்லநெறியினைக் கைப்பிடிமின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லன்மிக்கவாழ்க்கையை யாதரித் திராதுநீர்
நல்லதோர் நெறியினை நாடுதுந் நடம்மினோ
வில்லையன்னவாணுதல் வெள்வளையொர் பாகமாம்
கொல்லைவெள்ளை யேற்றினன் கோடிகாவு சேர்மினே.

துக்கம் மிகுந்த வாழ்க்கையைத் துறந்து தக்க நெறியினைச் சார்மின்.

துக்கமிக்க வாழ்க்கையின்சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்
அக்கணிந் தரைமிசை யாறணிந்த சென்னிமேல்
கொக்கிற கணிந்தவன் கோடிகாவு சேர்மினே.

முற்பிறப்பிலே செய்த வலியவினைகள் நீங்கும்படி இறைவனைத் தொழுமின்.

பண்டுசெய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டுமக் குரைப்பனா னொல்லைநீ ரெழுமினோ
மண்டுகங்கை செஞ்சடை வைத்துமாதோர் பாகமாக்
கொண்டுகந்த மார்பினன் கோடிகாவு சேர்மினே.

முன்னைப் பிறவிகளிலே செய்த வினையினால் இறைவன் பாதம் அடையச் சித்தியாது இருக்கின்றது. அவை அறும்படி இறைவனைத் தொழுமின்.

முன்னைநீர்செய் பாவத்தான் மூர்த்திபாதஞ் சித்தியா
தின்னநீரி டும்பையின் மூழ்கிறீ ரெழும்மினோ
பொன்னைவென்ற கொன்றையான் பூதம்பாட வாடலான்
கொன்னவிலும் வேலினன் கோடிகாவு சேர்மினே.

பாவமத்தனையும் நீர்செய்து யாது பயனை அடைந்தீர்? ஆதலால் இறைவனைத் தொழுமின்.

ஏவமிக்க சிந்தையோ டின்பமெய்த லாமெனப்
பாவமெத் தனையுநீர் செய்தொரு பயனிலைக்
காவன்மிக்க மாநகர் காய்ந்துவெங் கனல்படக்
கோவமிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பினுல் வருத்தமுறுமுன் இறைவனைத் தொழுமின்.

ஏணழிந்தவாழ்க்கையை யின்பமென் றிருந்துநீர்
மாணழிந்த மூப்பினுல் வருந்தன்முன்னம் வம்மினே
பூணல்வெள் ளெலும்பினன் பொன்றிகழ் சடைமுடிக்
கோணல்வெண் பிறையினன் கோடிகாவு சேர்மினே.

இந்த வாழ்க்கை மெய்யென்னு மெண்ணத்தினைத் தவிர்த்து இறைவனைத் தொழுமின்.

மற்றிவாழ்க்கை மெய்யெனும் மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடி பணிந்துவந் தெழுமினே
வெற்றிகோ டசமுகன் விறல்கெட விருந்தநோர்
குற்றமில் வரையினன் கோடிகாவு சேர்மினே.

இறைவனைத் தொழுமின்; மங்கும் நோய்துன்பம் மாளும் உபாயம் அஃதே.

மங்குநோ யுறும்பிணி மாயும்வண்ணஞ் சொல்லுவன்
செங்கண்மா றிசைமுகன் சென்றளந்துங் காண்கிலா
வெங்கண்மால் விடையுடை வேதியன் விரும்புமூர்
கொங்குலாம்வளம்பொழிற் கோடிகாவு சேர்மினே.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

இறைவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தைச் செப்புமின், அவன் நலங்களைப் பேசுமின்; திருக்கோயில்களுக்குச் செல்மின்; உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்மின்; அருநோய்கள் கெடத்திருநீற்றை அணிமின்; அல்லீரேல் பிறந்தும் இறந்தும் பிறந்தும் அல்லற்பட ஆளாவீர்.

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகி
லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி
லளியற்றார் பிறந்தவா றேதோவென்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே.
திருத்தாண்டகம்.

தந்தை, தாய், உடன்பிறந்தார், பெண்டீர் யாவரும் யார் யாரோ நாமறியோம். எந்தையாராகிய இறைவனது திருநாமத்தைச் செப்புமின்.

தந்தையார் தாயா ருடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேது மகிழ வேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
றிகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சி வாய
வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.
திருத்தாண்டகம்.

தாய் தந்தை நமராயினும் செத்தால் வந்து உதவுவர் ஒருவரும் இல்லை.

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தா
ரெம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால் வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றா
லல்லல்கண்டங் கொண்டடியே னென்செய்கேனே.
திருத்தாண்டகம்.

ஊன், உயிர் அதனுள் நிற்கும் உணர்வு முதலிய யாவும் அவனே.

ஊனாகி யுயிராகி யதனு ணின்ற
வுணர்வாகிப் பிறவனைத்துந் நீயாய் நின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேது மறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றா
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

திருத்தாண்டகம்.

மயானத்திலிடுவதன்முன் இறைவனைத் தொழுமின்.

ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதம்
கையினாற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

திருத்தாண்டகம்.

இறைவனின் திருப்பாதத்தைப் போற்றி அவன் நாமங்களைத் துதியாதார் யாக்கைக்கு இரைதேடிக் காக்கைக்கே இரையாகக் கழிவர்.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர னாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

தம்மைத்தொழும் அடியவர் நெஞ்சில் இறைவனெப்பொழுதுமிருப்பன்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே.

இறைவனடி தொழின் ஆனந்தவெள்ளம் பருகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே

## நெஞ்சிற் கறன்வலி யுறுத்தல்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே.

புண்ணியமு நன்னெறியு மாவ தெல்லா
நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக் கேணீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா வென்று
நுந்தாத வெண்சுடரே யென்று நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேத நான்கும்
விரைமலர்மே லுன்முகனு மாலுங் கூடி
எண்ணரிய திருநாம முடையா யென்று
மெழிலாரூ ராவென்றே யேத்தா நில்லே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. (அப்பர்)

திருச்சிற்றம்பலம்.

அறவியல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# ஒழிபியல்.

## 1 வைராக்கிய பத்தி:

இது அன்பே சிவம் எனத் துணியப்படும் பக்தி. அறமும் மறமும் ஒருங்கே நிகழ யாவையும் இறைவனுக்கு அன்பால் அர்ப்பணமாக்குதல் இதனைச் சிலர் இராவணபக்தி, வீமபக்தி, பிரேமபக்திஎன்றும் கூறுவர். மற்றும் பக்திகள் யாவும் இவற்றுள் அடங்கும்.

சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறவுக்காகப் பரிந்து தனது சரீரத்தைப் பலியாக இட்டு தராசில் நிறுத்ததும்சிறுத்தொண்டர் பிள்ளையை வெட்டிக் கறி சமைத்து இறைவனுக்கிட்டதும், கண்ணப்பன் தனது நேத்திரங்களைப் பிடுங்கித்திருக்காளத்தி நாதருடைய நேத்திரங்களில் இட்டதும் * இராவணன் கயிலையைப் பெயர்த்து நசுங்கிய பொழுது தனது நரம்புகளைக் கையாற்பிடுங்கி இசைமூட்டி இறைவனை அன்பால் சாமகானஞ் செய்ததும் * வைராக்கிய பக்தியேயாம்.

## 2 திருநான்மறை:

வைராக்கிய பக்தி வேதநெறியில் உள்ள இல்லற நெறியென்ப. அதே திருநான்மறை எனப்படும்.

---

* பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருள்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.
திருவாசகம்.

கண்ணப்பன் கொண்டது பிரேம பக்தி அன்பியல் பிரேமை என்ற பக்தி பார்க்க

* கரத்தினாற் கயிலையை யெடுத்தகாரரக்கன்
சிரத்தினை யூன்றலுஞ் சிவனடி சரணென
இரத்தினாற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்தினன் மருவிட மாமழ பாடியே. [சம்பந்தர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டு இறைவன் மகேந்திரகிரியிலே வேதவடிவாகிய கல்லால நிழலின்கீழ் இருந்து சனகர், சனந்தனர், சனற்குமாரர் சனந்தனர் என்னும் பிரமபுத்திரர் நால்வர்க்கும் உலகியல் நெறியாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வேதப் பொருள்களையும் நான்கு வேதங்களாக அருளினர். அவ்விதம் ஓதப்பட்டநெறி இல்லறநெறி என்பது.

ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன் குற்றமில்
மாலுக் காரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத் தான்றொழு வார்க்கிட ரில்லையே.

என்னும் அப்பர் தேவாரத்தாலறிக.

அவ்விதம் ஓதப்பட்ட வேதப்பொருள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்காம் என்பது.

சுழிந்தகங்கை தோய்ந்த திங்கட் டொல்லரா நல்லிதழி
சழிந்த சென்னிச் சைவவேடந் தானினைத் தைம்புலனும்
அழிந்த சிந்தை யந்தணாளர்க் கறம்பொரு ளின்பம்வீடு
மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முதுகுன்றே.

என்னும் சம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரத்தாலறியப் படும்.

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

என்னும் திருவாசகத்தான் அரும்பெருந் தபோதனர்க்கே உலகியற்கை தெரியாது இறைவன் ஓதினர்எனின், சிற்றறிவும் சிறுதொழிலும் உள்ள சாதாரணமக்கள் உலகியற்கையாகிய இல்லற நெறியை எவ்விதம் அறிய முடியும்? முடியாது.

இறைவன், உலகியல் நெறியை மக்கள் அறிதற்குரிய வழியில் தவமிக்காராகிய நால்வர்க்கோதி அவர் வாயிலாக உலகம் அறியச் செய்தனன் என்க. அற்றேல் உலகியற்கை மக்கள் அறிய வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகியற்கை அறியாத மக்கள் ஐரோப்பிய நாகரீகத்தால்; இன்பம் நுகர்ந்து காட்டுவதை உலகியற்கை அறிந்த மக்கள் எவ்விதம் மதிப்பிடுவார்களோ நாமறியேம்.

ஆலின் கீழ் அருளப்பட்ட வேதப்பொருள்கள் நால்வர்க்கும் ஒரே வகையாக ஓதப்பட்டனவா அல்லது வெவ்வேறாக ஓதப்பட்டனவா என்பது ஐயப்பாடு.

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்றும்
எரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே.

என்னும் அப்பர் தேவாரத்தால் வேதங்கள் நால்வர்க்கும் வெவ்வேறாக ஓதப்பட்டனவென்ப. மறைத்திறமும் அறத்தொகுதியும் கண்டு வேதங்கள் அவரவர்களுக்குப் பொருத்தமானவகையில் ஓதப்பட்டன வென்பது.

முறைத்திறமுறப்பொருடெரிந்து முனிவர்க்கருளி
யாலநிழல்வாய்
மறைத்திறம றத்தொகுதி கண்டுசமயங்களைவகுத்தவனிடம்
துறைத்துறைமிகுத்தருவிதூமலர்சுமந்துவரையுந்திமதகைக்
குறைத்தறையி டக்கரிபு ரிந்திடறு சாரன்மலிகோகரணமே

என்னும் சம்பந்தசுவாமிகள் தேவாரத்தாலறிக.

அவ்விதம் ஓதப்பட்டவேதப்பொருள்கள் பலதுறைகளாக உடையன.

ச. துறை:-

துறையாவது பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டியங்குந் தன்மையுடையது. மக்களும் மாக்களும் சென்று நீருண்ணும் துறைபோன்றது. ஓர் நீர்த்துறையின்கண் ஆடு மாடு முதலிய சாந்தமான குணமுடைய மிருகங்களும் சிங்கம் புலி கரடிபோன்ற துட்ட மிருகங்களும் மக்களும் சென்று நீர் திரட்டுவது போன்றது. துறை என்னும் சொல்பொருளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகள் "திருப்பெருந்துறையுறை சிவனே" என்றார். திருநாவுக்கரசர் "அதிகைக்கெடில வீரட்டானத் துறை" என்றார். சுந்தரமூர்த்திநாயனார் "நல்லூரருட்டுறை" என்றார். இறைவன் கோயில் கொண்டருளியிருக்கும் பொழி லின்கண் மக்கள் சென்று, பொன்னும், பொருளும், போக மும், அன்பும், அருளும் எனப் பலதிறப்பட வேண்டுதல் செய்வர். இறைவனும் வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் ஈயும் தன்மையனாக எழுந்தருளியிருப்பன்.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்றவெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையுமணாளன் றானே.
திருத்தாண்டகம்.

என்றாராகலின் இறைவன் எழுந்தருளியிருக்குங்கோயில் களும் வேண்டுவார் வேண்டுவதைப் பெறும் துறைகளாகும்.

உலகியல் நெறியாகிய முத்திநெறியின்கண் நின்று, இறைவனை அடைதற்குரிய துறைகள், பலபலவாக விரியும். அவைகளுக்குரிய விதிகளை ஆராயுமிடத்து தொல்காப்பியத்தில் கூறப்படும் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல் கற்பியல் முதலிய விதிகள் கொண்டும் மரபும் மெய்ப்பாடும் கண்டும் ஆராய்ந்தும் அறியப்படும்.

பன்னிரண்டு திருமுறைகளும் தொல்காப்பிய விதி கொண்டே அருளப்பட்டிருக்கின்றன.

**4. அகந்திணையாவது:-**

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என எழுவகைப்படும். மேற்கூறிய ஏழு திணையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் அடையும் உரிப்பொருள் இன்பம். அவ்வின்பமும் அகத்தாலும் புறத்தாலும் அடையப்படும். புறத்தாற் பெறும் இன்பம் வீட்டுநெறியில் உள்ளதாதலால், இன்பம் ஒன்றே அகம்என்றும்அறம், பொருள், வீடு புறம்என்றும் கூறப்படும்.

அகம் என்பது இன்பத்திற்கு ஆகுபெயராம். அது உட்கருவியாகிய மனத்தைக் குறிக்கும். இன்பமில்லாமனம்பொறியில்லா மகவுக்கு நேர். ஆதலால் இன்பமே அகம் என்ப.

அகத்தின் நுகர்வாவது உருவும், திருவும், குலமும், நலமும், பண்பும், பயிற்சியும், கல்வியும், செல்வமும் பிறவுமாகிய ஒத்த குணங்களால் ஒருப்பட்டுக் கூடும் தலைவனும்தலைவியும் நுகரும் நுகர்ச்சியேயாம். அஃது யாண்டு மக்கூட்டத்தின் பின்னர் தத்தமக்குத் தோன்றக் கூறப்படாது, கரந்து நிற்றலால் அகம் என்றார். இன்பமேயன்றித் துன்பம் நிகழுமாயினும் காமங்கருதிற்றாயின் அதுவும் அகத்துள் அடங்கும். ஒழிந்தவெல்லாம் புறத்துள் அடங்கும்.

அவற்றுள்:—

முல்லை;- காடும் காடுசார்ந்த நிலமும்.
குறிஞ்சி;- மலையும் மலைசார்ந்த நிலமும்.
மருதம்;- பழனமும் பழனஞ்சார்ந்த நிலமும்.
நெய்தல்;- கடலும் கடல்சார்ந்த நிலமும்.
பாலை;- சுரமும் சுரஞ்சார்ந்த நிலமும்.
கைக்கிளை;- ஒருதலை வேட்கையுடைய களவியல்நெறி.
பெருந்திணை:- உயர்ந்தோர்மாட்டு நிகழும் ஒவ்வாக்காமம்.

இவற்றுள் நிலம்படுதிணை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு. அவற்றுக்குத் தெய்வமும் முறையே மாயோன், முருகன், இந்திரன், வருணன் என்பர்.

மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே. (தொ.சூ. 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாராகலின் பாலை தனக்கென நிலம்பெறாது நால் வகை நிலத்தும் மயங்கு மாதலால் ஒழுக்கம்பற்றியே பாலைத் திணைகொள்ளல் மரபு.

நடுவணை ந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. (தொல். சூ. 2)

என்றாராகலின் பாலை நடுவண்திணை என்றும் சொல்லப் படும். இவை அறியுமிடத்து முதல், கரு, உரி என மூவகைப் பொருள்பற்றி யறியப்படும்.

**5. முதற்பொருள்:-**

முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே. [தொ.சூ.4]
என்றாராகலின்.

முதற்பொருள் நிலமும் பொழுதும் என இரண்டு வகைப் படும்.

நிலம் ஐவகை நிலனையும் குறிக்கும்பொழுதும் பெரும் பொழுது, சிறுபொழுது என இரண்டு வகைப்படும்.

**6. பெரும்பொழுது:-**

இளவேனில் முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின் பனி என அறுவகைப்படும்.

**7. சிறுபொழுது:-**

வைகறை, விடியல், எல்பாடு [சூரியன் தோற்றுங்காலம்] நண்பகல், மாலை, யாமம் என அறுவகைப்படும்.

**8. கருப்பொருள்:-**

தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப. [தொ. சூ. 18]

என்றாராகலின் தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, பண், யாழ் முதலிய உலகியற் பொருள் யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் என்ப. இவற்றின் விரிவு முடிந்த நூல்களிற் காண்க.

**9. உரிப்பொருள்:-**

புணர்தல் பிரித லிருத்த லிரங்க
லூட லிவற்றினிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே. [தொ. சூ. 14]

என்றாராகலின் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் அவைகளின் நிமித்தமுமாகிய பத்தும் உரிப்பொருள் என்ப. முதற்பொருளாலும் கருப் பொருளாலும் பெறப்படுவதே உரிப்பொருள். உரிப்பொருள் இன்பத்திற்கு உரிய பொருள் என்னும் காரணச் சிறப்புப் பெயர்.

போக்கெல்லாம் பாலை புணர்த னறுங் குறிஞ்சி
யாக்கஞ்சே ரூட லணிமருத—நோக்குங்கா
லில்லிருக்கு முல்லை யிரங்கலது நெய்தல்
சொல்லிருக்கு மைம்பாற் றுறை.

என்னும் வெண்பாவாலறிக.

உரிப்பொருள் சிறப்புஅகத்திணையாலும் புறத்திணையாலு மறியப்படும். இன்பம் பொருள் இல்லாதுசிறக்காது. பொருள் அறம் இல்லாது சிறக்காது. அறம், பொருள், இன்பம் மூன் றூனு மடைவதே வீடு.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்றார் ஔவையாரும்.

இருத்தல் என்னும் உரிப்பொருளாற் சிறந்த முல்லைத் திணைக்கு கார் என்னும் பெரும்பொழுதும் மாலை என்னும் சிறுபொழுதும் உரியன. புணர்தல் என்னும்உரிப்பொருளாற் சிறந்த குறிஞ்சித் திணைக்கு கூதிர் முன்பனி என்னும் பெரும் பொழுதுகளும் யாமம் என்னும் சிறுபொழுதும் உரியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடல் என்னும் உரிப்பொருளாற் சிறந்த மருதத் திணைக்கு வைகறை, விடியல் என்னும் சிறுபொழுதுகளும், மற்றும் பெரும்பொழுதுகள் யாவும் உரியன.

இரங்கல் என்னும் உரிப்பொருளாற் சிறந்த நெய்தற் றிணைக்கு எல்பாடு என்னும் சிறுபொழுதும் மற்றும் பெரும் பொழுதுகளும் உரியன.

பிரிதல்என்னும்உரிப்பொருளாற் சிறந்தபாலைத்திணைக்கு நண்பகல் என்னும் சிறுபொழுதும்வேனில்,பின்பனிஎன்னும் பெரும்பொழுதுகளுமுரியன.

பிரிவு:- காலிற்பிரிதல், கலத்திற்பிரிதல், தூதிற்பிரிதல், பரத்தையிற் பிரிதல், பொருள்வயிற் பிரிதல் எனப் பலவகை யாக விரியும்.

புணர்ச்சியும்; இயற்கைப் புணர்ச்சி, உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என விரியும்.

**10 திணைமயக்கம்:—**

ஒரு நிலத்து இரண்டொழுக்கம் தம்முள் மயங்குதலன்றி இரண்டு நிலம் ஒரு ஒழுக்கத்து மயங்குதலில்லை என்பது.

திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதலின்றென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே [தொ.சூ.12]

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக.

கொண்டுதலைக் கழியினும் பிரிந்தவணிரங்கினு
முண்டென மொழிப வோரிடத் தான (தொ. சூ. 15)

என்றாராகலின், தலைவன் தலைவியை உடன்கொண்டு அவள் தமரிடத்து நின்று பிரியினும், தலைவன் உடன் கொண்டு போகாது தானே போதலின் தலைவி மனையின்கண் இருந்து இரங்கினும் ஓரிடத்தின் கண்ணே ஒரொழுக்க மாயின. கொண்டுதலைக்கழிதலால் இடையூறின்றிப் புணர்ச்சி நிகழுமெனினும், பிரிவு நிகழ்ந்தவாறு என்னை? யெனின், தந்தையுந் தனையருந்தேடிப் பின்வந்து, தம் ஒழுக்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறு செய்வர் என்னும் கருத்தே இருவருள்ளத்தும் பெரும்பான்மை நிகழ்தலிற் பிரிவு நிகழ்ந்தவாறாயிற்று. எனவே அது பாலைத்திணைக்கண் குறிஞ்சித்திணை நிகழ்ந்த தாயிற்று. எனவே உரிப்பொருள் முதலியன ஒன்றில் ஒன்று மயங்கு மென்ப.

**11 களவுநெறி:—**

உளமலி காதற் களவெனப் படுவ
ஒருநான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப.
என்றார் அகப்பொருளார்.

களவெனப் படுவதியா தென வினவின்
வளைகெழு முன்கை வளங்கெழு கூந்தன்
முளையெயிற் றமர்நகை மடநல் லோளொடு
தளையவிழ் தண்டார்க் காம னன்னோன்
விளையாட் டிடமென வேறுமலைச் சாரன்
மானினங் குருவியொடு கடிந்துவிளை யாடு
மாயமுந் தோழியு மருவிநன் கறியா
மாயப் புணர்ச்சி யென்மனார் புலவர்.
(தொல்காப்பிய மேற்கோள்)

களவு செய்வோன் கள்வன் எனப்படுவான். கள்வன் என்ற விடத்து துட்டச் செய்கையுடையவன் எனப் பொருள் பயக்கும். அழுகள்ளன், தொழுகள்ளன், ஆசாரக்கள்ளன், காரைக்கால்கள்ளன் எனக் கள்வரில் நான்கு திறத்தாருண் டென நெறிப்படுத்துவர் புலவோர். இவருள் முன்னவனில் மற்றவன் முறையே திறமையிற் கூடியவன்.

காரைக்கால் கள்ளன் என்பதை கார்+ஐ+கால் என சேதிக்கலாம். கார்=இருள். ஐ; இரண்டாம் வேற்றுமையுருபு, கால்=கூறு இருட்கூறுயாமம், என்று சொல்லப்படும். "குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தான் அது புணர்தலின் முந்தியாக உடைய குறிஞ் சிப்பொருளை உணர்த்தியது. பிறரெவரும் அறியாமே இராக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்லத்துச் சென்றுதன் காதலியோடு களவுப்புணர்ச்சி செய்தலாகிய தனது கருமத்தை முடித்தல் என்ப.

புறத்திணையுள்;

வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலக்களவி
னுதந் தோம்பன் மேவற் றாகும். [தொ. சூ. 57]

என்றாராகலின்,

வேந்தனல் விடப்பட்டு முனைப்புலங் காத்திருந்த தண்டத் தலைவர் பகைவர் நிலத்துச் சென்று ஆநிரையைக் களவிற் கொண்டு காத்தல் போன்ற வெட்சித்திணையும் அதுவேஎன்ப.

களவு நிகழ்கின்ற குறிஞ்சிப்பொருளாகிய கந்தருவமணம் வேதவிதியான் இல்லறமாகி, வாழ்க்கையில் கதியற்றிருந்த தலைவியை தலைவன் ஆட்கொண்டு இன்பமும் பொருளும் வாழ்வும் கொடுப்பதுபோல், வீட்டின்பத்துக் கதியற்றிருந் தான் ஒருவனை, பதி தடுத்தாட்கொண்டுகந்தழியும் வீட்டுநெறி யும் கொடுப்பதற் கொக்குமாதலால் அது களவு எனப்பட்டது "காடுடைய சுடலைப்பொடிபூசி என்உள்ளங் கவர்கள்வன்" என்றார் திருஞானசம்பந்தசுவாமிகளும்.

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ.

என்றார் திருநாவுக்கரசரும்.

பெற்றார் உடன்பிறந்தோர் உற்றார் உடைமைகள் உரிமைகள் யாவையுந் நீத்து தலைவன்தாள்தலைப்படும்கைக்கிளைக் குறிப்பு, களவாகிக் கற்பாகி பெண்களைப் பதிவிரதா நெறியிற் பயிற்று மென்பர்.

**12 பதிவிரதாநெறி:—**

பதிவிரதாதர்மநெறி பெண்களை அருள் நெறியில் உய்விக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி=இறைவன்
பசு=தலைவி என உவமிக்கப்படும்.

பசுபதியோடு அன்பால் தளைப்படுவதே பதிவிரதத்தின் பயன். இது இல்லற நெறியில் நின்ற ஒழுக்கத்தினுல் பெறப்படும் **முத்திநெறி**. அஃது ஐந்திணைப்பட்டு நெறிதவருதஒழுக்கம் நிகழின் அன்புண்டாகி, இன்பம் பெருகி இறைவனின் திருவருள் சித்திக்கச் செய்யும்.

இல்லறநெறியின் தன்மையை முத்திநெறிப்படுத்தி மாணிக்கவாசகசுவாமிகளும்; "அழகிய கொன்றைமாலையை இறைவனது ஆகத்தில் சூடுவேன் [தலையிற் சூடுதலுமாம்] அணிந்து இறைவனது எழுச்சிமிக்க தோற்றங்களைச் சேர்வேன் சேர்ந்து [அவனைப் புணர்தல்] அதில் உள்ள களிப்பால், அறிவுபிறழ்ந்து புலவி எய்துவேன். பின்னர், புலவி நீங்கி, அவனது சிறந்த அதரத்திற்கு உருகுவேன். மனமானது குழைந்துருகி அவனைத்தேடுவேன். தேடி, அவனது திருவடியை நினைந்திருப்பேன், அவனது அருளைப் பெருது மெலிவேன், அதனைப் பெற்று மீண்டும் மகிழ்ச்சி யடைவேன்." என,

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானுய் [என்ருர்

அடிகள் இத்திருவாசகத்துள் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனுகவும் குறித்தார். பூங்கொன்றைசூடுதல் மாலையிட்டமையைக் குறிக்கும். ஞானத்தாற் சேருதல் கூடுதலாம் ஞானத்தாற் கலத்தல் முயங்குதலாம். உடலோடு உள்ள காரணப்பிரிவு பிரிவாம். பிரிவின்பின் ஊடுதல் விதி. பரத்தையிற் பிரிந்தான் வாயில் வேண்டுவது தலைவி ஊடுதலினுல் நிகழ்வது. தலைவனின் பிரிவாற்ருமையால் நாடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுதல், சிந்தித்தல், மெய்வாட்டி மெலிதல்முதலியன நிகழும். மீண்டும் வீடடைதல் கூடுதலாம்.

அன்பு எவ்விதம் உதிக்கின்றதெனின் "உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் கள்ளப்புணர்ச்சியுட் காதலர்க்குரிய" என்னும் அகப்பொருள் விதிதழுவி மெய்யும் மெய்யும் புணர்ப்ப வேண்டியே உள்ளமும் உள்ளமும் புணர்கின்றது. யாண்டுமக்கூட்டத்தின் நெறியே இருவர் உள்ளத்தும் கரந்து நிற்றலால் குன்றாத அன்பைக் கொடுத்து, உள்ளத்தோடு உள்ளம் புணர்ந்து நிற்கச் செய்கின்றது.

தாய் தந்தையர் புத்திரரை உள்ளத்தாற் புணர்வர், சகோதரர் சகோதரரைஉள்ளத்தாற்புணர்வர்: இப்புணர்ச்சி குன்றுதாயின் இடையன்பாம்: நெகிழ்ந்து வரம்புகடந்து மெய்கூச்செறிந்து நாத்தடுமாறி ஆனந்தபரவசமுற்றால் தலையன்பாம். அவற்றிற் பிறழ்ந்து திரிபுறின் கடையன்பாம். மேற்கூறிய செய்யுளே மாணிக்கவாசகசுவாமிகளின் தலையன்பை உணர்த்துகின்றது.

### 13 கற்புநெறி:—

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.

தொ. சூ. 142.

களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன (இ. அ. 60)

கற்பு உயர்குலத்தலைவனதும் தலைவியினதும்உள்ளத்து நிகழ்கின்ற அன்பின் உயர்வின்கண்ணது என்றவாறு.

பேதம் இல்லதோர் கற்பளித்த பெருந்துறைப்பெரு
வெள்ளமே
ஏதமேபல பேசநீஎனை ஏதிலார்முனம் என்செய்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதல் சாதல்பொல்லாமையற்றதனிச்சரண்சரணமெனக்
காதலால்உனைஓதநீவந்து காட்டினய் கழுக்குன்றிலே.

என்னும் திருவாசகத்தால் வேறுபாடடைதற் கேதுவில்லாத ஒப்பற்ற கற்பு நிலை என்றார். கற்பு=பெண்டிர் பிறஆடவரை நாடாநிலை. ஆன்மா பிறதெய்வத்தை நாடாநிலையுமதுவே.

தலைவனும் தலைவியும் முதற்கண் இயற்கைப் புணர்ச்சியும், அதற்குப் பின்னர் இடந்தலைப்பாடும், அது ஏற்றபின்னர் பாங்கற்குச் சொல்லிஅவனுற்கூடுதலும் அதன் பின்னர் தோழியைப்பின்னின்று குறைமுடித்துக் கே டலுமென மறைவொழுக்கத்தைச் சான்றோர் நெறிப்படுத்துவரென்பது.

காமப் புணர்ச்சியு மிடந்தலைப் பாடும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே. (தொ. சூ498)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. அவரது கரந்த ஒழுக்கம்,

மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு
மிவைமுத லாகிய வியனெறி திரியாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே. (தொ.சூ.499)

என்றாராகலின், மகிழ்ச்சியும், புலத்தலும், ஊடலும் உணர்தலு மென்னும் நான்குடன் பிரிவுட்பட ஐந்தும் கற்பென்னும் கைகோளென்ப.

மறை வெளிப்பட்டு தமரிற் பெறாராயினும் அதுகாரணமாக தமரிற்பிரிந்து தலைவன் தலைவியை உடன் அழைத்துச் சேறலும் அவ்விதம் செல்லுங்கால் தமர்தேடிச் செல்லுதலும் கண்டோர் மொழிதலுமென கற்புநிலை விரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்புஞ் சிறுநுதலுஞ் சில்குழலும்
பல்வளையு மொருபாற் றோன்ற
வலங்கலந் திண்டோளு மாடெருத்து
மொண்குழையு மொருபாற் றோன்ற
விலங்கலருஞ்சுரத்து வேறுருவி
னோருடம்பாய் வருவார்க் கண்டே
யிலங்க லவிர்சடையெம் மண்ணல்
விளையாட் டென்றகன்றேம் பாவம்.
(தொல் மேற்கோள்)

கண்டது மொழிதல், கண்டோர் மொழிதல் முந்தியாக தேவாரத்துள் பல செய்யுள்கள் காணலாம்.

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னைப்
பாரொடுநீர் சுடர் படர்காற் றாயினானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னின்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் றன்னை
நெஞ்சுண்டென் நினைவாகி நின்றான் றன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர் போய் நீங்கவோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந்தானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

இதுவும் கண்டது மொழிதல் அப்பர்திருத்தாண்டம்.

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணிர்!
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும;
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிழை மடவ ருயிர்நீர் போறீர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கா லும்மகளுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே.
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்காலும்மக ளுமக்குமாங்கனையளே. எனவாங்கு

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்.
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்.
ளறந்தலைப் பிரியா வாறுமற் றதுவே. [கலி-9]

என்னுமிப்பாலைக்கலி நற்றாய் வினவியதும் கண்டோர் நெறிப்படுத்தியதும் கூறுகின்றது.

பின்வரும் திருத்தாண்டகங்களுமதுவே.

நீறுடைய திருமேனி பாக முண்டோ
 நெற்றிமே லொற்றைக்கண் முற்று முண்டோ
கூறுடைய கொடு மழுவாள் கையிலுண்டோ
 கொல்புலித்தோ லுடையுண்டோ கொண்ட வேடம்
ஆறுடைய சடையுண்டோ வரவ முண்டோ
 வதனருகே பிறையுண்டோ வளவிலாத
ஏறுடைய கொடியுண்டோ விலய முண்டோ
 வெவ்வகையெம் பிரானுரைக் கண்டவாறே.

இது வினவுதல். திருத்தாண்டகம்.

பொன்னொத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்
 புலித்தோலுடை கண்டேன் புணரத் தன்மேல்
மின்னொத்த நுண்ணிடையாள் பாகங் கண்டேன்
 மிளிர்வதொரு பாம்பு மரைமேற் கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னத்தே றூர்ந்த வரக்கன் றன்னை
    யலற வடர்த்திட்ட வடியுங் கண்டேன்
சின்ன மலர்க்கொன்றைக் கண்ணி கண்டேன்
    சிவனைநான் சிந்தையுட் கண்டவாறே.
[திருத்தாண்டகம்]

இது கண்டது மொழிதல்.

**14 இன்பத்துறை: —**

சான்றோர் களவுநெறியை ஆற்றுப்படுத்துக்கூறுமிடத்து ஒத்த அன்பின்வழி நின்று இன்பத்துறையில் இல்லறம் நடத்தினரை, வீடுபேறு எய்துமாறு வஞ்சித்துக் கொண்டு சென்று முத்திநெறிப்படுத்துதல் என்பர்.

தலைவனும் தலைவியும் தமது உரிமைச் சுற்றத்தோரோடு கூடி நிகழ்த்திய இல்லறத்தில் தாம் முன்னர் அனுபவித்த காமம் துன்பத்தினிடத்தது என்று உணர்ந்து அறம்பொருள் இன்பத்திற் சிறந்ததாகிய வீட்டின்பத்தை, மாறாத பேரின்பத்தைப் பெறுதற்கு ஏமஞ்சான்றவற்றை அடிப்படுத்துதல் முன் நிகழ்த்திய இல்லறத்தின் பயன் என்பது.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிளவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே. [தொ. சூ. 192]

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக.

அஃது காஞ்சியாகாதோ? எனின், ஆகாது! நிலையாமையைச் சான்றோர் கூறுதலும் அந்நிலையாமை தானே வந்து நிற்றலும் காஞ்சியாம். அங்ஙனமின்றி, இல்லற வேட்கையிற் சிறந்துநின்ற குறிப்பு யாண்டு மனுபவத்தின் மிகுதியால் அறம் பொருள் இன்பத்திற்சிறந்த வீட்டின்பத்தின் வேட்கையால் தாமே யாவற்றையும் பற்றறற்றுத் துறத்தல் அகப்பொருட்பகுதியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தில் நின்ற நெறியினல்—பதிவிரதா நெறியின் மாண்பால், இறைவன் தாமே தோன்றி நெறிப்படுத்துதலும் அன்றித் தவமிக்க குருகடாட்சத்தால் நெறிப்படுத்துதலும் எனப்பல பகுதியாகக் களவு நிகழ்ந்து நெறிகொள்ளும்.

களவிற்சிறந்தது கந்தர்வநெறி. தலைவனைக் காணுதலும் ஐயந்தீர்தலும், குறிப்பறிதலும் உடன் போக்கும் முதலியன அந்நெறியாதலால் அந்நெறியைத் துறைப்படுத்திக் கூறும் தொல்காப்பியர்: –

இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோரியல்பே தொ.சூ.92

என்றார்.

இச்சூத்திரத்துட் கூறும்

15 அறமாவது: -

நான்காம், ஐந்தாம், ஆறும் திருமுறைகளிற் கூறப்படும் அறமும் அவ்வறநிலையில் நின்ற வாகீசப் பெருந்தகையார் வாழ்வுமாம். மற்றோரும் அறங்கூறினராயினும் அவ்வாழ்வு பெற்றிலராதலால், பண்டு இறைவன் நால்வர்க்கருளிய அறனின்பகுதி உலகம் உய்ய யாண்டுமிறைவன் உலகிற்கருளிய திருவருள் இஃதென்க.

இடையறாப் பேரன்பு மழைவாரும்
இணை விழியு முழவாரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகை தன் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

என்னும் திருநாவுக்கரசர் தோத்திரம் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 **பொருளாவது;—**

திருவாசகம் திருக்கோவையார், முதலியவற்றுல் கூறப்பட்ட பொருளின் துறைகளும், விஞ்ஞானமும், மாணிக்கவாசகப்பெருந்தகையாரது வாழ்வுமாம். மாணிக்கவாசகசுவாமிகளுடைய திருவாசகத்தில் தற்கால விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டனவையும் இன்னும் காணப்பட வேண்டியனவையும் காணலாம்.

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி.

இது மணிவாசகருக்குக் கூறும் வணக்கத் திழுப்பாடல்.

இன்பமாவது; ஏழாவது திருமுறையும் நம்பியாரூரது வாழ்க்கை நலமும் இறைவன் நம்பியாரூரரை மணப்பந்தலிற் றடுத்தாட்கொண்டு, பின்னுமிரு கன்னியரைப் புணர்ப்பித்து இன்பம் நுகருவித்தவாறும்.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகை விரித்த
பேரருளின் பெருமானென்னுந்
திருமணக்கோ லப்பெருமான் மறைப்
பெருமா னெனது குல தெய்வமாமால்.

என்னும் செய்யுளாற் காண்க.

17 **அன்பின் புணர்வாவது;—**

இந்நூலிற் கூறப்பட்ட அன்பின் இலக்கணம் பொதுவும், உரிப்பொருள் இலக்கணச் சிறப்பும் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்திணையாவன;- முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் பாலை என்னும் ஐவகை நிலனும் ஒழுக்கமுமென்ப. தொல் காப்பியம் திணை இயல்கள் பார்க்க.

18 **காமக்கூட்டங் காணுதலாவது;—**

சிறந்த திருவருள் நெறியில் நின்று அனுபவமிகுதியாற் கண்ட வீட்டு நெறியின் காதலும், அக்காதலின் தன்மையை,

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதனும நமச்சி வாயவே.

என்று சிறப்பித்துக்கூறி நாதன் நாமத்தை ஓதிக் கொண்டு சுற்றத்தவர்க்கும் பிறர்க்கும், திருப்பெரு மணமென் னுங் கோயிலில் தோன்றிய சோதியினுள் வீடெய்துவித்த பெருந்தகை திருஞானசம்பந்தசுவாமிகளது வாழ்வுமென்க.

பரசமய கோளரியைப் பாலரு
வாயனைப் பூம்பழனஞ் சூழ்ந்த
சிவபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர்தங் குல தெய்வத்தை
விரவியெமை யாளுடைய வென்றி மழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

என்னும் ஞானசம்பந்தர் வணக்கப் பாடல் காண்க.

19 **மறையோராவார்:—**

வேதத்தை உணர்ந்து அந்நெறியைச் சேர்ந்தோரென்ப பார்ப்பனரும் அவரே. வாகைத்திணை பார்க்க.

20 **மன்றல் எட்டாவன;**

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் எனத் தொகை விரித்துச் சொன்னவாறென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை என்றிக் கூறிய
மறையோர் மன்றல் எட்டிவை அவற்றுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பிதன்
பொருண்மை என்மனார் புலமையோரே. என்றாராகலின்

அறநிலை என்பது பிரமம்:- நாற்பத்தெட்டாண்டு பிரமச்சாரியம் காத்தானுக்கு பன்னீராண்டுப் பிராயத்தாளை அணிகலன் அணிந்து கொடுப்பது.

ஒப்பு என்பது பிரசாபத்தியம்;-

மைத்துன கோத்திரத்தான் பெண்வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது.

பொருள்கோள் என்பது ஆரிடம்;

ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பின வாகச்செய்து அவற்றிடைக்கன்னியை நீரிற்கொடுப்பது.

தெய்வம் என்பது வேள்வியாசிரியர்க்கு வேள்வித்தீமுன் வைத்துக் கொடுப்பது. அது தெய்வமாக வழிபடற்குரியதென்பர்.

யாழோர் கூட்டம்; என்பதுகந்தர்வம். அன்பின் ஒத்தார் இருவர் கொடுப்பாரு மடுப்பாருமின்றித் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது.

அரும்பொருள் வினைநிலை என்பது அசுரம். வில்லேற்றினன், கொல்லேறு தழுவினன், குறிவைத்தெய்தான், மாலை சூட்டப்பட்டான், பொருள்கொடுத்தான் முதலியோ ரெய்தும் மணம்.

இராக்கதம் என்பது அவள் தன்னினும், தமரினும், பெறாது வலிந்து கொள்வது.

பைசாசம் என்பது மூத்தாள்மாட்டும் துயின்றாள்மாட்டும் களித்தாள் மாட்டும் சார்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையாவது; இந்நூலிற் கூறியிருக்கும் துறைவிளக்கம் (பந்தி 3) பார்க்க.

அத்துறையுட் சிறந்தது அருளும், அன்பும், அறனும் என மூன்றென்ப.

செறுதீ நெஞ்சத்துச் சினநீடினோரும்
சேராவறத்துச் சீரிலோரும்
அழிதவப் படிவத் தயரியோரும்
மறுபிறப் பில்லெனு மடவோருஞ் சேரார்
நின்னிழ லன்னோ ரல்ல தின்னோர்
சேர்வா ராதலின் யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளு மன்பு மறனு மூன்றும்
உருளிணர்க்கடம்பி னொலி தாரோயே [பரிபாடல்]

21 **நல்யாழ்த் துணைமையோரியல்பு**: என்பது.

இறைவன் தலைவனாகவும் ஆன்மா தலைவியாகவும் மருவும் பதிவிரதாநெறி. தேவாரம் திருவாசகம் முதலியவற்றுள் பெரும்பான்மையான செய்யுள்கள் கைக்கிளைக்குறிப்புடைய கந்தர்வநெறி தழுவியே ஆக்கப்பட்டிருக்கின்றன. தலைவன்மேற் றலைவி எவ்விதம் பற்றுடையாளாக இருக்கின்ருளோ அதுபோல் நாம் இறைவன்மேல் பற்றுக் கொண்டொழுகல் நிறையாம்.

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.
இதுபுணர்தல் முந்தி. [திருவாசகம்]

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
கையுமிது வென்னே அன்னே என்னும் [திருவாசகம்]
இது பிரிதல் முந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும்
இது ஊடல் முந்தி.

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுவென்னே அன்னே என்னும்
இது இரங்கல் முந்தி.

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டி நன்நாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் நாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும்
இது இருத்தல் முந்தி.

பின்னது நான்கு செய்யுளும் சிவபெருமானைத்தனது தலைவராகக் கருதிய ஒரு சிறுமி தாயை நோக்கிச் சொன்ன வாறு கூறியது.

## 22 புறம்.

புறம் என்பது அகத்திற்குப் புறம்பாக உள்ள தென்க. அகத்திணைக்குப் புறம்பாக நிற்குந்திணையென்றதனால், அகத்தைச்சார்ந்த புறம் கூறுவது மரபு.

அதுவும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுதிணைகளென்க. அவ்வத்திணைக்கு அவ்வம்மாலை சூடிச்செல்லுதல் உரியதாதலால் அவ்வப்பூக்களின் பெயரால் திணைகளும் வழக்கப்படும்.

23 **வெட்சி;-** குறிஞ்சிக்குப் புறனும்.

இது களவின்கண் நிரைகொள்ளும் ஒழுக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவொழுக்கமும் கங்குற்காலமும் காவலர்கடுகினும் தாம் கருதிய பொருளை இராக்காலத்து முடித்து மீள்வதும் போல்வன ஒத்தலின் வெட்சித்திணை குறிஞ்சித்திணைக்குப் புறனாயிற்று. இருபெரு வேந்தர் பொருதுங் கருத்தால், அன்பினும் அறத்தினும் மிக்கானாகிய வேந்தன் தீங்கு செய்யா ஆவும், அந்தணரும் போன்ற வேற்றுப் புலச்சாதிகளை களவின்கண் கொண்டு சென்று காத்தல் என்பர்.

24 **வஞ்சி**:- முல்லைக்குப் புறனும்.

இது மண்ணாசையான் மேற்சேறல். காடுறையுலகமும், கார்காலமும் தலைவி தலைவனைப்பிரிந்து மனையகத்திருத்தலும் தலைவன் தலைவியைப் பிரிந்து பாசறைக்கண் இருத்தலும் விலங்கு முதலிய கருஉரிப்பொருள் ஒப்பச்சேறலின் வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப் புறமென்ப.

25 **உழிஞை**:- மருதத்துப் புறனும்.

இது மதிலை வளைத்தல்.

இருபெருவேந்தர் மாறுகொண்டு பொருதுங்கால் எதிர் செல்லற்காற்றானாகிய வேந்தன் மதிலகத்திருப்ப எதிர் சென்றோன் மதிலை வளைத்து முற்றுக்கையிட்டு வாயில் வேண்ட அகத்திருந்தோன் வாயிலடைத்துக் காத்துநிற்றலும் வைகுறு விடியல் முதலிய காலங்கள் யுத்தத்திற்கு உகந்த காலங்களாயும், பெரும்பொழுது வரையின்மையாலும் பெரும்பாலும் அரண்கள் மருதநிலத்து அமைவதாலும், முதற்கருஉரிப் பொருள்கள் ஒப்பச்சேறலின் உழிஞைத்திணை மருதத்திணைக்கு புறனாயிற்று.

26 **தும்பை**:- நெய்தற்குப் புறனும். இதுபோர் செய்தல்.

பெரும்பொழுது வரையின்றி எல்பாடு என்னும் சிறுபொழுது, போர்முடிக்க உகந்த காலமாக வருதலாலும் காடும் மலையும் கழனியுமல்லாத களரும் மணலும் பொருதுகளமாக வேண்டுதலாலும், இரக்கம் பெரும்பாலும் தலைமகட்கே உரியதுபோல தும்பைத்திணையின்கண் கணவனை இழந்தார்க்

கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், வீரர்களின் குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குபவாகலானும் வீரத்தோடு மாண்டோரைக் கண்டு புறத்தாரிரங்குவாராதலானும், பிறகாரணங்களானும் தும்பைத்திணை நெய்தற்றிணைக்குப் புறனும்.

27 **வாகை**:- பாலைக்குப் புறனும்.
இது வெற்றிமாலை சூடுதல்.

குறிஞ்சித்தலைவன் புணர்ச்சியில் நீங்கிப் பொருள்தேடி இல்லறம் நிகழ்த்திப் புகழ்தேடுவதற்குப் பிரியுமாறுபோல, சுற்றத்தொடர்ச்சியில் நீங்கி, அறப்போர் செய்து துறக்கம் பெறுங்கருத்தினுற் சேறலானும், வாளினும் தாளினும் நிறையினும் பொறையினும் வெற்றியெய்துவோரும் மனையோரை நீங்கிச் செல்லலானும் பிரிவுளதாயிற்று. பாலை தனக்கென நிலமில்லாது நால்வகை நிலத்தும் மயங்குவதுபோல வாகையும் மயங்கும்.

தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தலென்ப. (தொல். சூ. 74)

என்றுராகலின்.

வலியும் வருத்தமுமின்றி இயல்பாகிய ஒழுக்கத்தால் நான்கு வருணத்தோரும் அறிவரும் தாபதர் முதலியோரும் இருவகைப்பட மிகுதிப்படுத்திக் கூறுபஎன்றுராயிற்று. இருவகையாவன தன்னைத்தானே மிகுதிப்படுத்தலும் பிறர்மீக் கூறுபடுத்தலுமென்ப.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபினரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமு
மறுவில் செய்தி மூவகைக் காலமு
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப்பக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலறி மரபிற் பொருநர் கண்ணு
மனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
றொகைநிலை பெற்ற தென்மனூர் புலவர். [தொ. சூ. 75]

ஆறுகூற்றினுட்பட்ட பார்ப்பியற்கூறும் அவை வகை என்றதனல் தலை, இடை, கடை என ஒன்று மும்மூன்ருய் பதினெட்டென்ப. அவை ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல் கோடல் என ஆரும்.

.............ஒருங்கிய மனத்தோர்
இருபிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
திருவெழுகூற்றிருக்கை.

இது ஓதுதலும் ஓதுவித்தலுமாக அடங்கும்.

ஓதுதலில் முதல் எழுத்தோதுவதே சிறந்தது. "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவதும் நாதனும நமச்சிவாயவே" என்றும் வரும் தேவாரமும் காண்க.

ஒருங்கிய மனத்தோர் என்பது: மனம் விடயங்களிற் சென்று சலியாத பார்ப்பனர் என்க. இருபிறப்போர்ந்து என்பது பார்ப்பனரின் பிறப்பு; தாம் பிறக்கும் பிறவியும், உபநயனம் தீட்சை முதலியவற்ருல் பெறும் பிறவியுமென இரண்டுவகைப்படும். முப்பொழுதாவன; காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலங்களிலும் செபதபம் முடித்தல். நான்மறை ஓதுவதாவது; தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களை ஓதுவது. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கும் பயக்கும். அவையே நான்மறை என்பதும் அவை ஓதுதற்குரிய முறையில் நான்மறைக்கு அகத்தும் புறத்தும் நிற்கும் வியாகரணமும், நிருத்தமும் கற்பங்களும் எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், கணிதமும், சத்தமுமென ஆறங்கம் விரியு மென்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தானை மதவேழந்தன்னை மின்னு
ரொளிமுடி யெம்பெருமானை யுமையோர் பாகம்
தரித்தானைத் தரியலர்தம் புரமெய்தானைத்
தன்னடைந்தார் தம்வினைநோய் பாவமெல்லாம்
அரித்தானை யாலதன்கீழ் இருந்து நால்வர்க்
கறம்பொருள் வீடின்ப மாறங்கம் வேதம்
தெரித்தானைத் திருநாகேச்சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே.

என்னும் திருத்தாண்டகத்தாலறியப்படும்.

28 **ஐவகை வேள்வி**; அதுவும் அகவேள்வி புறவேள்வி என இரண்டு வகைப்படும்.

அகவேள்வியாவது; i தாம் இயற்றும் சிவபூசை ஆன்மா நன்னெறியில் நிற்றல் பொருட்டு செய்யும் இறைவழிபாடு.

ii குருபூசை: குருகடாட்சம் உண்டாம்படி செய்வது.

iii மகேசுரபூசை: பிதுர் முதலியோரை நினைத்துச் செய்வது.

vi பிராமண போசனம்,

v அதிதிபூசை. என்னும் ஐந்து

புறவேள்வியாவது; i பிரமயாகம்; வேதங்களை இசைபட ஓதுதல்.

ii தேவயாகம்; மந்திரவிதியால் அவி சொரிதல். அவற்றால் வேளாண்மை மிகுந்து நாடுசிறந்து மங்கலமரபெய்தும் என்பது சான்றோர் விதி.

iii பிதுர்யாகம்;மூதாதைகளுக்குநன்னெறி கிடைக்கச் செய்யும் வழிபாடு.

vi மானுடயாகம்; இதுவிருந்தோம்பல்.

v பூதயாகம்; மற்றும் மிருகவர்க்கம் முதலியவற்றிற்கு உணவு கொடுத்தலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்கொடுக்க ஊர்கொடுக்க ஊண் கொடுக்கச் செய்யும் வழிபாடும் கிரியைகளும்.

இவை யாவும் இயற்றி ஓங்கார தத்துவமாகிய முதல் எழுத்து ஓதுவது என்ப.

மேற்கூறியவற்றால்,ஓதல்ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கோடல், கொடுத்தல் என்னும் ஆறுவகைப் பார்ப்பியல் கூறும் நெறிப்படும்.

ஓதல் முதலிய அறுவகை ஒத்தினுள் கோடல் கொடுத்தல் இரண்டும் முக்கியமானவை

இடரினுந் தளரினு மெனது றுநோய்
தொடரினு முனகழல்தொழு தெழுவேன்
கடறனி லழுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருளாவடுதுறை யரனே.

என்றுவரும் திருப்பாசுரங்கள் பாடி திருஞானசம்பந்தர் உலவாக்கிழிபெற்று சிவபாதவிருதயரைக் கொண்டு வேட்பித்தமையும் முற்கூறியவற்றுள் அமையும்.

தலையாய கோடலும், கொடையும் கல்வியே.

29 **கல்வி:—**

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். — குறள்.

கல்வியில்லாது ஓதல், ஓதுவித்தல், வேட்டல்,வேட்பித்தல் முதலியன பூர்த்தியாகா அன்றிக் கற்றோர் சென்றவிடமெல்லாஞ் சிறக்கும்.

ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை—யந்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுநா டாகா தமவேயா மாதலா
லாற்றுணா வேண்டுவ தில். [பழமொழி]

கல்லாதவர் நெஞ்சில் ஈசனும் நில்லான்;

கல்லா நெஞ்சின்
நில்லா னீசன்
சொல்லா தாரோ
டல்லோ நாமே.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

கல்லாரைக் கண்டால் அஞ்சத்தக்கது. [அஞ்சேன்
புற்றில்வாழ் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும்
கற்றைவார்சடைஎம்அண்ணல் கண்ணுதல்பாதம்நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை உண்டெனநினைத்தெம்
பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்ம நாம் அஞ்சுமாறே.
திருவாசகம்.

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே. [புறம். 183]

இவ்வாகைத் திணைக்கண் தலையாய பகுதிகளிற் சிலவே எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளின் விரிவு பெருநூல்களிற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 **காஞ்சித்திணை**; பெருந்திணைக்குப் புறனும்.

பெருந்திணை, உரிப்பொருள் சிறப்பற்றதாய் எண்வகை மணத்துள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், என்னும் நான்குவித மணங்களைப் பெறுமாறுபோல் காஞ்சித் திணையும் அறம், பொருள், இன்பமாகிய மூன்றும் மற்றும் நிலையாமை பெறும் கூறுமாகிய நான்கு ஒழுக்கத்தோடு மயங்குவதினுல் பெருந்திணைக்குப் புறம் என்ப.

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்ரு னு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே. [தொ.சூ.78]

தனக்குத் துணையில்லாத வீட்டின்பம் ஏதுவாக அறம், பொருள், இன்பமாகிய பொருள்பகுதியும் யாக்கை, இளமை, செல்வம் முதலிய நிலைபேறில்லாதஉலக இயற்கையும் பொருந்தியது என்ருராகலின், வீடுபேறு நிமித்தமாக, சான்ரேர் பலவகைப்பட்ட நிலையாமையை எடுத்துக் கூறும் பாங்குடையது காஞ்சித்திணை என்றவாறு.

காஞ்சித்திணை பெரும்பாலும் சான்ரேர் கூறும் நிலையாமையையே கருதும். அன்றியக்காஞ்சிதானே வந்தெய்தினும் எய்தும். சான்ரேர்கூறும் காஞ்சித்திணை; பெருங்காஞ்சி, முதுகாஞ்சி போன்றவை. தானேவந்தெய்தும் காஞ்சி மறக்காஞ்சி மன்னைக் காஞ்சி வஞ்சினக்காஞ்சி, பேய்க்காஞ்சி, ஆஞ்சிக் காஞ்சி,மகற்பாற்காஞ்சி என பலவாகவிரியும். காஞ்சித்திணை வீரத்தோடு தொடர்புடையது.

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்.
[தொ. சூ. 79-1-2]

மனிதர்க்கு வயதுநூறல்ல தில்லை
ஐம்ப திரவி லகலுந் துயிலினுல்
ஒட்டிய இளமையா லோரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையி லைம்மூன்று நீங்கும்
எழுபது போக நீக்கிருப்பன முப்பதே.
அவற்றுள் [இது முதுகாஞ்சி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறு நாளுஞ் சிலவே யாதலால் அன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்
பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்று
இடிகரை யொத்தது இளமை இடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
அன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை யென்பீ ராகில்
நமனுடை முறை நாளாவது மறியீர்
நம்முடை முறை நாளாவது மறியீர்
எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தரியா னொருகணம் தறுக ணாளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்
உயிரினை யிழந்தோ உடலினை யிழந்தோ
உயிரிழந் தழுதுமென்று ஓதுவீ ராகில்
உடலினை யன்றவோது இன்றுங் காண்கிலீர்
உயிரினை யிழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலு மார்த்துக் கையு மார்த்துக்
கூறை களைந்து கோவணங்கொளுவி
ஈமத்தீயை எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த் தமரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ. [கபிலர்]

இஃது பெருங் காஞ்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெ னீரே.
இதுவும் பெருங்காஞ்சி

பறியே சுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளு நாளாலற முளவே
அறிவானிலு மறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே.
இதுவும் பெரும்காஞ்சி. [சுந்தரர்]

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேது மகிழ வேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
றிகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சிவாய
வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.
[இதுவும்பெருங்காஞ்சி] அப்பர் திருத்தாண்டகம்.

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமாறறியா தலமந்துநீ
ரயர்ந்துங் குறைவில்லை யானேறுடைப்
பூமா ணலங்க லிலங்கு கொன்றை
புனல்பொ திந்தபுன் சடையினு னுறையும்
தூமான் கடந்தைத் தடங் கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின் களே.
இதுவும் பெருங்காஞ்சி.

பண்ணீர்மை குன்றிச் செவிகேட் பிலா
படர் நோக்கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோ லொடு
நரைதோன் றுங்கால நமக்கா தன்முன்

பொன்னீர்மை துன்றப் புறந்தோன்று நற்
புனல்பொ திந்தபுன் சடையினு னுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடந் தொழுமின் களே. [சம்பந்தர்]

வீடுபேறேதுவாக வாழ்க்கையை முனியாது நெறிப்படுத்தும் முதுகாஞ்சி.

தந்தையார் போயினர் தாயரும் போயினர் தாமும்போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழைநெஞ்சே
அந்தணூர்தொழு துய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.
பெருங்காஞ்சி.

வைத்த நிதிபெண்டீர் மக்கள் குலங்கல்வி என்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.
திருவாசகம்.

காஞ்சித்திணையில்விரம்விரவும் பகுதிகளாவன.

......... பெருஞ் சிறப்பிற் புதல்வன் பெயரத்
தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையு" [தொ.சூ.79-32-33]

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயினுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. (பு. நா. 278)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தன்னருமை மைந்தனை யிழந்தாளொருதாய் அவன் இறந்ததற்குக் கவலாது போரில் புறமுதுகிட்டு இறந்தானெனக் கேட்டு வஞ்சினங்கூறிப் போர்க்களம் புகுந்து அவன் மார்பிற் காயம்பட்டிறந்தமை நேரிற்கண்டு மகிழ்ந்தது கூறும் பாட்டு. இதில் அவளுடைய தேசபக்தியும் வீரமும் ஒருங்கு விளங்குவதைக் காணலாம்.

31 **பாடாண்டிணை**;- கைக்கிளைக்குப் புறனும்.

இது ஒருவன் புகழ், வலி, வீரம், கொடை, அருள் முதலியவைகளைப் பாடுதல். பாடுதலையும் பாடப்படும் ஆண்மகனையும் நோக்காது ஒழுக்கத்தினையே யுணர்த்தும் பாட்டுடைத்திணை யென்றும் கொள்க.

ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒருபுலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின் அவை தம்மில் வேறாகிய ஒருதலைக் காமத்தோடொத்தலின்பாடாண் கைக்கிளைக்குப் புறத்திணையாயிற்று. புகழ்விரும்பிச் சென்றோர் வெட்சித்திணை முதலியவற்றைப் பாடின் அது கைக்கிளைக்குப் புறனாகாதென்பது விதி.

பாடாண் தன்பொருட் பகுதியெல்லாம் கூடியதொன்றாகவும் இருவகை வெட்சிப் பொருளும், உழிஞைப் பொருளும் தும்பைப் பொருளும், வாகைப் பொருளும் காஞ்சிப்பொருளுமாகிய ஏழுமாகவும் எட்டாம்.

இங்கு கூறிய எட்டனுள் தம்பொருட்பகுதிகள் யாவும் கூடியதொன்றாகிய பாடாண்டிணைக்குதேவரும் மக்களுமுரியர்

அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினு
மொன்றன் பகுதி யொன்று மென்ப. (தொ.சூ.81)

என்னும் இச்சூத்திரத்தின்கண் மக்கள் அல்லாத அமரர் என்றதனுல் முனிவர், பார்ப்பார், ஆநிரை, மழை, முடியுடைவேந்தர், உலகம் இவைகளை வாழ்த்துதல் என்ப. புரைதீர் காமம் உயர்ச்சியுள்ள காமக்குறிப்பு என்ப. அஃதில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமமாவது மறுமைப் பயன்பெறுங் காமக்குறிப்புப் போல் இம்மையிற் பெறும் இழிந்த பொருள்களிற் செல்லும் வேட்கைக் குறிப்பும் தம்பொருட்டும் பிறர்பொருட்டும்பயன்கொடுக்கக்கூறுவனவுமாய் ஒன்றன் பகுதி ஒன்றாக முடியும் என்பது இச்சூத்திரத்தின் குறிப்பாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. (சம்பந்தர்)

இத்தேவாரத்தால் கடவுள் அந்தணர் வானவர் ஆனினம் மழை வேந்தன் உலகம் யாவும் வாழ்த்தப்படுதல் காண்க. இது அறுமுறை வாழ்த்தும் புரைதீர் காமமுமாக உயர்ந்த குறிப்புடையது.

அகரமுதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. — குறள்.

கடவுள் வாழ்த்தோடு உலகமும் உலகிற் கின்றியமையாத எழுத்தும் வாழ்த்தப்பட்டது.

இச்சூத்திரத்தின்கண் கூறப்பட்ட அறுமுறை வாழ்த்து அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல், என ஆறென்பது இளம்பூரணர் கருத்தென்பர்.

32 **புரைதீர் காமப்பகுதி:** –

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என் னுயிர்க் காரமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே. —திருவிசைப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறணிபவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர்நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செயம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. திருவிசைப்பா

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமரரேறே.
—திருத்தாண்டகம்.

மாற்றே னெழுத்தஞ்சு மென்ற னாவின்
மறவேன் றிருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வ மெண்ணா நாயே
னெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
மேற்றானீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றே னடியேனை யஞ்சே லென்னா
யாவடுதண் டுறையுறையு மமரரேறே.
— திருத்தாண்டகம்.

கருடக் கொடியோன்காணமாட்டாக்கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங்கென்னை யாண்ட பொல்லாமணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கேவாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான்ஆசைப்பட்டேன்கண்டாய்அம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும் விடையாய்
பொடியாட
எளிவந் தென்னை ஆண்டுகொண்ட என்னா ரமுதேயோ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.
— திருவாசகம்.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த சிவபுராணம் புரைதீர்காமப் பகுதியாகவும் இறைவாழ்த்தாகவும் அமையும்.

திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடி போற்றி
ஆராத வின்பம் அருளு மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தைவினை முழுதும்ஓயவுரைப்ப னியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி [யாய்
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
எண் இறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடியமாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே [தின்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

இது சிவனது அனாதிமுறைமையான பழமை. பொருளுணர்ந்து முக்காலமும் ஓதுதற்குரியது.

பாடாண்திணைக்கண் வரும் பலவகை வாழ்த்துக்களும் புரைதீர்காமப்பகுதிகளும் மேற்கூறியவற்றின்கண் அடங்கும்.

இப்பாடாண்திணைக்கண், ஒருதலைவன் வாழ்த்தப்படும் பொழுது, பரவலும் புகழ்ச்சியும் தலைவன்கண்ணதாயும், பரிசில் பெறுதல் பாடுவான் கண்ணதாகவும் முடிவுறும். அப் பரிசில் பெறுவோன், பொருளின்கண் உளதாகிய வேட்கை யின்மையிற் பாடுதலே கைக்கிளைக்குறிப்பாகி, பாடாண் பகுதியாகமுடிவுறுமாதலால், இறைவனிடத்தே நாம்வேண்டும் கந்தழி, இறைவன் கண்ணதாகவும் அக்கந்தழியைப் பெறும் புருடன் (ஆன்மா) வேட்கைக் குறிப்பில்லாது பற்றற்றுப் புகழ்தல் பலதுறைகளமைந்த செவ்வனகூறும் துறை நிலை பெற்று செந்துறையாகி அச்செந்துறைக்கண் வரும் வருணங் களின் வரும் கூறுபாடு நீக்குநிலையின்மையாக நிலைபெற்று இப்பாடாண்பகுதியுள் முடிவுறும். திருமுறைகள் வகுத்தவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவும், சான்றோர் தமக்குப்பாடாண்டலைவற்கண் நிகழ்ந்த ஒருதலைக் காமம்பற்றிச் செய்யுள்கூறினரன்றி வேட்கைபற்றி அகப்பொருள் கூறினராயின் அவை பாடாண் பகுதியல்லாத அகத்துறைகளில் அமையும்.

## 32 கொடிநிலை கந்தழி வள்ளி:—

அன்றியும் முற்கூறிய தேவரும் மக்களும் எனப் பகுத்து முறைமைகூறி அத்தேவரைப்போல் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக்கு உரியர் என,

கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (தொ.சூ.88)

என்றாராகலின்,

இவற்றை நச்சினார்க்கினியர்,கொடிநிலை-கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத்தோன்றும்வெஞ்சுடர்மண்டிலம் என்றும், கந்தழி - ஒருபற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள்என்றும், வள்ளி-தண்கதிர்மண்டிலம் என்றும் சொல்லப்பட்ட குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வங்களும் முற்கூறிய அமரரோடு கருதும்ஆற்றல் தோன்றும் என்றும் கூறுவர். பன்மீன் தொடுத்த உடுத்தொடையைக் கொடியெனப்படுதலின் அத்தொடையினை இடைவிடாதுடைத்தாதலின் அதனை அப்பெயராற் கூறினரென்ப. அமரர் என்னும் ஆண்பாற் சொல்லுள் அடங்காத பெண்பாற்றெய்வமும் வள்ளி என்னும் கடவுள் வாழ்த்தினுட்படுமென்பர். ஏனெனின் ஞாயிறு நெருப்பின்தன்மையும் ஆண்தன்மையு முடைமையாலும் திங்கள் நீரின் தன்மையும் பெண்தன்மையுமுடைமையாலும் போல்வனவென்பர்.

எமது சரீரம் வெஞ்சுடர் மண்டிலத்தின் பகுதி. எமது அறிவு தண்கதிர்மண்டிலத்தின் பகுதி. தண்மையில்லாதும். இயக்கம் இல்லை வெம்மையில்லாதும் பொருள்கள் இயங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பசுபதிபாச இலக்கணத்தில் உள்ளன. "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி" என்னும்தேவார அடிகளின் நுண்பொருளுணர்ந்து கருத்தறிக. தேவாரதிரு வாசகங்களிற் பெரும்பான்மை இக்கருத்துக்கள் மறைபொருளாக கூறப்பட்டிருக்கின்றது காணலாம்.

மாணிக்கவாசகசுவாமிகள் திருவண்டப்பகுதியும் இவைகளின்பொருளை விளக்கும் கீர்த்தித்திருவகவலும் மலேதே. திருஞானசம்பந்தசுவாமிகளின் தேவாரங்களுள் பலமேற் கூறிய சூத்திரப்பகுதியுள் அமையும். அவற்றுள் முக்கியமானது கோளறுபதிகம் அதனையும் இங்குதந்தனம்.

## கோளறுதிருப்பதிகம்

பண்—பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்போடாமை யிவைமார்பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொடொன் றொடேழு பதினெட்டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கண் முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மானபலவும்
அருநெதி நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களான பலவும்
அதிகுண நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர்
மடவாடனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளரி நல்லநல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல்
வெப்போடு குளிருமாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடு முடனய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனல்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடனல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலைகடன் மேருநல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரோ டமணைவாதி லழிவிக்கு மண்ணா
　　திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
　　வடியா ரவர்க்கு மிகவே.

தேனமர்பொழில் கொளாலை விளைசெந்நெ றுன்னி
　　வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
　　மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளுநாளு மடியாரைவந்து
　　நலியாதவண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானி
　　லரசாள்வ ராணை நமதே.

கோளறு திருப்பதிகத்தை நித்தமும் அன்பாகப் பாராயணம் செய்துவரின் கோள்களினால் வரும் துன்பங்கள் நீங்கப் பெற்று பேரின்ப மெய்துவர் என்ப.

33 **துயிலெடை - நிலை:—**
தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதரேத்திய துயிலெடை நிலையும் [தொ். சூ. 91]

தமது வலியாலே பாசறைக்கண் ஒருமனக்கவர்ச்சியின்றி துயின்ற மன்னவர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெடுப்பின் புகழ்ச்சிகூறிய துயிலெடைநிலையும் என்றார். சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலியோருட் சூதரே இங்ஙனம் வீரத்தாற் துயின்றோரை துயிலெழுப்புவரென்பதும் "கிடந்தோர்க்கு" எனப் பன்மை கூறவே அது தொன்றுதொட்டு வரும் என்பதும், அவர் அங்ஙனம் துயின்றமை பிறர்க்கும் புலப்படப் புகழ்தல் அவர் கருத்தாதலின் ஒருதலைவேட்கையுடையதாயினது என்பதும் கொள்க.

கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத்திறையரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே. [ப.பா.118]

என்னும் பன்னிரு பாட்டியல் சூத்திரமுங் காண்க.

இருசுடர் தொடங்கி இன்றுகாறும் வருகின்ற தம்மரபுள்ளோர் புகழை அரசர் கேட்பதற்கு விரும்புவார் என்று கருதி விடியற்காலத்தே பாசறைக்கண் சென்று துயிலெடை பாடுவாரென்பதும் அத்துயிலெடையில் திறைசெலுத்திய மன்னரும் திருசெலுத்த வேண்டிய மன்னர்களும் உன்னைப்போற்றி, உன்மொழியைக்கேட்டு இனிது நடத்தலை விரும்பி வந்திருக்கின்றார்கள். ஆதலின் இத்துயிலினின்று எழுந்தருள்க என்று கூறுவர் என்பதும் ஈண்டுக் கூறப்பட்டது. மன்னர்களைத் துயில் எழுப்பிய செய்யுள்கள்தற்கால இலக்கியங்களுள் காணப்படவில்லை. இறைவனைத் துயில்எழுப்புவது திருமுறைகளில் உள்ளது. இறைவனைத் துயிலெழுப்புவதினால் திரோதானமென்னும் மறைப்பு நீங்கும்.

திருப்பெருந்துறையில் அருளிய

## திருப்பள்ளி யெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மணவாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

ஒவ்வொருநாளும் விடியற்காலத்து ஓதத்தக்கது.

34 **ஆற்றுப்படை;** -

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (தொ.சூ 91)

ஆடன்மாக்கரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும், இவருட் பெண்பாலராகிய விறலியு மென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெரும் செல்வத்தை எதிர்வந்த வறியோருக்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம்பெற்றவையெல் லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்.

ஓர் இரவலன் செழுமையில் மிக்கானுகிய ஒரு வேந்தனிடம் சென்று பெரும்பொருள்களைப் பரிசிலாகப் பெற்று ஒருவணத்திடை வருகையில் அவ்வழியாகச் செல்லும் கூத்தர் பாணர் முதலியவருள் ஒரு வறியவரைக்கண்டு, "தனக்குப் பரிசில் அளித்த வேந்தனுடைய நாடு ஊர் பெயர் கொடை முதலிய பண்புகளைப் புகழ்ந்து, அங்கு சென்றால் என்னைப் போல் பரிசு பெற்று மீளுவாய் என, வழிப்படுத்திக் கூறுவதே யாம்.

புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை

என்னும் பன்னிரு பாட்டியல் சூத்திரத்தான் ஆற்றுப் படை இலக்கணம் காண்க.

ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும் (தொ.சூ.91)

இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியில் நிற்றல் நன்றென்றுங் கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே, தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்து பெறுதார்க்கு இன்னவிடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்.

இச்சூத்திரப் பகுதியுரையுள் "பக்கம்" என்றதனானே நச்சினார்க்கினியர் அச்செய்யுள்களை பாணாற்றுப்படை பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படை என வழங்கலாமென்பர். ஆற்றுப்படை = ஆறு + படு + ஐ, ஆறு = வழி படு = தோன்று ஐ = தொழிற்பெயர் விகுதி.

ஆற்றுப்படையுள் ஓதி நெறி எய்தும் கடவுட் தன்மை வாய்ந்த, புண்ணியநூல் முருகாற்றுப்படை யென்ப. அது முருகன்பால் வழிப்படுத்திக் கூறினமையின் "திரு" என்னும் அடைபெற்றுத் தோன்றினது.

பாண்டியமன்னன் ஒருவன் தன் பட்டத்து மங்கையை அண்மி உலாவுகையில் தென்றலோடுகூடிய நறுமணம் அவள் கூந்தலில் இருந்து வீச அது தன் மனைவியின் கூந்தலின் இயற்கை மணமாதல் வேண்டுமென ஐயுற்று, சங்கப்புலவர் களை விளித்து, வினவி, ஐயம்நீக்கும்அரும் புலவர்க்குரியதென சங்கமண்டபத்தில் ஒருபொற்கிழி தூக்கினான். புலவர்களிற் பலர் அவன் ஐயம் நீக்க முயன்றும் பயன் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைச் சொக்கநாதர்பால், மாறு அன்பு பூண்ட ஒரு அந்தணன் தருமி என்னும் பெயருடையானென்பர். நாடுவந் கடஞ்சென்றமையின், மணம் முடித்துக் கொள்ள இயலாது பொருள்வேண்டிச்சொக்கநாதரை குறை இரந்து நின்றான். இறைவனும் திருவுளம் மகிழ்ந்து

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.

என்னும் திருப்பாசுரத்தை அவனுக்கீந்து இதனைச் சங்கமேற்றி, பொற்கிழி கொண்டு உன்விருப்பத்தைப் பூர்த்தி செய்க என தருமியும் அப்பாசுரத்தை மன்னனுக்குப் படித் துக்காட்டினன். மன்னனும் பேருவகை கொண்டு இச்செய் யுளை புலவர்களிடம் காட்டிச் சங்கமேற்றுக என்றனன்.

சங்கமேற்றுகையில் கவிச்செருக்கில் மிக்கானாகிய நக்கீ ரன் என்னும் சங்கத்தலைவன் பாட்டில் குற்றங்கூறி அச் செய்யுளை ஏற்கமறுத்துரைத்தனன்.

தருமியும் மனமுடைந்து யாண்டுச் சொக்கேசன்பால் குறையிரந்து, பொருளுக்காகக் கவலாது "பெரும! சிற்றறி வுடைய புலவன் நக்கீரன் உமது பாட்டில் குறைகூறுவனேல் யான்வேண்டும் பரிசுண்டோ" எனவருந்தினன். இறைவனும் புலவனென உருக்கொண்டு சங்க மண்டபம் புக்கு "நம்செய்யு ளுக்குக் 'குறை கூறியவன் யார்' என? நக்கீரன்எழுந்து கூந்த லின் நறியவு முளவோ நீயறியும்பூவே எனக்கூறியதே குற் றம் என மறுத்துரை கூற.

இறைவன் பாடியது

அங்கங் குலுங்க அரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்-சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியை
ஆராயு முள்ளத் தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் பாடியது

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனார்க் கேதுகுலம்
பங்கமறச் சொன்னாற் பழுதாமோ-சங்கை
அரிந்துண்டு வாழ்வோமரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ தில்லை.

இறைவன் கற்றைச் சடையையும் நெற்றிக்கண்ணையும் காட்ட "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் பாட்டில் குற்றம் குற்றமே" என நக்கீரன் சாதிக்க இறைவன் "நீ தொழுநோய் கொண்டு துன்புறுதி" எனச் சபித்தார். நக்கீரனும் "பிழைபொறுத்தருளீர்" எனப்பலவாறு வேண்டினன். கயிலை காணில் தொழுநோய் நீங்குமென் விமோசனங் கூறி இறைவன் மறைந்தனர்.

நக்கீரன் காசி, கேதாரம் முதலிய தலங்களைக் கடந்து கயிலை காணச் செல்கையில் ஆலமரத்தோடு கூடிய தடாகக் கரைகண்டு நீராடி நிழலில் தியானத்திருக்கையில், அம்மரத்தின் இலையொன்று தடாகக்கரையில் வீழ்ந்தது. பாதி நீரிலும் பாதி நிலத்திலுமாகக் கிடக்க, நீரில் வீழ்ந்தபாதி மீனுருவாயும் நிலத்தில் வீழ்ந்தபாதி பறவையுருவாயும் மாறுபட்டிழுக்கக் கண்டு, நக்கீரன் நிட்டை குலைந்து கருத்தை அவ்விணைதச் செயலின்பால் செலுத்தினன். முன்னர் இதுபோல் தியானம் குலைந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரைக் கல்லறையில் அடைத்து வைத்திருந்த பூதம் ஒன்று நக்கீரனையும் தூக்கிச் சென்று அக்கல்லறையில் அடைத்தது.

இவர் ஆயிரவரையும் துன்பம் விளைக்க பலநாளாகக் காத்திருந்த பூதம் நீராடி நியமம் முடித்துவரச் சென்றது. அக்குகையில் அடைபட்டு இதுகாறும் உணவு பெற்று வந்த புலவர்கள், தங்கள் உயிருக்கிறுதிதேடிய நக்கீரனைப்பலவாறு பழித்துரைத்தனர். நக்கீரனும்முருகக்கடவுளை முன்னி, ஆற்றுப்படை கூற முருகப்பெருமான் தோன்றி, பூதத்தைக் கொன்று அனைவருக்கும் ஆருயிரளித்தனர்.

திருமுருகாற்றுப்படையுள் புலம்புரிந்துறைந் செலவுநீ நயந்தனையாயிற்......இன்னே பெறுதிநீ........ விழுமியபெறலரும் பரிசினல்கும் என்று வரும் அடிகளால் ஆற்றுப்படுத்தல் காண்க. திருமுருகாற்றுப்படையும் இங்கு தந்தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நக்கீரதேவர் அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படை.

---

## திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள் போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்(து)
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்(து)
உருள்பூந் தண்தார் புரளுமார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇயஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர்மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப்பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்[டு]
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்(பு)
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டியொண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழியபெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடுஞ் சோலை,
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம் மலிமறுகில் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று

## 2 திருச்சீரலைவாய்

வைந்துதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடாமாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம்வகை அமைபொலம்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவுஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே,
மா இருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திரவிதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே, ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந்தன்றே, ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை, உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசைஅசை இயது
அங்குசம் கடாவ ஒருகை, இருகை [ஒருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க, ஒருகை
தாரொடு பொலிய ஒருகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதாஅன்று

### 3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதுங்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுஉறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவர் ஆக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல்ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் தோன்றும இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளிஇடைத்
தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன், அதாஅன்று

### 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலரஉடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப்பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன், அதாஅன்று;

### 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்,
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன், புகர்இல் சேவலங்
கொடியன், நெடியன் தொடியணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்,
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பலபிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று

## ௬. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவருநிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியினும் கந்துஉடை நிலையினு
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சிபாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளஞ்சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே
ஆண் டாண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெருஞ்சிமையத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர்சொன்மலே!
மங்கையர் கணவ மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்;
மண்டு அமர் கடந்தநின் வென்று ஆடு அகலத்துப்
பரிசிலர் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந; குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்து உடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்துஎன
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ்சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பிற் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரற்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாகநறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துஉடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர் அளைச் செறியக கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர்சோலை மலை கிழவோனே.

நேரிசை வெண்பா

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை.

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன் கைவேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா —முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் — பன்னிருகை
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா —பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சேயணிமுருகாற்றுப்படையைப்
பூசையாய்க் கொண்டே புகல்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாள்தோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 **பல்லாண்டு:—**

*அச்சமு முவகையு மெச்ச மின்றி*
*நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்*
*காலங் கண்ணிய வோம்படை யுளப்பட*
*ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்*
*கால மூன்றொடு கண்ணிய வருமே.* (தொ. சூ. 91

நாள்நிமித்தத்தானும் புள்நிமித்தத்தானும் பிறவற்றி னிமித்தத்தானும் பாடாண்டலைவற்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சிய அச்சமும் அது பிறத்தற்குக் காரணமாகிய (உவகை) அன்பும் இந்நிமித்தங்கள் பிறக்துழி அன்பு நிகழ்த் தினன் ஒருவன் ஒரு பாடாண்டலைவனது வாழ்க்கை நாளிற்கு ஏதம் வருங்கொல் என்றஞ்சி அவற்குத் தீங்கின்றாக என்று ஓம்படை கூறுதலின் காலங்கண்ணிய ஓம்படை என்றார்.

இது உலகத்துத் தோன்றும் வழக்கினது கருத்தினானே மூன்று காலத்தோடும் பொருந்தக் கருது மாற்றான் வரும், மேற்கூறி வருகின்ற பாடாண்டிணை என்றவாறு.

எனவே இவ்வழக்கியல் காலவேற்றுமை பற்றி வேறுபடு மாயின் இப்பொருள்களில் வேறுபடா வென்பர். வேறுபட வருவனவையும் இதன்கண்ணமைக்க.

பாடாண்டலைவற்கு ஏதம்வருங்கொல் என்று அஞ்சிய அச்சம். அவன் பன்னாள் வாழப்பெறின் இன்பத்திற்கு ஊறு வராதெனக் கருதுமாற்றான் ஒருதலை வேட்கையுடைய கைக் கிளைக் குறிப்போ டொத்தலின் பாடாண் பகுதியாயிற்று. எனவே அவன்பல்யாண்டு வாழ்கவென வாழ்த்துதலின் அவற்றை யாண்டு நிலையென்பர்.

வையக மன்னவன் மன்னுக பல்யாண்
டெய்துக என்ப தியாண்டுநிலை யாகும்.

என்னும் பன்னிருபாட்டியல் சூத்திரம் நோக்குக.

இறைவன்பால் அன்பு கொண்டோர் இறைவனை
வாழ்த்திப் பல்லாண்டு கூறுவர்.

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

## சேந்தனூர் அருளிச் செய்த திருப்பல்லாண்டு,

மன்னுக தில்லைவளர்க நம்பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளேபுகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்பல்லாண்டு கூறுதுமே.

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்[மின்
கொண்டுங்கொடுத்துங் குடிகுடியீ சற்காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்தபொருளளவிலாதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்ட நிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னக நெகவூறுமமிர்தினுக் காலநிழற்
பட்டருக் கென்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட்டோலமிட் டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்ப வென்னுயிராண்ட கோவினுக்கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாதகற்பகனாகிக் கரையில்கருணைக்கடல்
பரந்து நிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே.

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக் குழாங்குழாமாய் நின்றுகூத்தாடு
மாவிக்கமுதை யென்னார்வத்தனத் தினையப்பனையொப்பமரர்
பாவிக்கும் பாவகத்தப்புறத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

ஒழிபியல் முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பாராயணத் திரட்டு.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம்.

திருப்பிரமபுரம் — பண் — நட்டபாடை — திருமுறை 1

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமலரான் முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவ னன்றே.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

திருச்சிராப்பள்ளி — பண் — குறிஞ்சி — திருமுறை 1

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென் னுள்ளங் குளிரும்மே.

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே.

திருவண்ணாமலை — பண் — நட்டபாடை — திருமுறை 1

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே.

திருத்தோணிபுரம் பண்—பழந்தக்கராகம் திருமுறை 1

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க விசைபாடு மளியரசே யொளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமைபரிந்தொருகாற் பகராயே.

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

திருப்புள்ளிருக்குவேளூர் பண்—சீகாமரம் திருமுறை 2

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடங்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

திருவாலவாய் பண்—காந்தாரம் திருமுறை 2

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறுஉண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே.

திருக்கேதாரம் பண்—செவ்வழி திருமுறை 2

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்த கில்லா ரலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்துசெற்று நிழற்கிறங்கும் வேழத்தின் வெண்மருப்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே (பிணக்

திருவாலவாய் பண்—கொல்லி திருமுறை 3

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே.

திருச்செங்காட்டங்குடி பண்— பஞ்சமம் திருமுறை 3

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.

பொன்னம்பூங்கழிக்கானற் புணர்துணையோடுடன்வாழும்
அன்னங்கா ளன்றில்கா ளகன்றும்போய் வருவீர்காள்
கன்னவிறோட் சிறுத்தொண்டன் கணபதீச் சரமேய
இன்னமுத னிணையடிக்கீ ழெனதல்ல லுரையீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்.

### திருச்சிற்றம்பலம்

### நமச்சிவாயத் திருப்பதிகம்.

பொது பண்—காந்தாரபஞ்சமம் திருமுறை 4

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

திருக்கச்சியேகம்பம் பண்—காந்தாரம் திருமுறை 4

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.

அடுத்தானையுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

திருவையாறு பண்—காந்தாரம் திருமுறை 4

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான்மக ளொடும்பாடி
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாம லையாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டே னவர்திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்.

கோயில் பண்— கொல்லி திருமுறை 4

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீ
இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமுங்காணப்பெற்[றும்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே. [ருல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்

### திருக்குறுந்தொகை

திருமுறை 5

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொண்டன்று னென்செயுந்
தில்லைமாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

பொது

### திருக்குறுந்தொகை

திருமுறை 5

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

மலையே வந்து விழினு மனிதர்காள்
நிலையி னின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய வீசன் றமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னாமுளோம்
எற்றுக் கோநம னான்முனி வுண்பதே.

கோயில்

### திருத்தாண்டகம்

திருமுறை 6

அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கு மலந்தார்க்கு மருள்செய் வானை
யாரும் புகுவானை யறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருக்காளத்தி.**

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தா னிமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிப்பாற் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றி னுள்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான் (ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

**திருவாரூர்.**

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே.

ஒருவா கிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருவாரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேன் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே.

**திருநெய்த்தானம்.**

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகு மாளலா மென்றுபேசு
மாங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதின்மூன்றும் பொன்ற வன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையனெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யிண்டு
வாசக்குழன் மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் றூநீறாடித்
துதைந்திலங்கு நூன்மார்பன் றொடர கில்லா
நீசர்க் கரியவனெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்யலாமே.

**திருவாவடுதுறை.**

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனேயூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமரரேறே.

மாற்றேனெழுத்தஞ்சு மென்றனாவின்
மறவேன் றிருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வ மெண்ணா நாயே
னெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
மேற்றுணி செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேனடியேனை யஞ்சே லென்னு
யாவடுதண் டுறையுறையு மமர ரேறே.

**திருவாரூர்.**

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பி னின்சுவையைத் தெளிந்த தேறற்
குருமணியைக் குழன்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.

**பொது.**

அப்பனீ யம்மைநீ யைய னுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூ ருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புள்ளிருக்கு வேளூர்.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.

## திருப்புகலூர்.

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்.

திருவெண்ணெய் நல்லூர் பண்—இந்தளம் திருமுறை 7

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெறலாகா வருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனெனலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டத்தொகை பண்—கொல்லிக்கௌவாணம் திருமுறை 7

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் (யேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கடி
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூ ரனாரூரி லம்மானுக் காளே.

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கையானாயர்க் கடியே
னாரூ ரனாரூரி லம்மானுக் காளே.

திருமழபாடி பண்– நட்டராகம் திருமுறை 7

பொன்னார்மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

பண்டே நின்னடியேனடியாரடியார்கட்கெல்லாம் [தேன்
தொண்டே பூண்டொழிந்தேன் றொடராமைத் துரிசறுத்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
அண்டா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே.

திருக்கேதீச்சரம் பண் - நட்டபாடை திருமுறை 7

நத்தார்புடை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துறு நோய்களெடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

கோயில் பண்—குறிஞ்சி திருமுறை 7

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு
மெரியகலுங் கரியபாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

நாடுடைய நாதன்பா னன்றென்றுஞ்
செய்மனமே நம்மைநாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய
சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

திருப்புன்கூர் பண்—தக்கேசி திருமுறை 7

அந்தணாளனுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொலிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.

உ
திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்.

திருப்பெருந்துறை திருச்சதகம் திருமுறை 8

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து (உ)ன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக்கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்து(உ)ன்னைப்போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன்பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள்உத்தமனே

ஆடுகின் றிலை கூத்துடையான் கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின் றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின் றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின் றிலைதெருவுதோ றலறிலைசெய்வ தொன் றறியேனே.

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன்னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ.

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆயசிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

அருளுடைச்சுடரே அளிந்ததோர்கனியே
பெருந்திறல் அருந்தவக்கரசே
பொருளுடைக்கலையே புகழ்ச்சியைக்கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினையுருக்கி உள்ளொளிபெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவண்ணாமலையில் அருளிச்செய்த

# திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும்மாகாள் கிடந்தா யென்னே யென்னே
ஈதே யென்தோழி பரிசேலோ ரெம்பாவாய் 1

பாசம்பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லா
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோ [தோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை [மோ
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.* 3

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
  தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
  போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞானமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
  சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலமிடினு முணராய் உணராய்காண்
  ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
  நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போனதிசை பகரா யின்னம் புலர்ந்தின்றோ
  வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
  வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
  ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
  உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
  தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
  சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
  என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
  ஏழி லியம்ப இயம்பும் வெண்சங் கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
  கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ

வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்னகுறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதவுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங் காணாரழல்போற்
செய்யா வெண்ணீறாடி செல்வர் சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீயாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும்வகை யெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தநற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தியிருஞ் சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப்பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப்புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்ப
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும் [ணியாள்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாமபாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந் திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
  போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
  போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
  போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாமுய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
  போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

## திருப்பொற்சுண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
  முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
  நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
  கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
  யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிரார்க்குப்
  பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
  வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
  குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
  செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தை மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ண மிடித்துநாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதா தென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
  தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
  நாமுமவர் தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
  பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
  காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
  வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந் திலங்கச்
  சோத் தெம்பிரா னென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
  நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
  ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 8

வையக மெல்லா முரலதாக
  மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
  மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
  செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
  ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
  மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
  செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
  பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
  ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர்ச் சிவலோகம் பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவக னாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினருக்
காதியு மந்தமு மாயினருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 20

திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 9

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக்குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத்தா னந்தக்கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க் காரமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணர்க் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழுதாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடை கழியிற்
றிருக்குரா நீழற் கீழ்நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென்
சேந்த னென்னுமென் மெல்லிய லிவளே.

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
இருட் பிழம்பற வெறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செயம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

புவன நாயகனே யகவுயிர்க் கமுதே
பூரண வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீபன்ன காபரணா
அவனி ஞாயிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமாமணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமை தீர்குதற்கே.

திருப்பல்லாண்டு.

திருச்சிற்றம்பலம்.

திருமுறை 9

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திருப்புராணம்.

**விநாயகர்.** திருமுறை 12

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணரிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

**சிவன்.**

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துநின்று
பொற்புட னடனஞ்செய்கின் றபூங்கழல் போற்றிபோற்றி

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகாபோற்றி மறுசமயங் கண்மாளப் [செய்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்
பாதக மனைத்துந்தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

**உமாதேவி.**

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப்புகலியர்கோனமுதுசெயத்திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி.

முருகன்.

மூவிருமுகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்கநின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ்செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி
போற்றி

அருவமு முருவமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதி பிழம்பதோர் மேனியாகக் [டே
கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய.

புன்னெறி யதனிற்செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச்செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடியனாக்கி யிருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்கக் குக்குடம் வாழ்கச் செவ்வே
ளேறிய மஞ்ஞை வாழ்க யானை தன்னணங்குவாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

பொது.

வான்முகில் வழாதுபெய்க வலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்.

### விநாயகர் துதி.

தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

### சுப்பிரமணியர் துதி.

தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன தனதான

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர—னெனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமூ வர்க்கத் தமரரு—மடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி—லிரவாக
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ—தொருநாளே
தித்தித்திசை யொக்கப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கந டிக்கக்கழுதொடு—கழுகாடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குப்பரி வட்டகலைகொடு
    சித்திரப்பவு ரிக்குத் திகுதிகு
    திக்குத்திகு திக்குத் திரிகட மெனவோதும்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
    குக்குக்குகு குக்குக் குகுகுகு
    குத்திப்புதை புகுப் பிடியென—முதுகூகை
கொட்புற்றெழ நட்புற்றவுணரை
    வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
    குத்துப்பட்ட வெற்றிப்பொரவல—பெருமாளே.

தனத்த தானந் தனதன தாதன தனதான
இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும புலியதளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணிமாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனைவோனே
உகந்த பாசங் கயிறொடு தாதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசைமேவிய பெருமாளே.

தன தன்னதான தனதன்ன தான
தன தன்ன தான தனத் தனதான
திருமகளு லாவு மிருபுயமு ராரி
    திருமருக ஞமப் பெருமாள்காண்
செகதலமும வானு மிகுதிபெறு பாடல்
    தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
    மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவிசூழ
    மருவுகதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
    அமரர் பொருத வீரப்பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
    அமலர்குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத தருவினைவிடாத
    இமையவர்குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதிபார
    இருதனவினோதப் பெருமாளே.

அன்புமலர் முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org